கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

ALKI • 31.10.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



எழுபதுகளின் எழுச்சி!



ஷாப்பிங் ஸ்பெஷல்!



“விஜய்யின் ஆதரவை மறக்க முடியாது!”

—உருகும் அசின்


இந்தியாவின்
நாகரிக நங்கையர்கள்
விரும்பி அணிவது VBJ
கொண்டாட்டங்களின்
பேரழகு
பொன்னொளி ததும்பும் இனிய விழாக்காலம். VBJ-யின் புத்தம்புது படைப்புகளால் உங்களை நீங்கள் அலங்கரியுங்கள். உங்கள் முதலீட்டிற்கான உன்னத மதிப்பை உணர்ந்திடுங்கள்.
VBJ வாருங்கள் கொண்டாட்டத்தின் உண்மையான அழகைக் காணுங்கள்.
ஹேப்பி
தீபாவளி
SINCE 1900


கல்கி
அடுத்த இதழ்...
தீபாவளிச் சிறப்பிதழாய்...
சூர்யா ஸ்பெஷல்!
வி.ஐ.பி. விருந்தினர்
வாசகர் தலையங்கம்
பரிசுப் போட்டிகள்
உல்லாசப் பகுதிகள்
டமால்.. டுமீல்...
புதுசாய்... புத்தம் புதுசாய்...
கவிதைத் திருவிழா
கனவு-பல.காட்டல்!
மனம் பூக்கும் அனுபவம்
வாரம் ஒரு மந்திரம்!
சப்பு கொட்டும் சமையல்
இலை போட்டாச்சு!
நியூ லுக் கல்கி
கல்கி ஆன்லைன்
இலவசப் பதிவு!
கல்கி, மங்கையர் மலர், கோகுலம், Gokulam எல்லா இதழ்களையும் உடனடியாகப் படிக்கலாம்!
http://www.kalkionline.com
வாராவாரம் ஆரவாரம்... சனிக்கிழமை கடைகளில்...

விஜய்யின் ஆதரவு!

- உருகும் அசின்


கோடம்பாக்கத்தில் குஷ்பு எது செய்தாலும், சொன்னாலும் சர்ச்சை வெடித்தது ஒரு காலம். அந்த ராசி இப்போது அசினுக்கு. திறமையான நடிகை; அழகாகவும் இருக்கிறார்; எந்தக் கேரக்டர் கொடுத்தாலும் ஸ்கோர் செய்கிறார்... என்ற நல்ல பெயர் இப்போதும் அசினுக்கு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதிக சம்பளம் கேட்கிறார்; வசதிகள் நிறைய செய்து தந்தால்தான் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வருகிறார் என்ற குற்றச்சாட்டுகளும் இருந்து வருகின்றன. தமிழ் நடிகர்கள் யாரும் இலங்கையில் படப்பிடிப்பில் கலந்துகொள்ளக்கூடாது. இலங்கையில் நடக்கும் எந்த ஒரு விழாவுக்கும் போகக்கூடாது என்று நடிகர் சங்கம் உத்தரவு போட்டிருந்தாலும், இலங்கைத் தமிழர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த மருத்துவ முகாமைப் பார்வையிட்டுப் பாராட்டியதும் நெக்குருகிப் பேசியதிலிருந்தே அசினைச் சுற்றி வளைக்க ஆரம்பித்திருக்கிறது சர்ச்சைப் பாம்பு. அதிலும் அவர் கலந்துகொண்டு பாராட்டிய மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்ற பத்து தமிழர்களுக்கு முற்றிலுமாகப் பார்வை பறிபோயிருப்பது சமீபத்திய சர்ச்சை! இதனால் இன்னும் அதிகமாகவே விமர்சிக்கப்படுகிறார் அசின். சமீபத்தில் விஜய்யோடு ஜோடி சேர்ந்து 'காவலன்' படத்தில் நடித்திருக்கிறார்.

'காவலன்' பட ஷூட்டிங் நடக்கும் இடங்களிலெல்லாம் அசினுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டியிருக்கின்றனர் தமிழின உணர்வாளர்கள். மேட்டுப்பாளையத்தில் 'காவலன்' ஷூட்டிங் நடப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு பெரியார் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றனர். இதனால் சங்கடமடைந்த படத்தின் இயக்குநர் சித்திக், ஷூட்டிங் ஸ்பாட்டை கேரளா



* அட்டைப் படம்: ஞானம்

வின் ஒத்தப்பாலம் அருகே மணிச்சேரி கிராமத்துக்கு மாற்றியிருக்கிறார். அங்குள்ள ஜமீன் பங்களாவில் ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கும்போது அங்கும் அசினுக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் பரவவே, பயந்துபோன அசின், பங்களாவைவிட்டு வெளியே வரவே மறுத்திருக்கிறார். இதற்கிடையில் அசின் பெயரில் யாரோ ஒரு புண்ணியவான் போலி வெப்சைட் ஒன்றை ஆரம்பித்து அசின் பேசுவது போலவே பேசி வந்திருக்கிறார். 'என்னோடு லைவ் வாக சாட் பண்ணுங்கள்' என்று அசின் வேண்டுகோள் வைப்பது போல வாசகங்கள் வேறு. இந்தத் தகவல் அறிந்ததும் அசின் டோட்டல் அப்செட். நான் ட்விட்டரிலோ இணையதளத்திலோ இல்லை. எனவே, என் பெயரில் இருக்கும் மோசடி வெப்சைட்டை நம்ப வேண்டாம் என்று அறிவித்து ஆசுவாசமாயிருக்கிறார் அசின். 'காவலன்' படப்பிடிப்பு முழுவதும் முடிந்து பூசணிக்காய் உடைத்தாயிற்று. விஜய்யின் மற்ற படங்களுக்கு இல்லாத அளவுக்கு 'காவலன்' படத்தின் வெளிநாட்டு உரிமை ரூ. 6 கோடிக்கு விற்கப்பட்டிருக்கிறது. கேரள உரிமை மட்டும் ரூ. 1.25 கோடி. இப்படி ஏகத்துக்கு எதிர்பார்ப்புகள் கிளம்பியிருக்கும் நிலையில்



இந்தப் படத்தின் டப்பிங் வேலைகளை முடித்துக் கொண்டு எப்படா மும்பை கிளம்புவோம் என்ற கிலியில் இருக்கிறார் அசின். ஆனாலும், ''இவ்வளவு பிரச்னைகளுக்கு இடையில் விஜய் தந்த ஆதரவை, ஆறுதலை என்னால் மறக்க முடியாது. மனித நேயத்தோடும் சூழலுக்கு ஏற்றவாறும் அவர் நடந்துகொண்டார். அவரும் இயக்குநர் சித்திக்கும் கொடுத்த ஆதரவுதான் என்னை இந்தப் படத்தில் தொடர்ந்து நடிக்க வைத்தது. என்னால் மறக்க முடியாத ஷூட்டிங் அனுபவம் என்றால் அது 'காவலன்' படத்தின் அனுபவங்கள்தான்'' என்கிறார்.

இதற்கிடையில் 'சுறா' படத்தின் நஷ்டத்தை ஈடு செய்யாத விஜய்க்கு 'காவலன்' படத்தில் ஒத்துழைப்புத் தர மாட்டோம் எனத் திரையரங்க உரிமையாளர்கள் கொடி பிடிக்க ஆரம்பித்திருப்பது தனிக்கதை!

- மகிமைராஜன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

● பி.கோபி, கிருஷ்ணகிரி

? தேர்தலில் வெற்றி பெற்றால் மாண வர்களுக்கு இலவசமாக பைக் தருவோம் என்று லாலுபிரசாத் அறிவித்துள்ளாரே!

! சே! கலைஞருக்கு ஒரு ஒரிஜினல் ஐடியா வீணாய்ப் போச்சு! இனி அவர் 'நானோ' காருக்காவது உத்தரவாதம் அளிக்க வேண்டி வரும்!

● எஸ்.ஜெயகாந்தன், புன்செய்புளியம்பட்டி

? முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் ஆலங் குடி வெங்கடாசலம் மர்ம நபர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து...?

! விரோதம், முன் பகை என்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. பட்டப்பகலில் துணிந்துபோய் வெட்ட முடியும் என்கிற தைரியம் எங்கிருந்து வருகிறது? மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை கையில் வைத்திருப்ப வர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

● பி.ராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

? நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக கட் டணம் வசூலிக்கப்படக்கூடாது என்று பள்ளிகளுக்குக் கிடுக்கிப்பிடி போடும் ஹைகோர்ட், தியேட்டர்களில் அதிக டிக் கெட் கட்டணம் வசூலிப்பதை மட்டும் கண் டிப்பதில்லையே?

! பள்ளியும் தியேட்டரும் ஒன்றல்ல. பள்ளி அத்தியாவசியம்; தியேட்டர் கேளிக்கை. பள்ளிக்குச் செலவு செய்தே ஆக வேண்டும். தியேட்டருக்குச் செலவே செய்யாமலும் இருக்க முடியும். ஏழைகளுக்கும் கல்வி சென்று சேரவேண்டும் என்பதால் அதை முறைப்படுத்த உயர்நீதிமன்றம் கிடுக்கிப்பிடி போடுவது அவசியம். வசதியும் ஆர்வமும் இருப்பவர்கள் சினிமாவை அதிக கட்டணம் கொடுத்துப் பார்க்கிறார்கள். மற்றவர்கள் டி.வி.யில் ஒளி பரப்பும் வரை காத்திருக்கிறார் கள்.



* பறந்து சென்றவர்!



* பட்டுக்கொண்டவர்!

லாலு இலவச பை

● மஞ்சுதேவன், நவி மும்பை.

? சென்னை விமான

நிலையத்தில் தம்மைச் சந்திக்க வந்த முதல்வரிடம் பூச்செண்டைப் பெற்றுக் கொண்டு, சிறிது நேரத்திலேயே சோனியாகாந்தி சென்றுவிட்டாராமே?

! இன்னும் இரண்டு நிமிடங்கள் கூட இருந்தால் எங்கே புது கோரிக்கைகள் வந்து விடுமோ என்ற பயமோ என்னவோ!

● எஸ்.பக்கிரிசாமி, புதுச்சேரி ❐

? சீன நாட்டுப் போராளி லியோ ஜியாபோ என்பவருக்கு இவ்வாண்டின் அமைதிக்கான நொபெல் பரிசு வழங்கப்பட்டதை சீன அரசு கேவலமாக விமர்சித்திருக்கிறதே?

! ஜனநாயகப் போராளி ஒருவருக்கு அமைதிக்கான நொபெல் பரிசு கொடுப்பதன் மூலம், தமது எதேச்சாதிகார, இரும்புக்கர ஆட்சியை உலகம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்ற எரிச்சல் சீனாவுக்கு. ஒரு தியானென்மென் எழுச்சியை வேண்டுமானால் அடக்கிவிடலாம். ஜனநாயக தாகம் அதோடு மடிந்து போவதல்ல.

* கண்டனம் செய்பவர்



* முந்திக்கொண்டவர்!



தருவாராமே?

நீங்கள் கேட்டவை - தராசு



* சிரிப்பூட்டுபவர்!

● சு.விடுதலை மலர், இராமநாதபுரம்


? தடை செய்யப்பட்ட சிமி இயக்கத்தைப் போல் பழைமைவாதமும் தீவிரவாதமும் கொண்ட இயக்கம் ஆர்.எஸ்.எஸ். என்று ராகுல் கூறியுள்ளாரே?

! சிமியுடன் ஒப்புநோக்காமல், ஆர்.எஸ்.எஸ்ஸை 'பழைமைவாதமும் தீவிர வாதமும் கொண்ட இயக்கம்' என்று ராகுல் சாடியிருந்தால் பிரச்னை பூதாகார வடிவம் எடுத்திராது. ராகுலுக்கு வலிமை சேர்ந்திருக்கும். ஒப்புநோக்கியதால், இரு தரப்பிலும் அவருக்குக் கணிசமான இழப்பு நேரிடும். ராகுல், அரசியல் அனுபவங்களின் அடிப்படையில் படிப்பினை பெற்றால், அவருக்கும் நாட்டுக்கும் நல்லது.

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? ''எம்.ஜி.ஆர். முதன் முதலாக இருந்த கட்சி காங்கிரஸ். அவரது உண்மைத் தொண்டனாகிய நான் கடைசியாக இருக்கப்போகும் கட்சியும் காங்கிரஸ்தான்'' என திருநாவுக்கரசர் சொல்கிறாரே?

! 'ஆரம்ப காலங்களில் சாமியாராக காவி உடுத்தி ஈ.வெ.ரா. காசியில் சுற்றியிருப்பதால், நான் இனி காவி கட்டி ஹிந்துவாக வாழப் போகிறேன்' என்று கி.வீரமணி சொன்னால் நீங்க விழுந்து விழுந்து சிரிப்பீங்க இல்லே. அது மாதிரி இது ஒரு திருநா ஜோக் ஸார்!



* சிக்கிக்கொண்டவர்



* மனதில் நின்றவர்

●எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர் ★

? வோட்டுக்குப் பணமோ இதர விதமான பரிசுகளோ வாங்குவது தவறு என்பதை மக்கள் உணர்ந்துவிட்டால் உண்மையான ஜனநாயகம் மலரும் என நம்பலாமா?

! நம்பலாம். அந்த அளவு விழிப்புணர்வு பெறும்போது, அதே மக்கள் வேறு பல அநீதிகளையும், அரசியல்வாதிகள், ஆட்சியாளர்களின் அராஜகங்களையும் தட்டிக் கேட்கும் தார்மிக உணர்வைப் பெற்றிருப்பார்கள். அவர்களுடைய வாய்மை வீரம், அரசியலில் பொய்மையைப் பொசுக்கும்.

❒ ரூ.150/ பரிசு பெறுபவர்:
எஸ்.பக்கிரிசாமி, புதுச்சேரி

★ ரூ. 75/ பரிசு பெறுபவர்:
எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்

●என்.வி.ரமணி, சென்னை -92

? ராமரே மறு அவதாரம் எடுத்து வந்தால்கூட அயோத்திப் பிரச்னை தீருமா?!

ஸ்ரீராமர் எதற்காக மறு அவதாரம் எடுக்க வேண்டும்! அவர்தான் ஏற்கெனவே அவதரித்து, நமக்கு வழிகாட்ட முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியிருக்கிறாரே! அவர் காட்டிய சத்திய வழியை எல்லோரும் பின்பற்றினால் பிரச்னை வினாடிப் பொழுதில் தீர்ந்துவிடுமே!

●எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

? எடியூரப்பா அமைச்சரவை பிழைத்துக்கொண்டதே? இனி ஆபத்து இல்லையல்லவா?

! உயர்நீதிமன்றத் தீர்ப்பு குழப்பத்தில் முடிந்தது. அடுத்து மூன்றாவது நீதிபதி மூலம் பெரும்பான்மை தீர்ப்பு எடியூரப்பாவுக்குச் சாதகமாக அமைந்தாலும்கூட, ருசி கண்ட பூனைகள் (அல்லது கொள்ளு தின்ற குதிரைகள்) அவரைச் சும்மாவிடாது!

●மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? நான் மறைந்த பிறகு, என் பேரன்- பேத்திகள் தி.மு.கவைக் காப்பாற்றுவார்கள் என்று கருணாநிதி சொல்லியிருக்கிறாரே?

! படிப்படியாக தி.மு.க. பலவீனப்பட்டு வருவதற்கு இத்தகைய சிந்தனையே காரணம்.

●பா.அச்சுதன், வயலூர்

? சமீபத்தில் ரசித்துப் படித்த மரபுக் கவிதை?

! பழைய கல்கி தீபாவளி மலர்களைப் புரட்டியபோது, கண்ணில் பட்டு, கருத்தில் தங்கிய சௌந்தரா கைலாசத்தின் கவிதைகள். ஒரு சிறந்த மரபுக் கவிஞர் மறைந்துவிட்டார்.

●பா.இராம்பிரசாத், சென்னை-43

? டெஸ்ட் டியூப் குழந்தை மருத்துவ சாதனைக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டதை வாடிகன் கண்டிக்கிறதே?

! குழந்தைப்பேறு என்பது இறைவன் தரும் வரம். பல்லாயிரக்கணக்கான தம்பதியருக்கு அந்த வரத்தை அளித்த டாக்டர் இறைவனாகவே தென்படுகிறார். காலப்போக்கில் வாடிகனின் சில பல கருத்துகள் மாற்றம் கண்டிருக்கின்றன. இதிலும் மாற்றம் வரலாம். கண்டிப்பாகக் கண்டிக்கப்பட வேண்டியது 'குளோனிங்' விஞ்ஞானம்தான். அது பேரபாயங்களை உள்ளடக்கிய அசுரத்தனம். ●

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், KAGQA என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

நாடக நடிகர்,
திரைப்பட நடிகர்,
திரைப்பட தயாரிப்பாளர்,
டைரக்டர்
சிவாஜி கணேசன் அவர்களின்
உயிர்த் தோழர்
கலைமாமணி

எஸ்.ஏ.கண்ணன்

எழுதிய







நாடகம் நடிகர் திலகம்

நான்...

புத்தக வெளியீட்டு விழா

29.10.2010 - வெள்ளிக் கிழமை மாலை சரியாக 6.30 மணி
ஆர்.கே.சுவாமி அரங்கம் (ஆர்.ஆர்.சபா எதிரில்)
மயிலாப்பூர், சென்னை - 600 004.

நூலை வெளியிடுபவர் :
பத்மஸ்ரீ
நல்லி குப்புசாமி செட்டியார்

முதல் பிரதியைப் பெறுபவர் :
முனைவர் கவிதாயினி
தமிழச்சி தங்கபாண்டியன்

வாழ்த்துரை :
கவிஞர் **வாலி**
சிவகுமார்
எம்.என்.ராஜம்
மகேந்திரன் (டைரக்டர்)
வியட்நாம் வீடு **சுந்தரம்**
ராஜேஷ்
சுதாங்கன்

ஏற்புரை : **எஸ்.ஏ.கண்ணன்**
வரவேற்புரை : அல்லயன்ஸ் **ஸ்ரீநிவாஸன்**
தொகுப்புரை : **பி.என்.பரசுராமன்**

அல்லயன்ஸ் நூலின் விலை : ரூ. 350/- வெளியீட்டு விழாவில் : ரூ. 250/-
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
அனைவரும் வருக!

கல்கி ஷோகேஸ்

உம்மிடி பங்காரு ஜுவல்லர்ஸ்

"தங்கம் விலை அதிகரித்துக்கொண்டே போகிறது. என்றாலும், தங்கத்தில் முதலீடு செய்வதுதான் பெஸ்ட்" என்று ஆச்சரியப்படுத்துகிறார் சென்னை உம்மிடி பங்காரு ஜுவல்லரியின் நிர்வாக இயக்குனர் ஜிதேந்திரா.

"தங்கத்தின் விலையில், ஏற்ற இறக்கங்களுக்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக, அமெரிக்காவில் வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை அதிகமானால், அதுகூட உலக மார்க்கெட்டில் தங்கத்தின் விலையை அதிகரிக்கும். எப்படி? அமெரிக்காவின் வேலையில்லாத் திண்டாட்டம், அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பாதிக்கும்; அதனால், டாலர் மதிப்பு குறையும்; உலக வர்த்தகத்தில் டாலரின் மதிப்பு குறைந்தால், தங்கத்தின் விலை அதிகரிக்கும்.

தங்கம்தான் பெஸ்ட் Security!

- ஜிதேந்திரா உம்மிடி VBJ





ஆனால் நீண்ட கால அடிப்படையில் பார்த்தால், விலை அதிகரித்துக் கொண்டுதான் போகிறது என்பது புலப்படும்.

ஆக, பணத்தைத் தங்கத்தில் முதலீடு செய்வது நல்லது. அது பாதுகாப்பானதும் கூட. பணம் தேவைப்படும்போது, உடனடியாகக் கையில் உள்ள தங்கத்தை விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம். அல்லது தங்கத்தை அடமானம் வைத்து உடனடியாகக் கடன் பெறலாம். கையில் தங்கமோ, நகையோ இருந்தால், மனசுக்கு ஒரு தெம்பு இருக்கும்.

நம் நாட்டுக் கலாசார, பாரம்பரியத்தில் மகளுக்குச் சீதனமாக நகைகள் கொடுப்

பதில் தொடங்கி, தங்கத்துக்கு நிறைய சென்டிமென்ட்ஸ் உண்டு. எனவே, மக்கள் தங்கத்துடன் ஓர் உணர்வுபூர்வமான பந்தத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் ஷேர் முதலீடு என்பது அப்படி யல்ல. இந்த கம்பெனியின் ஷேர் விலை ஏறும் என்று தெரிந்தால் நம் சக்திக்கு ஏற்ப வாங்கிப் போடுவோம், அது விலை ஏறினால், விற்றுவிட்டு, லாபத்தைக் கணக்குப் பார்ப்போம். மற்றபடி நோ சென்டிமென்ட்ஸ்'' என்கிற ஜிதேந்திரா,


* ஜிதேந்திரா உம்மிடி

''தங்க நகையை அணிந்துகொள்ளும்போது மனசுக்கு சந்தோஷத்தையும், பெருமையையும் அளிப்பதை மறுக்க முடியுமா? நீங்கள் அடுத்த சில வருடங்களில் அணிந்துகொள்ளப்போகிறீர்கள் என்றால், உங்களுக்கு வேண்டிய நகைகளை, பிடித்த டிஸைனில் வாங்கி அணிந்து மகிழுங்கள். எட்டு வயதாகும் உங்கள் மகளின் திருமணத்துக்காகவோ, வரப்போகிற மருமகளுக்குப் போடுவதற்காகவோ தங்கம் வாங்குகிறீர்கள் என்றால், காசுகளாகவோ, பிஸ்கட்களாகவோ வாங்கி வைத்துவிடுங்கள். காரணம் அவர்கள் வளர்ந்து திருமணத்துக்குத் தயாராகிறபோது என்ன மாதிரியான ஃபேஷன் டிரெண்ட் இருக்கும் என்பது இப்போது தெரியாதே?'' என்கிறார்.



நகை சேமிப்புச் சீட்டுகளுக்கு வரவேற்பு எப்படி உள்ளது?

''மாதாமாதம் சிறுகச் சிறுக தங்க நகை வாங்கும் வழக்கம் இன்னும் மக்கள் மத்தியில் மிகவும் பாப்புலராகவே உள்ளது. எங்களுடைய சிறப்பு நகை சேமிப்புத் திட்டமான தங்க சவரன் முதலீட்டுத் திட்டத்துக்கு அமோக வரவேற்பு. இதில் உங்கள் விருப்பத்துக்கேற்ப இத்தனை கிராம் எனத் தீர்மானித்துக் கொண்டு, மாதாமாதம், நீங்கள் பணம் கட்டும் நாளன்று என்ன விலையோ, அந்த விலையில், அத்தனை கிராமுக்கு உரிய விலையைச் செலுத்தலாம். சீட்டு முடியும் போது, நீங்கள் மொத்தம் எத்தனை கிராமுக்குப் பணம் கட்டி இருக்கிறீர்களோ, அத்தனை கிராம் தங்க நகைகளை, அன்றைய விலை எதுவானாலும், அதுபற்றிக் கவலைப்படாமல் வாங்கிக் கொள்ளலாம். இது மிகவும் புதுமையான சேமிப்புத் திட்டம்'' என்கிறார் ஜிதேந்திரா.

- எஸ். சந்திரமௌலி.



ஆஹா ஆல்பம்

எனக்குத் திருமணம் ஆன புதிது. எங்கள் ஊரான அரியக்குடியில் ஒரு மாதர் சங்கம் தொடங்கப் போகிறோம், அதில் நீங்களும் உறுப்பினர் ஆக வேண்டும் என்று சில பெண்கள் வந்து கேட்டார்கள். நானும் என் வீட்டாரின் அனுமதியுடன் சம்மதம் தெரிவித்தேன்.

மந்திரி கக்கன் வந்து தொடங்கி வைக்கப் போகிறார் என்று ஏற்பாடெல்லாம் பிரமாதமாகச் செய்திருந்தார்கள். அவரோ கதராடை அணிந்து மிகவும் எளிமையாக வந்திருந்தவர், இனிமையாகவும் பழகினார். அவருடனான என் அறிமுகம் எனக்கு எளிமையின் பெருமையை உணர்த்தியது. 1959ல் எடுத்த ஃபோட்டோவை இன்றும் பெருமையுடன் பாதுகாக்கிறேன். கோடு போட்ட சேலை அணிந்திருப்பதுதான் நான்.

- ஆர்.எம். உலகம்மை,
சுப்ரமணியபுரம்

வாசகர்களே!
திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் ஜம்முன்னு எழுதி அனுப்புங்க...

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 'ரசிகர் திலகம்' நானாகத்தான் இருப்பேன். மூன்றாம் வகுப்புப் படிக்கும்போதே சிவாஜியின் படம் குப்பைத் தொட்டியில் இருந்தால்கூட அதனை எடுத்து வந்து என் வீட்டில் பாதுகாப்பேன். என்றாவது ஒருநாள் அவரை நேரில் பார்ப்போமா? என நினைத்ததுண்டு. பலமுறை அவரைச் சந்தித்து ஃபோட்டோ எடுத்துக்கொண்டேன். நானும் என் இரண்டு வயது மகளும் 22 வருடங்களுக்கு முன்பு எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. ஃபோட்டோ எடுத்ததும் நகர முற்பட்ட என்னிடம், ''இன்னும் எடுத்துக்கோ'' என அவரே கூறியதும் மேலும் இரண்டு ஃபோட்டோ எடுத்துக்கொண்டேன். இது எனது வாழ்நாளில் மறக்க முடியாதது.

- என். குப்புசாமி, கோவை



1960ஆம் ஆண்டு அப்போதைய வட ஆற்காடு மாவட்டம் முழுமைக்கும் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டி நடந்தது. இதில் நானும் கலந்துகொண்டு முதல் பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றேன்.

ஆம்பூர் திருவள்ளுவர் மன்றத்தார் திருவள்ளுவர் விழா நடத்திப் பரிசுப் பெற்றவர்களுக்குப் பொற் பதக்கங்களை பாரதிதாசனார் முன்னிலையில் பன்மொழிப்புலவர் தேவநேயப் பாவாணர் திருக்கரங்களால் பரிசளிக்க வைத்தனர். அவர் திருக்கரங்களால் பெற்ற பரிசோடு, அவர்களோடு நான் சேர்ந்து எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம் நீங்கா நினைவாக இன்றுவரை இருந்து வருகிறது. பதக்கம் அணிந்து முதலில் அமர்ந்திருப்பது நான்.

- தா. ஆறுமுகம்,
அம்பூர்பேட்டை



1984ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதே ஜெ.பேரவை என்கிற அமைப்பு தொடங்கப்பட்டது. அதில் பங்கு பெற்றவர்களில் நானும் ஒருவன். ஜெ. பேரவை நடத்தக்கூடாது என எம்.ஜி.ஆர். 1986ல் அறிவித்தார். ஆனால், நாங்கள் பேரவையினைத் தொடர்ந்து நடத்துவோம் என்று தைரியத்துடன் அறிவித்தோம். அந்தச் சூழ்நிலையில், திருப்பூர் தொகுதி நிர்வாகிகளுடன் ஜெ. அவர்களைச் சந்தித்தபோது எடுத்த படம் இது.

- பா.சு.மணிவண்ணன், திருப்பூர்

ஃபோட்டோவுடன்
இடம்பெறும் ஒவ்வொரு
அனுபவத்துக்கும்
பரிசு ரூ.500/-





பளிச் பரிகாரம்

எஸ்.ஆர்.ராஜேஸ்கண்ணன், சேலம்.

17.09.1972ல் பிறந்த எனக்கு நிரந்தர வேலையும் இல்லை; திருமணமும் நடைபெறவில்லை. நல்ல எதிர்காலம் உண்டா? என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?

திருமணம் நடைபெறும். நல்ல வேலையும் கிடைக்கும். தாமதமாக நடந்தாலும் அனைத்தும் நன்றாகவே நடக்கும். செவ்வாய்க் கிழமைதோறும் அருகில் உள்ள முருகன் கோயிலுக்குச் சென்று வழிபடுங்கள்.

ஆர். பார்த்தசாரதி, சென்னை-1.

என் மகள் திவ்யா ஜாதகம் அனுப்பியுள்ளேன். 4.1.1987ல் பிறந்த என் மகளுக்குத் திருமணம் எப்பொழுது நடக்கும். தோஷம் ஏதேனும் உள்ளதா? என்ன பரிகாரம்?

தங்கள் மகள் திவ்யா ஜாதகத்தில் கால சர்ப்ப தோஷமும் நாக தோஷமும் உள்ளது. சுவாமி நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த, கருட தண்டகம் படித்து வரவும். நாக தோஷம் விலக, கருடன் வழிபாடு மிகவும் அவசியம். பெரிய திருவடியைப் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். கும்பகோணம் அருகில் உள்ள நாச்சியார் கோயில் சென்று கல் கருடனுக்கு அமிர்த கலசம் அமுது செய்விக்கவும். கருட பஞ்சாசத் பாராயணம் செய்வதும் நாக தோஷத்தை நிவர்த்தியாக்கும். இந்தப் பரிகாரங்களைச் செய்து வந்தால் 2012ல் திருமணம் நடக்கும்.



உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலா



ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



தோஷத்தால் பாதிக்குமா?

ஏ.சவும்யா, மடிப்பாக்கம்.


மூன்றாம் வகுப்பில் படிக்கும் என் மகளுக்கு நரம்பு தொடர்பான சற்று விசித்திரமான நோய் சமீபத்தில்தான் வந்துள்ளது. கை, கால்களை X போல முறுக்கிக் கொள்கிறாள். சிறிது நேரத்தில் சரியாகி விடுகிறது. ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து முறை இவ்வாறு வருகின்றது. பத்து நொடிகள் வரை துடிதுடித்துப் போகிறாள். பிற நேரங்களில் மற்ற குழந்தைகளைப் போல் சாதாரணமாக இருக்கிறாள். நரம்பியல் நிபுணர்களிடம் சிகிச்சை அளித்து வருகிறோம். எனினும் நோய் குணமாகவில்லை. அவள் ஜாதகத்தைப் பார்த்து எங்களுக்கு வழிகாட்டவும். அவள் பிறந்த தேதி 2-9-2002; இரவு 9.48. ஜாதகம் இணைத்துள்ளேன்.

தங்கள் மகள் ஜாதகத்தில் சில கடும் தோஷங்கள் உள்ளன. ரிஷப லக்னத்துக்கு நன்மை செய்யாத கிரகம் குரு. அஷ்டாமதி குரு 3ல் உச்சம் பெற்றுள்ளது. தற்போது குரு தசையில் குருபுக்தி நடைபெறுகிறது. லக்னத்தில் சனி, ராகுவுடன் மாந்தி, புதனும் செவ்வாயும் அஸ்த்தங்கம் லக்ன பதி 6ல் ஆட்சி எனப் பல கிரகங்கள் பாதகமான நிலையில் உள்ளன.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை தோறும் தேவி பாகவதம் 13 அத்தியாயங்களையும் பாராயணம் செய்யவும். இதை சப்தசதி பாராயணம் என்றும் கூறுவர். ஸ்ரீவித்யா உபாசகர் யாரையாவது கொண்டு இந்தப் பாராயணத்தைச் செய்விக்கவும். ஓம் ப்ரம் மாஸ்த்ராய வித்மஹே ஸ்தம்பின்யைச தீமஹீ தன்னோ பகளாமுகி ப்ரசோதயாத் . என்னும் பகளாமுகி காயத்ரி மந்திரத்தைத் தங்கள் மகள் தினமும் 108 முறை ஜெபிக்க வேண்டும். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெற்றிடலாம். சில ஆண்டுகளில் நோய் பெருமளவு குணமாக வாய்ப்புள்ளது.



கல்கி



2010 அக்டோபர் 31
விக்ருதி ஐப்பசி 14
மலர் : 69
இதழ் : 14

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


அஞ்சா நெஞ்சர் யார்?

மதுரையில் ஜெயலலிதா அழகிரிக்கு எதிராக முழங்கியதை, கூட்டம் ஆரவாரத்துடன் ஆமோதித்திருக்கிறது. முதல்வரின் மகன் என்ற செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு மதுரைப் பகுதியில் அழகிரி நடத்தி வரும் மினி ஆட்சியை அம் மக்கள் எதிர்க்கிறார்கள். தாங்கள் வெளிப்படையாகப் பேச முடியாததை ஜெயலலிதா பேசக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.

மிரட்டல்களுக்கு அஞ்சாமல் கூட்டத்துக்கு வந்து பேசும் தாம்தான் அஞ்சா நெஞ்சம் படைத்தவர் என்றும், தம்மை அச்சுறுத்த முயன்ற அழகிரி அஞ்சா நெஞ்சினர் அல்லர் என்றும் வாதங்களை எடுத்து வைத்துத் தீர்மானமாகப் பேசியிருக்கிறார் ஜெயலலிதா.

இந்த நிகழ்வினால் அழகிரிக்குக் கூடுதலான சிறுமையோ ஜெயலலிதாவுக்குக் கூடுதலான பெருமையோ நிச்சயம் ஏற்பட்டுவிடாது. மிரட்டல்களைப் பொருட்படுத்தாமல் தமது உயிரைப் பணயம் வைத்து மதுரை வந்திருப்பதாக ஜெயலலிதா கூறினாலும், போதுமான அளவு பாதுகாப்புடன்தான் வந்திருப்பார். அடுத்த தி.மு.க. கூட்டத்தில் அவருக்கு வரிக்கு வரி பதில் சொல்லி, அவரது கடந்தகால - நிகழ்காலத் தவறுகளைப் பட்டியலிட்டு, தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களையும் நடத்தி 'கணக்கை நேராக்க' முற்படுவார்கள். இதில் துளியும் சந்தேகம் இல்லை. அழகிரி பேரில் ஜெயலலிதா சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு எவ்வளவு வலிமை இருக்கிறதோ, அதே





அளவு வலிமை ஜெயலலிதா பேரில் தி.மு.க.வினர் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகளிலும் இருக்கும்.

அப்படியானால் இத்தகைய கூட்டங்களை நடத்துவதன் பயன்தான் என்ன? சம்பந்தப்பட்ட தலைவர்கள் தங்கள் பலத்தை நிரூபித்துவிட்டதாக நினைத்து மகிழ்கிறார்கள். பாதிக்குப் பாதி பணத்துக்காகவும் ஓரளவுக்குக் கட்சி அபிமானத்தினாலும் கூடுகிற கூட்டம் மகிழ்ச்சியோடு கைதட்டிவிட்டுக் கலைந்து போய் விடுகிறது. அரசியல் சூழலோ அல்லது மக்கள் நலனோ மேம்படுகிறதா என்றால், இல்லை!

தமது பேரில் உள்ள வழக்கு விசாரணைகளைத் தாமதப்படுத்த ஆவன செய்வது; எதிர்ப்புப் போராட்டங்களை மட்டுமே அரசியல் ஆயுதமாகக் கொள்வது; உட்கட்சி ஜனநாயகத்தை மதியாமை; தனிநபர் வழிபாட்டை ஏற்பது, விரும்புவது போன்ற ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் அஞ்சா நெஞ்சத்தின் அறிகுறிகள் என்று ஏற்பதற்கில்லை.


தார்மிக நெறிகளை மதித்து, மக்கள் நலனுக்காக மட்டுமே முடிவுகளை எடுத்துச் செயல்படுத்துவதுதான் அரசியல் வீரம். வரிப்பணத்தையும் பொதுச் சொத்தையும் கண்ணும் கருத்துமாகக் கையாண்டு, உயர்ந்த நிர்வாகம் மூலமும் தரமான கல்வி மூலமும் வளம் பெருக்குவதுதான் நிஜமான துணிவு. ஆம், இன்றைக்கு இத்தகைய சராசரி அரசுப் பொறுப்புகளில் கட்சிக்காரர்களின் தலையீட்டை அனுமதிக்காமல், விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு இயங்கத்தான் மிகுந்த நெஞ்சுரம் தேவைப்படுகிறது.

இந்த நெஞ்சுரம், நேர்மைத் திறன், தமக்கு உண்டு என்பதை ஜெயலலிதா எவ்வாறு நிரூபிக்கப் போகிறார்? தமிழக மக்களின் முன்னேற்றத்துக்காக என்ன திட்டங்களை முன்வைக்கப் போகிறார்? லஞ்ச - ஊழல் தவிர்த்த ஆட்சிக்கு அவரால் உத்தரவாதம் அளிக்க முடியுமா? இலவச ஆசை காட்டாமல் மக்களுக்கு, உழைக்க வாய்ப்பும் காலத்துக்கு ஏற்ற ஊதியமும் கிடைக்கச் செய்ய முடியுமா? இன்று கைதட்டிக் கலைந்து போகும் கூட்டம், நாளை மேற்படி கேள்விகளை எழுப்பும். அவற்றுக்கு ஜெயலலிதாவிடம் நம்பத்தகுந்த உறுதியான பதில்கள் இல்லை எனில், மதுரையில் அவருக்காகக் கூடிய கூட்டமும் அவர் பேசிய பேச்சும் அர்த்தமற்றுப் போகும். ●

கல்கி ஷோகேஸ்

கிரி டிரேடிங்

சாதாரண நாளில் ஐஸ்வர்யம் நம் வீடு தேடி வந்தாலே சந்தோஷம்தான். அதுவும் தீபாவளி அன்று ஐஸ்வர்யத்தை நம் இல்லத்துக்கு வரவேற்க, ஏற்பாடு செய்து தந்தால், சந்தோஷமோ சந்தோஷம்தான். அதைத்தான் செய்கிறது கிரி டிரேடிங் ஏஜென்ஸி.




● ஸ்ரீநிவாசன்

''தீபாவளி அன்று லக்ஷ்மி குபேர பூஜை செய்வது சகலவிதமான செல்வங்களையும் நம்மிடம் சேர்க்கும். இந்த வருடத்திலிருந்தாவது இனி எல்லா இல்லங்களிலும் இந்த லக்ஷ்மி குபேர பூஜையை எல்லோரும் பக்தி சிரத்தையுடன் செய்து சகலவிதமான வளங்களையும் பெற்று மகிழ்ச்சியாக வாழுங்கள்'' எனும் கிரி டிரேடிங் உரிமையாளர் டி.எஸ். ஸ்ரீநிவாசன், ''இந்தப் பூஜையைச் செய்யும் முறையை விளக்கிக் கூறும் புத்தகமும், சி. டி.யும், பூஜை செய்வதற்குத் தேவையான காசுகள், எந்திரங்கள், படங்கள் ஆகியவற்றையும் எங்கள் கிரி டிரேடிங் ஏஜென்ஸியின் எல்லாக் கிளைகளிலும் சிறப்பு விற்பனையாகத் தீபாவளிக்காகத் தருகிறோம்'' என்கிறார்.

தேடி வரும் ஐஸ்வர்யம்!


''குபேரனுக்குக் காது மந்தம் என்பதால், குபேர பூஜையை புஷ்பங்கள் கொண்டு செய்யக் கூடாது. அதனாலேயே காசுகள் கொண்டு பூஜை செய்ய வேண்டும். அப்போதுதான் காசுகளின் ஒலி, குபேரன் காதில் பட்டு அவர் லக்ஷ்மி தேவியிடம் நமக்காகச் சிபாரிசு செய்வார். அதேபோல, அவருக்குப் பல் கிடையாது அதனாலேயே, கேசரி, பஞ்சாமிர்தம், பானகம் போன்ற பிரசாதங்களைத்தான் அவருக்குச் செய்கிறோம். முக்கியமான விஷயம், இந்தப் பூஜையை, தீபாவளி அமாவாசை நாளில் மாலை 3.30 மணி முதல் 5.30 மணிக்குள் செய்ய வேண்டும்'' என்கிறார் ஸ்ரீநிவாசன்.





தீபாவளி ஷாப்பிங் லிஸ்டில் முதல் பொருளாக, வரவு வரம்வேண்டி நிற்கும் அனைவருமே செல்ல வேண்டிய முதல் இடம் கிரி டிரேடிங் ஏஜென்ஸிதான். **- என்.எஸ்.கே.**


மேலும் விவரங்களுக்கு:
கிரி டிரேடிங் பிரைவேட் லிமிடெட்.
website: www.giri.in E.mai: sales@giri.in



ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

No2-A, II Floor, மதுரா என்கிளேவ்,
பழைய எண்-95புதிய எண்.123, பெரம்பூர் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை-600011.
தொலைபேசி எண்: 25511786 Cell: 9444035876



V.சீனிவாசன்
அமைப்பாளர்

(நாமசங்கீர்த்தனத்துடன் ஆன்மீக அன்பர்களை அழைத்துச் செல்லும் சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

①19.01.2011 முதல் 23.01.2011 வரை 5 நாட்கள் கொண்ட **அஹோபிலம், மந்த்ராலயம், ஸ்ரீசைலம், மகாநந்தி.** 2 x 2 டீலக்ஸ் பஸ் 35 இருக்கைகள் கொண்ட பஸ் பயணம், சாப்பாடு இரவு தங்குதல் உட்பட கட்டணம் **Rs.3600/-**

②03.02.2011 முதல் 10.02.2011 வரை 8 நாட்கள் கொண்ட **கர்நாடக மாநில யாத்திரை மேல் கோட்டை, தலைகாவேரி, ஸ்ரீரங்கப்பட்டணம், தர்மஸ்தலா, உடுப்பி, மூகாம்பிகை, கோகர்ணம், சிருங்கேரி, கலசா அன்னபூர்ணா, பேலூர், ஹளேபேடு** ஆகியவை இரயில், பஸ், சாப்பாடு உட்பட கட்டணம் **Rs.5100/-**

③18.02.2011 முதல் 24.02.2011 வரை 5 நாட்கள் கொண்ட **பஞ்ச ஆராமக்ஷேத்திரங்கள் (சிவ ஸ்தலங்கள்)** மற்றும் **விஜயவாடா கனகதுர்கா, சிம்மாசலம், பத்ராசலம், அன்னாவரம், துவாரகா திருமலை.** இரயில், பஸ் சாப்பாடு உட்பட கட்டணம் **Rs.3950/-**

④07.03.2011 முதல் 18.03.2011 வரை 12 நாட்கள் கொண்ட **காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம், சென்னை - காசி- சென்னை** இரயில் பயணம், இதர இடங்களுக்கு 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ் மூலமாக பயணம். **காசி, கயா** ஆகிய இடங்களில் தகுந்த பிராமணர்கள் மூலமாக பித்ரு காரியங்கள் நடத்தி வைக்கப்படும். (கட்டணம் சுமாராக **Rs.6000/-**) மேற்படி யாத்திரைக்கான கட்டணம் **Rs.7100/-**

⑤26.03.2011 முதல் 09.04.2011 வரை 15 நாட்கள் கொண்ட **பஞ்ச துவாரகை யாத்திரை. துவாரகை, டாகூர் துவாரகை, பேட்துவாரகை, ஸ்ரீநாத் துவாரகை, காங்கிரோலி துவாரகை மற்றும் புஷ்கர், ஜெய்ப்பூர், அம்பாஜி சோம்நாத், மாத்ருகயா, மவுண்ட்அபு** ஆகியவை இரயில் பஸ், சாப்பாடு உட்பட கட்டணம் நபர் ஒருவருக்கு **Rs.9600/-**

பங்குபெறுவீர்!!
பாக்கியவான்களாவீர்!!

டிக்கெட் மற்றும் விவரங்களுக்கு அணுகவும்.
அமைப்பாளர் **V.சீனிவாசன்** ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்.

Website: www.srimaruthitravels.com
E.mail: vsrinivasan1952@yahoo.com

மகிழ்வித்து மகிழுங்கள்!

வேதாரண்யம் மகளிர் தொண்டு நிறுவனம்

Kasthurba Gandhi Kanya Gurukulam, Vedaranyam - 614 810. Tamil Nadu, India.

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்திற்கு

(A Tax Exempt, Non Profit Seculer Rural Charitable Women Welfare Organization Since 1946)

உதவுங்கள்

64 ஆண்டுகளாக 2500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தொழிற்கல்வி மற்றும் பல வசதிகளையும் அளித்து சேவை செய்து வருகிறோம். எங்கள் விடுதியில் தங்கியுள்ள 600க்கும் மேற்பட்ட ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு உணவு, உடை, கல்வி, மருத்துவம் மற்றும் அவர்கள் வாழ்வில் முன்னேற அனைத்து வசதிகளையும் செய்து தருகிறோம். 64 ஆண்டுகளாய் அன்னதானம், அபயதானம், வஸ்திரதானம், சாஸ்திரதானம், வித்யாதானம், ஔஷததானம், கன்னியாதானம் ஆகியவற்றை பெண் குழந்தைகளுக்காக நிகழ்த்தி ஆதரித்து, அவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுத்தி தரும் அறநிலையத்திற்கு உதவுங்கள். தினசரி 6 வேளை பிரார்த்தனை, லலிதா சகஸ்ரநாமம் பாயாச நிவேதனம், ''வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' வேதாரண்யேஸ்வரருக்கு ருத்ராபிஷேகம், கற்கண்டு பால் நிவேதனம், பால் அபிஷேகம், வனதுர்க்கைக்கு பால் அபிஷேகம் ஆகியனவும், வாரந்தோறும் மஹாத்மா காந்தியைச் சுட்ட வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மனித நேயம் வளர்க்கும் சர்வமதப் பிரார்த்தனையும் நடைபெறுகிறது. தீபாவளி, பொங்கல், மாட்டுப் பொங்கல், ஸ்ரீ ஜெயந்தி, நவராத்திரி கொலு, கிருஸ்துமஸ், மீலாது விழா, தேசிய நாட்களில் ஊர்வலங்கள், மார்கழி பஜனை ஆகியன கொண்டாடப்படுகின்றன. மேற்படி சேவையில் தங்களால் ஆன பொருள் உதவியைச் செய்து மகிழுமாறு கேட்டுக் கொள்கிறோம்.




நிறுவனர் அமரர்.
சர்தார் வேதரத்னம்
தலைவர்

எவ்வளவு சிறிய தொகையானாலும் ஏற்றுக் கொள்கிறோம்.

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்,

வேதாரண்யம்- 614 810, நாகை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
போன்: (04369) 250011, 250027, 250017. தந்தி: குருகுலம், வேதாரண்யம்.
email: gurukulamvdm@yahoo.co.in, gurukulamvdm@gmail.com
Website: **www.gurukulam.org** - இந்த இணையதளம் மூலமாகவும் நன்கொடை அனுப்பலாம்.

கொடுத்தால் வரும். GIVE AND SPEND GOD WILL SEND.



இணை நிறுவனர்
அமரர்.
பத்மஸ்ரீ வே. அப்பாகுட்டி



ஞாநி

ஜெயலலிதாவின் மதுரை பொதுக் கூட்டம் அவருக்கு மிகப்பெரிய வெற்றி என்பதில் சந்தேகமில்லை. கோவையிலும் திருச்சியிலும் பிரம்மாண்ட கூட்டங்களை நடத்திக் காட்டியதைவிட மதுரையில் நடத்தியது கூடுதல் முக்கியத்துவம் உடையது.

மதுரையில் ஜெயலலிதாவைக் கூட்டம் நடத்த விடாமல் தடுக்க தி.மு.க அரசு பல விதங்களில் முயற்சித்தது. உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து கூட்ட அனுமதியைப் பெற்றார் ஜெயலலிதா. அடுத்தபடியாகக் கொலைமிரட்டல் கடிதங்கள். இவையும் பயன் தரவில்லை.

ஜெயலலிதாவுக்கு மட்டும்தானா கொலைமிரட்டல், எனக்கும்தான் என்று கருணாநிதி தரப்பிலிருந்து ஒரு ஈ மெயில் மிரட்டலும், ஒரு எஸ்.எம்.எஸ். மிரட்டலும் வந்ததாக அறிவிக்கப்பட்டன. மொட்டைக் கடிதம் எழுதுபவர்களைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் கடினம். ஆனால் ஈ மெயில், எஸ்.எம்.எஸ். ஆசாமிகளைப் பிடிப்பது அவ்வளவு கடினமானதல்ல.

பொது வாழ்க்கையில் இருந்தால் எல்லா விதமான மிரட்டல்களும் வருவது சாதாரணம். அயோத்தி தீர்ப்பு பற்றி எழுதியதற்காக, எனக்குக் கூடத்தான் ஆபாசமான கடிதங்களும் ஃபோன் கால்களும் வந்துகொண்டிருக்கின்றன. (பொதுவாக எதையும் பாராட்டுபவர்கள் இவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்வது இல்லை!).

கோல்வால்கர், ஹெட்கவார், வாஜ்பேயி ஆகியோர் படங்களுடன் லெட்டர்ஹெட் போட்டுக் கொண்டு, ஜெய் ஆர்.எஸ்.எஸ். வாழ்க பா.ஜ.க என்ற தலைப்பு முழக்கங்களுடன், திருக்கோயிலூர் இந்து முன்னணி டி.கே.எஸ். ராஜசேகரன் என்று பெயர் விவரம் அச்சிட்ட தாளில் ஒருவர், என்னை முச்சந்தியில் கழுகு மரத்தில் கட்டி பெண்களை வைத்து அடித்தே சாகடிப்பதாக எழுதியிருக்கிறார். ஊருக்குப் பத்துப் பேர் இப்படிப்பட்ட மனப்போக்குடன் இருக்கத்தான் செய்கிறார்கள்.

உண்மையில் கொல்லுகிறவன் மிரட்டுவதே இல்லை. தா.கிருஷ்ணனையோ சங்கரராமனையோ முன்கூட்டி மிரட்டிவிட்டுக் கொன்றதாகத் தெரியவில்லை. மிரட்டல் கடிதங்கள் ஒருவரின் கோபத்துக்கு வடிகால் என்றே நான் நினைக்கிறேன்.

சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணத்தை நிறுத்திவிடலாம் என்று எண்ணும் மூடனைப் போல, தி.மு.க ஆட்சி மதுரை நகரில் ஜெயலலிதா கூட்டத்துக்கு ஃபிளெக்ஸ் போர்டுகள் வைக்க விடாமல் தடுத்தது. போக்குவரத்துக்குப்



பாதிப்பு வருமாம். வருடம் 365 நாளும் மதுரையெங்கும் ஜொலிக்கிற அழகிரி போர்டுகளால் பாதிப்பு வராதா?

இப்படி எந்த மிரட்டலையும் எந்தத் தடையையும் பொருட்படுத்தாமல், மதுரையில் வெற்றிகரமாகக் கூட்டம் நடத்தி முடித்திருக்கும் ஜெயலலிதாவின் 'சாதனை' (ஒரு கூட்டம் நடத்துவதே சாதனையாகி விட்டது என்ன கொடுமை !), அவருக்கு வோட்டுகளையும் கொண்டு வந்து கொட்டுமா என்பது சந்தேகம்தான். கூட்டணிக் கணக்குகளும் இன்றைய கோளாறான தேர்தல் முறையில் முக்கியமானவை.

மதுரைப் பேச்சில் ஜெயலலிதா, தமிழகமெங்கும் தி.மு.க ஆட்சிக்கு எதிராக மக்கள் மத்தியில், வீட்டுக் கூடங்களில், டீக்கடைகளில், அரசு தனியார் அலுவலகங்களில், திரைப்படத் துறையின் படப்பிடிப்புத் தளங்களில், முணுமுணுப்புகளாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் அத்தனை குமுறல்களையும், ஒரு குற்றப் பத்திரிகையாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார். ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் லஞ்சம், காவல் துறையில் லஞ்சம், மணல் கொள்ளை, குவாரி கொள்ளை, சினிமாத் துறையின் மீது இடுக்கிப் பிடி, குடும்ப உறுப்பினர்களின் அராஜகம், ரவுடிகளைக் கொண்டு மிரட்டல் என்று ஜெயலலிதா பட்டியலிட்டிருக்கும் விஷயங்கள் ஏற்கெனவே மக்கள் அனுபவித்து அறிந்துகொண்டிருப்பவைதான்.

இதற்கு மாற்று ஜெயலலிதா அல்ல என்பதுதான் நமக்கு இருக்கும் மிகப்பெரிய சிக்கல். கருணாநிதிக்கு மாற்று ஜெயலலிதா, இவருக்கு மாற்று அவர் என்பது, வீட்டை எரிக்கிற கொள்ளிகளில் எந்தக் கொள்ளி மேல் என்ற ஆராய்ச்சியாகத்தான் முடிகிறது.

திரும்ப ஆட்சியைப் பிடிப்பதற்காக தொடர் கூட்டங்கள் நடத்தி முயற்சிப்பது ஜெயலலிதாவின் அரசியல் தேவை. பதிலுக்கு அதே ஊர்களில் தானும் கூட்டங்கள் நடத்திக் காட்டி, முடிந்தால் மதுரையில் அழகிரி, ஸ்டாலின் இருவரோடும் தோன்றி மக்களைத் தன் பக்கம் திருப்பப் பார்ப்பது கருணாநிதியின் அரசியல் தேவை. இவை எதுவும் மக்களின் தேவைகள் அல்ல.

ஜெயலலிதாவின் மதுரைக் கூட்டத்தால் ஒரே ஒரு மகத்தான பயன் ஏற்படும் என்று நம்புகிறேன். மதுரை மக்கள் அழகிரி பூச்சாண்டி பயத்திலிருந்து விடுதலையாவார்கள். கடந்த மாதம் மதுரையில் பத்து நாட்கள் தங்கியிருந்தபோது, எல்லாத் தட்டு மக்களுடனும்

ஓ பக்கங்கள்





இந்த வார பூச்செண்டு!

இந்த நூற்றாண்டின் பூச்செண்டு இது என்றே சொல்லலாம். சிலியில் சுரங்கத்துக்குள் பூமிக்கு அரை மைல் கீழே சிக்கியவர்களை 68 நாட்கள் கழித்து மீட்ட சிலி அரசுக்கும், அதற்கு உழைத்த அத்தனை பேருக்கும், மன உறுதியுடன் தாக்குப் பிடித்த 33 சுரங்கத் தொழிலாளிகளுக்கும் இ.வா. பூ.

பேசினேன். பேராசிரியர்கள் முதல் தினக்கூலி உழைப் பாளிகள் வரை பரவலாக அழகிரி பற்றிய பயத்துடனே அன்றாட வாழ்க்கையை நடத்துவதாகச் சொன்னார்கள்.

ஜெயலலிதாவின் பிரம்மாண்டமான கூட்டம், அழகிரி என்ற பலூனின் காற்றை இறக்கிவிட்டிருக்கிறது. இனி அழகிரியின் ஆட்கள் பழையபடி மக்களிடமும் கடைக்காரர்களிடமும் அராஜகங்கள் செய்தால், திருப்பி எதிர்த்துக் கேட்கும் துணிச்சலை மக்கள் திரும்பப் பெற இந்தக் கூட்டம் உதவும். இனி அழகிரியும் மதுரையில் அடக்கி வாசித்தே ஆகவேண்டிய கட்டாயம் ஏற்படும். நன்றி ஜெயலலிதா. நன்றி மட்டும் தான். என் வோட்டு உங்களுக்கும் இல்லை.

நம் வோட்டு யாருக்குப் போக வேண்டும் என்பதை மக்களாகிய நாம் தெளிவாக ஆழமாகச் சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும். படித்தவர்கள் மத்தியில், குறிப்பாகப் படித்த இளைஞர்கள் நடுவே இப்போதைய அரசியல் பற்றிப் பெரும் அதிருப்தியும் கூடவே ஏதாவது செய்ய வேண்டுமென்ற ஆர்வமும், ஆனால் என்ன செய்வது என்று தெரியாத குழப்பமும் இருப்பதை நேரடியாக அறிந்து வருகிறேன்.

படித்தவர்கள் அரசியலில் சில மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பாக, நான் தமிழகச் சட்ட மேலவை உருவாக்கத்தைப் பார்க்கிறேன். மேலவை என்பது நேரடியாகத் தேர்தலில் நின்று மக்கள் வாக்குகளைப் பெற முடியாத, அதற்கான செல்வாக்கோ, பணபலமோ, கட்சி அமைப்பு பலமோ இல்லாத, அறிஞர்கள், சாதனையாளர்கள், கல்வியாளர்கள், தொழில் முனைபவர்கள் போன்றோர் பங்கு பெறுவதற்கான அமைப்பு. ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கு, ஆட்சி சிறப்பாக நடப்பதற்கு இவர்களுடைய ஆலோசனைகள், விமர்சனங்கள் ஒலிப்பதற்கான அவையாக மேலவை மாநிலத்திலும் டெல்லியிலும், நம் அரசியல் சட்டத்தை உருவாக்கிய மேதைகளால் வடிவமைக்கப்பட்டன.

நம் அரசியல்வாதிகள் இதைச் சீரழித்து, இதையும் கட்சிக்காரர்கள், விசுவாசிகள் பங்கேற்கும் இடமாக மாற்றினார்கள். தனக்கு எதிரானவர்கள் நிறைய இருக்கும் இடம் என்று கருதி எம்.ஜி.ஆர் மேலவையையே ஒழித்தார். 26 வருடங்கள் கழித்து, கருணாநிதி அதை மீண்டும் கொண்டு வரும்போது, அதையும் தனக்கு எதிர்ப்பு இல்லாத அவையாக இப்போதே உருவாக்கி வைத்துவிட வேண்டுமென்பதற்காக, சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகவே மேலவைத் தேர்தலை நடத்திவிட திட்டமிட்டிருக்கிறார்.

மேலவையை அதன் அசல் நோக்கத்துக்கான இடமாக ஆக்குவதற்கான வாய்ப்பு, படித்தவர்களுக்கு இப்போது வந்திருக்கிறது. மேலவையில் மொத்த இடங்கள் 78. இதில் 26 இடங்களுக்கானவர்களை இப்போதைய எம்.எல்.ஏ.க்கள் தேர்ந்தெடுப்பார்கள். இன்னொரு 26 பேரை உள்ளாட்சி (பஞ்சாயத்து, நகராட்சி முதலியவற்றின்) பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பார்கள். பட்டதாரிகள்

இந்த வாரத் திட்டு!

எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நியமன முறைகேடுகள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அலுவலகம், ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றின் தலையீட்டால் நடந்திருப்பது அம்பலமான பின்னரும், விசாரணை முடியும் வரை பதவியிலிருந்து விலகியிருக்க முன்வராத அமைச்சருக்கு இ.வா.தி.

சார்பில் 7 பேரும் ஆசிரியர்கள் சார்பில் 7 பேரும் தேர்வாக வேண்டும். மீதி 12 பேரை ஆளுநர் நியமிப்பார்.

நாம் செய்யவேண்டியது என்ன?

1.ஆளுநர் எந்த அரசியல்வாதியையும் கட்சி சார்புள்ளவரையும் நியமிக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கடிதம் எழுத வேண்டும். பேராசிரியர் மு.ஆனந்தகிருஷ்ணன், கல்வியாளர் வெ.வசந்தி தேவி போன்ற அறிஞர்களை, கலைஞர்களை, பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணி செய்வோரை நியமிக்க வேண்டும் என்று கோருவோம். please nominate only non party independent intellectuals, artistes and NGO workers to legislative council என்று ஆளுநர், தமிழ்நாடு, ராஜ் பவன், கிண்டி, சென்னை 32க்குக் கடிதம் அனுப்புங்கள்.

2. உள்ளாட்சிகளில் அடிமட்டத்தில் கட்சி அடிப்படையில் தேர்தல் கூடாது என்று ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. எனவே உள்ளாட்சிகளின் பிரதிநிதிகளாக மேலவைக்கு வருவோரும் கட்சி சார்பற்றவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம். பல உள்ளாட்சிகளில் கட்சி சார்பற்றவர்கள் ஜெயித்திருக்கிறார்கள்.

3.ஏழு பட்டதாரி தொகுதிகளிலும் ஏழு ஆசிரியர் தொகுதிகளிலும், கட்சி சார்பற்ற பட்டதாரிகளும் ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்தத் தொகுதிகளில் வாக்களிப்பது யார், போட்டியிடுவது எப்படி என்பதே பலருக்குத் தெரியாது.

ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களில் இருக்கும் பட்டதாரிகளும் ஆசிரியர்களும் ஆட்டோமேட்டிக்காக இதிலும் வாக்களிக்க வகையில்லை. இந்தத் தொகுதிக்கென்று தன்னை வாக்காளராகப் பதிவு செய்துகொண்ட பட்டதாரியும் ஆசிரியரும் மட்டுமே வாக்களிக்கலாம்.

இப்படிப் பதிவு செய்வதற்கான கடைசி நாள் நவம்பர் 6. இன்னும் பத்துப் பதினைந்து நாட்கள்தான் இருக்கின்றன. சென்னையில் மாநகராட்சி அலுவலகம் எதிலும் சென்று பதிவு செய்யலாம். மற்ற ஊர்களில் தாலுகா அலுவலகம். இதுபற்றிய விவரங்கள் www. elections.tn.gov.in>. என்ற இணைய தளத்தில் உள்ளன.

பட்டதாரி ஆசிரியர் தொகுதிகளில் தன்னை வாக்காளராகப் பதிவு செய்யாத ஒவ்வொருவரும் நம் அரசியலை விமர்சிப்பதற்கான தார்மிக அருகதையை இழந்து விடுகிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்வோம்.

4.எம்.எல்.ஏ.க்கள் தேர்ந்தெடுக்கும் 26 மேலவை உறுப்பினர்கள் தவிர இதர 52 உறுப்பினர்கள் அனைவரும் கட்சி சார்ந்தவர்களாக இல்லாமல் பொது மனிதர்களாக அமையும் வாய்ப்பை நாம் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மேலவை சட்டப் பேரவையின் மனசாட்சியாகச் செயல்பட முடியும். இல்லையேல் ஜால்ரா எதிரொலியாக ஆகிவிடும்.

5.தமிழ் நாட்டின் அறிவுஜீவிகள், கலைஞர்கள், படைப்பாளிகள், படித்த இளைஞர்கள் பங்கேற்கும் இடமாக மேலவையை உருவாக்கினால்தான், தடம் புரண்டு போய்க் கொண்டிருக்கும் தமிழக அரசியலில் நெறிகளையும், பொது ஒழுக்கத்தையும், சமூக அக்கறையையும் உயிர்ப்பிக்க முடியும்.

அப்போதுதான் இதை எழுதும் நானும் இதைப் படிக்கும் நீங்களும் நம்மைப் போன்றவர்களும் அரசியலுக்கு வர முடியும். ஜெயலலிதாக்களும் கருணாநிதிகளும் மட்டுமே அரசியலுக்கு வருவதைத் தடுக்க முடியும்.

இந்த வார அதிர்ச்சி!

சராசரியாக ஒவ்வொரு நபரும் ஒரு வருடத்தில் பயன்படுத்தும் பருப்பு தானியங்களின் அளவு : அமெரிக்கா : 889.5 கிலோ, ஐரோப்பா : 557.3 கிலோ, சீனம் : 289.1கிலோ, ஆப்பிரிக்கா: 196.4 கிலோ, இந்தியா: 174.2 கிலோ.

கல்கி ஷோகேஸ்

ஃபெஸ்டிவல் கலெக்ஷன்ஸ்!

ஆரெம்கேவி

புது டிசைன்களில் அனைவருக்கும் திருப்திகரமாக இருக்கும் வகையில் எங்கே சென்று தீபாவளி ஷாப்பிங் செய்வது என்ற ஒருவிதக் குழப்பத்தில் இருந்த காமாட்சியைப் பார்த்துப் பேச பக்கத்து வீட்டு ஃப்ளாட்டிலிருந்து வந்தாள்



பரிமளம்.

பரிமளம்: என்ன காமாட்சி, எப்பவும் கலகலன்னு வளைய வருவ, இன்னிக்கு என்னவோ இப்படி ஒரே கலங்கலா இருக்கியே? என்னாச்சு உனக்கு?

காமாட்சி: அத ஏன் கேட்கற... காலேஜுக்குப் போற எம் பொண்ணு ஸ்வேதா, புதுவிதமான சுடிதார் கலெக்ஷனைக் கண்ணுல பார்த்துதான் தீபாவளிக்கான டிரெஸ் செலக்ஷனே பண்ணிப் பேன்னு அடம் பிடிக்கறா. என்னோட முதல் பொண்ணுக்குத் தலைதீபாவளி. அதனால அவளுக்கும், நல்லதா ஒரு புதுமாதிரியான பட்டுப் புடைவை எடுக்கணும். மாப்பிள்ளைக்கும் நல்லதா ட்ரெண்டியா எடுக்கணும். அதான் நானும் அவரும் சேர்ந்து எந்தக் கடைக்குப் போறதுன்னு தெரியாம விழி



பிதுங்கி நிக்கிறோம்.

பரிமளா : அட, இதுக்குப் போயா இவ்வளவு குழப்பம். இருக்கவே இருக்கே நம்ம ஆரெம்கேவி. நீ, உன் வீட்டுக்காரர், பொண்ணு எல்லோருமா இன்னிக்குச் சாயந்திரமே ஆரெம் கேவிக்குப் போங்க. அங்க கைதேர்ந்த நெசவாளர்கள் கலை நுணுக்கத்தோடு





நெய்ஞ்சிருக்கிற வர்ண ஜாலப் பட்டை ஒரு கை பாருங்க. அந்தக் காலத்துல எப்படி இயற்கை சாயத்தைப் பயன்படுத்தி ஆடைகளில் புகுத்தினாங்களோ, அதே டெக்னிக்கைப் பயன்படுத்தி ஆரெம்கேவி கொண்டு வந்திருக்குற நேச்சுரல் பட்டுப் புடைவைகளைப் பார்த்தீங்கன்னா உன் பொண்ணோட தலை தீபாவளிக்கு வாங்காம விட மாட்டே. காலேஜுக்குப் போற பொண்ணுங்க விரும்பி உடுத்துற லைட் வெயிட் லினோ பட்டுகள் வேற சும்மா சூப்பரா இருக்கு. புடைவைகளோட சேர்ந்து ஸ்ரீநிகா சுடிதாரும் ஜோரா! இந்த வயசுல எனக்கே அதைப் பார்த்துட்டு சுடிதார் போட்டுக்கற ஆசை வந்துடுத்துன்னா பார்த்துக் கோயேன்.

காமாட்சி: எல்லாம் சரி, ஆம்பளைங்களுக்குத் தனியான்னு வேற வேற கடைக்கு ஏறி இறங்கணுமே?

பரிமளம்: நீ வேற, ஆரெம் கேவில ஆம்பளைங்களுக்கும் சூப்பர் சூப்பரா ஃபெஸ்டிவ் கலெக்ஷன்ஸ் ட்ரெஸ்களும் கலக்கலா இருக்கு. எத்னிக் ஆடைகள், கூல் கேசுவல்ஸ், ஸ்மார்ட் ஃபார்மல்ஸ், அவங்க செக்ஷன் தனியா இருக்கு. குட்டீஸ்களுக்கும் கூட தனி கலெக்ஷன் கொண்ட செக்ஷன் இருக்குன்னா பார்த்துக் கோயேன்.

காமாட்சி : ரொம்ப தாங்க்ஸ் பரிமளம். உன்னால எங்களோட இந்தத் தீபாவளி ஷாப்பிங் சூப்பரா அமையப்போகுது. ஆரெம்கேவியின் ஃபெஸ்டிவ் கலெக்ஷனைப் பார்த்துட்டு ஏகப்பட்ட உடைகளை நான் கலெக்ஷன் பண்ண வேண்டியதுதான்.



பாலிடிக்ஸ் பஜார்

என்ன பாவம் செய்தார்?

தி.மு.க.வுக்காகப் பாடுபட்டு மறைந்து போன கழகப் பிரமுகர்களின் நினைவு நாளில் அவர்களின் படத்தைப் போட்டு, அவர்களுக்குப் புகழஞ்சலி செலுத்துகிறது 'முரசொலி' நாளிதழ். 'தியாகம் செய்து மறைந்தவர்களுக்கு உரிய கௌரவம் கொடுப்பதில் தி.மு.க.வுக்கு இணை கிடையாது. ஆனால், ஐம்பது வருட காலம் இயக்கத்துக்குப் பாடுபட்டவரும், முக்குலத்தோர் மத்தியில் தி.மு.க. செல்வாக்குப் பெற காரணமாக இருந்தவரும், ராஜ்ய சபா உறுப்பினராகவும், மாநில அமைச்சராகவும் இருந்து கொலை செய்யப்பட்டு இறந்த தா.கிருஷ்ணன் மறைவு நாளில், அவருடைய படத்தைப் போட்டு 'முரசொலி' மரியாதை செலுத்தாதது எங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது' என்கிறார்கள் தா.கிருஷ்ணன் உறவினர்கள்.

போனால் போகட்டும் போடா

சாதிவாரிக் கணக்கெடுப்புக்கு வலியுறுத்தி கருணாநிதியை மருத்துவர் ராமதாஸ் சந்தித்ததைத் தொடர்ந்து தி.மு.க.வும் பா.ம.க.வும் கூட்டணி அமைத்துவிடும் என்று மீடியா பரபரப்பு கூட்டுகிறது. ஆனால்,

மணல் கொடுக்கும் பலம்

சமீபத்தில் பொதுப்பணித் துறை பணிகள் குறித்த ஆய்வுக்குப் பிறகு பாலாற்றில் இயந்திரம் மூலம் மணல் எடுப்பதை நிறுத்தி, ஆட்கள் மூலம் தான் மணல் எடுக்க வேண்டும் என்று கலைஞர் உத்தரவு போட்டதில் ஆற்றை ஒட்டியுள்ள கிராம மக்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. ''இது ஆற்றை மொட்டையடிப்பதைத் தடுக்கும் நல்ல நடவடிக்கை. அதே சமயம் ஆட்களைப் பயன்படுத்துவதால் லோடிங் வேகம் குறைந்து மணல் எடுத்துச்


தலைநகர் - தலைவலி - நல்லிணக்கம்





சமீபத்தில் சோனியா காந்தி சென்னை வந்தபோது தி.மு.க.வுடனான உறவு குறித்து இன்னமும் உறுதியான சாதகமான கருத்துக்களைத் தெரிவிக்காததால் மீடியாவில் தி.மு.க. - காங்கிரஸ் உறவு குறித்துப் பாதகமான செய்திகள் வருகின்றன. இதுகுறித்து ஒரு தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் வருத்தத்தோடு சொன்னார்:

ஜெயலலிதா இதுபற்றிக் கவலைப்படவில்லையாம். ''போனால் போகட்டும்'' என்று சொல்கிறாராம். ''பா.ம.க. எங்கள் அணியில் இருக்கிறவரை தே.மு.தி.க.வுக்கு எங்களுடன் நெருங்க ஒரு தயக்கம் இருக்கும். மேலும் அதையும் மீறி தே.மு.தி.க. கூட்டணிக்கு வந்தால் எல்லோருக்கும் இடங்கள் ஒதுக்குவதில் எங்களுக்குப் பெரிய சிக்கல் உண்டாகும். பா.ம.க., தி.மு.க. தரப்புக்குப் போனால் வேலை சுலபமாகிவிடும்'' என்கிறார்கள் அ.தி.மு.க. பிரமுகர்கள். இதற்கிடையில் வரும் சட்டமன்றத் தேர்தலில் விஜயகாந்த் போட்டியிடுவது குறித்து சந்தேகம் நிலவுகிறது. ''வரும் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்குமானால் அதை ஏற்கும் வகையில் மனைவி பிரேமலதாவையும் மைத்துனர் சுதீஷையும் தேர்தலில் நிற்க வைப்பார் விஜயகாந்த்'' என்கிறார்கள். அவர் சுற்றிச் சுழன்று பிரசாரத்தில் ஈடுபடுவாராம்!





செல்லும் லாரிகளின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. இதன் காரணமாக ஏற்பட்ட டிமாண்டில் இரண்டு யூனிட் மணல் விலை 2000 ரூபாய் ஏறிவிட்டது'' என்கிறார் மணல் வியாபாரி ஒருவர். மேலும் ஒரு லாரி லோடு மணல் எடுக்க அரசுக்குக் கட்ட வேண்டியது 650 ரூபாய். அதை டி.டி.ஆகக் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட மணல் வியாபாரிகள் டி.டி.கொடுத்தால் அரசு அதிகாரிகள் வாங்குவதில்லை. அரசியல் வாதிகளின் ஆதரவோடு செயல்படும் தனியார் மணல் கொள்ளைக் காரர்களிடம்தான் கூடுதலாக 300 ரூபாய் கொடுத்து ரூ. 650 டி.டி.யை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் சொல்கிறார்களாம். ''இந்த அநியாயத்தைக் கலைஞர் தடுத்து நிறுத்த வேண்டும்'' என்கிறார்கள் தனிப்பட்ட வியாபாரிகள். மணல் கொள்ளைக்காரர்களின் ஆட்கள் ஆற்றுப் படுகையில் கையில் கத்தையாக ரூ. 650 டி.டி.க்களை வைத்துக் கொண்டு விற்கிறார்களாம்.

''தில்லி அரசியல் வித்தியாசமானது. மாலை ஆறு மணிக்கு மேல் நடக்கும் விருந்துகளிலும் தனிப்பட்ட சந்திப்புகளிலும் தான் அரசியல் யுக்திகளும் போக்கு களும் தீர்மானிக்கப்படும். நுட்பமான நல்லிணக்கத்துக்கு மற்றும் தவறான செய்திகளைத் திருத்த, இமேஜை உயர்த்த தனித்திறமை தேவை. கனிமொழியால் இது முடியாது. ராஜாவுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் காரணமாக தயாநிதி மாறன் ஆர்வம் காட்டுவதில்லை. பாலு பதவியில்லையே என்ற வருத்தத்தில் இருக்கிறார். அழகிரி தில்லிக்கு வருவதே குறைவு. இப்படியிருக்க, சோனியாவைச் சுற்றி இருக்கும் காங்கிரஸ் பிரமுகர்களோடு அவ்வப்போது பேசி யார் நல்லிணக்கம் உருவாக்குவது? தலைவர் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். போலீஸ் அதிகாரிகளை அரசியல் விவகாரங்களில் நம்பக் கூடாது.''

- சஞ்சயன்

கல்கி ஷோகேஸ்

சம்பா சாரீஸ்

பிரேமா, இந்திரா, ராதா – மூன்று சகோதரிகளால் 1989ல் தொடங்கப்பட்டது 'சம்பா'.



"கூல் & ரிச் காட்டன்ஸ் எங்க ஸ்பெஷாலிட்டி!"

* பட்டுப் புடைவைகளில் கோத்து வாங்கிய புடைவை, தாழம்பூ கோபுரம், பிள்ளையார் மூக்கு மற்றும் முப்பாக புடைவைகள் மிகப் பிரபலம். இன்றைய காலக்கட்டத்தில் அந்த வகைப் புடைவைகளை நாங்கள் காட்டன் வகைகளில் அறிமுகப்படுத்தி இருக்கிறோம். வேல்தாரி, புட்டா போன்ற டிசைன்களும் உண்டு. தூரத்தி லிருந்து பார்த்தால் பட்டுப் போலவே இருக்கும். இவற்றுக்குக் கஞ்சி போட வேண்டாம். காட்டன் அல்லாத புடைவைகளைத் துவைப்பது போலவே இவற்றையும் துவைக் கலாம். டூ பை டூ எனும் ஸ்பெஷல் நூலில் செய்யப்படுவதால் இது சாத் தியமாகிறது. (விலை : 1500 ரூபாயில் இருந்து ரூபாய் 3000 அளவில் வாங்க முடியும்.)



* இந்த வருடம் தீபாவளிக்கு எங்களது புதிய படைப்பு பனாரஸ் பட்டில் வரும் Brocade design போலவே, காட் டனில் ஜரிகை மற்றும் நூல் பார்டரும், உடல் முழுவதும் நூலினால் வேலைப்பாடுகளும்

"பட்டின் விலை மிக அதிகம். ஒரு வயதுக்கு மேல் நைலான் புடைவைகள் அணிந்தால் கௌர வம் கிடைப்பதில்லை. எனவே, கல்லூரிப் பேராசிரி யைகள், அலுவலகம் செல்லும் பெண்கள் ஆகி யோர் பருத்திப் புடைவைகளை வாங்கவே விரும்பு கிறார்கள். எங்கள் இலக்கு நடுத்தர வர்க்கப் பெண் கள்தான். கொடுக்கும் காசுக்கேற்ற பொருள் கிடைக்க வேண்டும் என்ற அவர்களின் விருப் பத்தை நாங்கள் பூர்த்தி செய்கிறோம். இங்கு விற்கும் புடைவைகளை வெறும் 'காட்டன் புடைவைகள்' என்று பொதுப்படையாகப் பேசி விட முடியாது. இவற்றில் பல வித்தியாசமான, புதுமையான அம்சங்களும் உள்ளன.



அமைந்த புடைவைகள்தான். இவை மெலிதாகவும் ஆனால் பார்க்க வெகு அழகாகவும் இருக்கும். எல்லோரும் உடுத்த முடியும் விலை : ரூ.1500 முதல் 2500 வரை.

✱ 'ரிச் லுக் வேண்டாம்' என்று சொல்பவர்களுக்கு தினமும் கல்லூரிக்கோ, அலுவலகத்துக்கோ கட்டிச் செல்லும்படியான சிம்பிள் புடைவைகளை நாங்களே டிசைன் செய்கிறோம். தலைப்பு எளிமையாக இருந்தாலும் பளிச்சென்று



இருக்கும். (விலை: ரூ.600 முதல் 1,500 வரை)

✱ சென்னையில் நாங்கள்தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினோம் என்று கூறும்படியான புடைவையும் உண்டு. வாழை நார் (பூத்தொடுக்கும் அதே வாழை நார்தான்), மூங்கில் மற்றும் காட்டன் சில்க் ஆகியவற்றின் கலவை





யில் உருவாகும் இந்தப் புடைவையில் 'வெஜிடபிள் சாயங்கள்' பயன்படுத்தப்படுகின்றன. மற்ற புடைவைகள் போலவே இவற்றையும் துவைக்கலாம். (விலை: ரூ. 800 முதல் 1750 வரை)

✱ ராஜஸ்தானிலிருந்து ஒரிஜினலாக வரவழைக்கும் கோட்டாப் புடைவைகள் மிகவும் எடை குறைந்தவை. கொஞ்சம் மெல்லிசாக இருப்பதால் குறைந்த வயது கொண்டவர்களுக்கு அதிகம் பொருந்தும்.

✱ காட்டன்களில் பலவித டிசைன்களை நாங்களே எம்பிராய்டரி செய்து தருகிறோம். 3000 ரூபாயிலிருந்து இவற்றை வாங்கிக் கொள்ளலாம்.

✱ கை மற்றும் முதுகுப் பகுதிகளில் எம்பிராய்டரி செய்த ரவிக்கைத் துணிகளையும், பிரிண்ட் மற்றும் Brocade ரவிக்கைத் துணிகளையும் விற்பனை செய்கிறோம். விலை: ரூ. 80 முதல் 350 வரை.

✱ காந்தா எம்பிராய்டரி செய்த காட்டன் சேலைகள் மற்றும் குர்த்தி துணிகள் இளம் நங்கையருக்கு ஏற்ப உள்ளன.

✱ இந்த வருடம் நாங்கள் சல்வார் செட்டில் பிரிண்ட் மற்றும் எம்பிராய்டரி kalamkari துணியில் patchwork செய்துள்ளோம். இவை காலேஜ் மங்கையர் மற்றும் அலுவலகம் செல்லும் பெண்களுக்கு ஏற்றதாய் இருக்கும். விலை: ரூ. 600 முதல் 1500 வரை.

மேலும் விவரங்களுக்கு:

சம்பா, # 5, 3வது தெரு, அபிராமபுரம், சென்னை - 18, போன்: 044-2499 6907

மொபைல் : 9444996907 email:paturrd@gmail.com

சாத்தியமாகுமா ஒலிம்பிக் கனவு?

எங்கே சொதப்பலாகி நாட்டின் மானத்தை வாங்கிவிடுமோ என்கிற பயத்தோடு ஆரம்பமான காமன்வெல்த் போட்டியின் முடிவு இப்படி திசைதிரும்பும் என்று யாருமே எண்ணிப்பார்த்திருக்க முடியாது. ஆய் ஊய் என்று ஆர்ப்பாட்டம் பண்ணின அத்தனை பேரும் இறுதியில் போட்டியின் கோலாகலமான வெற்றியில் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள். லஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்ற அத்தனையும் பின்னுக்குத் தள்ளப்பட்டு போட்டி நடந்த 12 நாளும் தில்லி ஜேஜே என்று இருந்தது. அத்தனைக்கும் காரணம், இந்திய விளையாட்டு வீரர்களும் இந்திய ரசிகர்களும்தான். அரசியல்வாதிகள் செய்த கொடும்பாவம் இவர்களால்தான் தீர்த்துவைக்கப்பட்டது.





போட்டியின் கௌரவத்துக்காக கல்மாடியை விட்டுவைத்திருந்த மத்திய அரசு போட்டி முடிந்த மறுநிமிடம் அவரை ஓரங்கட்டியது. கல்மாடியின் துணை இல்லாமல் பதக்கம் பெற்ற இந்திய வீரர்கள் பிரதமரையும் சோனியாவையும் சந்தித்தார்கள். விளையாட்டு வீரர்களை முன்னிலைப்படுத்தாததால்தான் இன்றுவரை விளையாட்டில் நமக்கு ஒரு மோட்சம் இல்லை. இப்போதாவது திருந்துங்கள் என்று பொட்டில் அடித்துச் சொல்லியிருக்கிறது தில்லி காமன்வெல்த் கேம்ஸ்.


* கல்மாடி

அடுத்தமாதம் சீனாவில் ஏசியன் கேம்ஸ் நடக்கவுள்ளது. தெற்காசிய விளையாட்டுப் போட்டி போல இது இந்தியாவின் பேட்டை அல்ல. இங்கு சீனர்களையும் கொரியர்களையும் ஏன் இரான், தாய்லாந்து வீரர்களையும் சமாளிப்பதே பெரும்பாடாகி விடும். காமன்வெல்த் போட்டி நடந்த அடுத்த மாதமே ஏசியன் கேம்ஸ் நடக்கவுள்ளதால் பதக்கம் வாங்கிய குஷியில் இந்திய அணியின் பதக்க எண்ணிக்கையை உயர்த்த வீரர்கள் மேலும் மெனக்கெடுவார்கள் என்று பரிபூரணமாக நம்பலாம். ஒருவேளை, ஏசியன் கேம்ஸில் முதல் ஐந்து இடங்களுக்குள் நுழையவும் இந்தியாவுக்கு வாய்ப்புக் கிட்டலாம். ஆனால் தம்முனைப்பில் மட்டுமே நீண்ட நாள் ஒருவரால் செயலாற்றிக் கொண்டிருக்க முடியாது. சரியான ஊக்கமும் தரமான பயிற்சி முறைகளும்தான்





ச.ந.கண்ணன்

இந்திய விளையாட்டின் இப்போதைய அவசரத் தேவையாக இருக்கிறது.

காமன்வெல்த் போட்டியில் இந்தியா சார்பாக அதிகப் பதக்கம் வாங்கியவர்கள், ஹரியானா வீரர்கள். இவர்களில் பாதிப்பேர் கிராமத்திலிருந்து கிளம்பியவர்கள். காமன்வெல்த்தில் தங்கப் வென்றதற்கு ஊக்கத்தொகையாக 20 லட்சம் வழங்கப்பட்டாலும் இதற்கு முன்புவரை இவர்களை எந்த அரசும் சீந்தியது கிடையாது. ஆனால், சொந்த முயற்சியில் முன்னுக்கு வந்தவர்களைத்தான் இப்போது ஆளாளுக்குச் சொந்தம் கொண்டாடுகிறார்கள். காமன்வெல்த் வரலாற்றில் இந்திய அணி இதுவரை இத்தனை தங்கப்பதக்கங்களும் இரண்டாவது இடமும் பெற்றது கிடையாது. 'இந்தியாவில் இத்தனை திறமை இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை. திரும்பிய பக்கமெல்லாம் அவர்கள்தான் பெரிய சவாலை ஏற்படுத்தினார்கள்' என்று இந்தியாவால் நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்ட கனடா நாட்டு வீரர்கள் இந்திய அணியின் வளர்ச்சி கண்டு பிரமிக்கிறார்கள்.

விழித்துக்கொள்ள இதுதான் சரியான நேரம். எந்தப் பெரிய வசதியும் ஏற்படுத்திக் கொடுக்காமல், கூடவே இருந்து தட்டிக் கொடுக்காமல் உலக அரங்கில் பெரிய கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா போல விளையாட்டு வீரர்களை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினால் நிலைமை என்ன ஆகும் என்று அரசு ஒருமுறை யோசிக்க வேண்டும். மத்தியிலும் மாநிலத்திலும் விளையாட்டுத் துறைக்கென்று தனியாக மந்திரிகள் இருந்தாலும் அது ஒரு சம்பிரதாயப் பதவியாகவே இருந்து வருகிறது. விளையாட்டிலும் வீரர்கள் மீதும் பெரிய அக்கறை செலுத்த முடியாதவர்கள் அதிகாரத்தில் இருப்பதனால்தான் ஒலிம்பிக்கில் ஒரு தங்கம் கிடைத்தால்கூட வாயைப் பிளக்க வேண்டியிருக்கிறது.

இத்தனைக்கு மத்தியிலும் அரிதாக அமையும் ஒருசில நல்ல பயிற்சியாளர்கள், ஒருசில நல்ல நிர்வாகிகள் போன்ற குறைந்த சலுகைகளைக் கொண்டுதான் விளையாட்டு வீரர்களால் அடுத்த படிக்கு ஏறமுடிகிறது. படிப்பிலும் கவனம் செலுத்தமுடியாமல், வேலைக்கும் செல்ல வழியில்லாமல் தம் வாழ்க்கையை விளையாட்டுக்கு ஒப்படைப்பது இந்தியச் சூழலில் தற்கொலைக்குச் சமம். இறக்கி வைக்க முடியாத ஒலிம்பிக் கனவு, தூரத்தில் தெரிகிற சிறுவெளிச்சம் போன்ற ஊமை நம்பிக்கைகளால்தான் இந்திய விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை இனியாவது மாறவேண்டும்.

அகிலன்

அள்ள அள்ளக் குறையாத அனிமேஷன்!

நூறு கோடிக்கு மேல் பட்ஜெட். முற்றிலும் ஹைடெக் டெக்னாலஜி, ஹாலிவுட்டை மிரட்டிய முதல் தமிழ் திரைப்படம். இப்படிப் பாராட்டுகள் எந்திரன் திரைப்படத்துக்கு. ஆனால், ரோபோ என்ற ஒரு எந்திர மனிதன் நூறு மனிதர்களின் திறனுக்குச் சமமாக ஈடுகொடுப்பானா? டிரெய்னில் அடி படாமல், உயிர்த்தெழ முடியுமா?







நிஷாந்த்

கனவிலும், கற்பனையிலும் எட்ட முடியாத ஒரு விஷயம் எப்படி நம் கண் முன் நிழலாய்? இப்படி எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில் அனிமேஷன். இன்றைய இளைய தலைமுறையினருக்கு அனிமேஷன் சிறந்த வேலைவாய்ப்பு மிகுந்த கல்வியாக இருக்கிறது.

இந்த அனிமேஷன் படிப்பு குறித்து எந்திரன் படத்தில் சில முக்கியக் காட்சிகளில் அனிமேட்டராகப் பணிபுரிந்த தனியார் அனிமேஷன் நிறுவனத்தின் நிஷாந்திடம் கேட்டோம்.

''அனிமேஷன் குறித்த விழிப்புணர்வு போதிய அளவு தமிழக மாணவர்கள் மத்தியில் இல்லை. பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளுக்கு எந்தளவுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறதோ அதே அளவுக்கு வேலைவாய்ப்பு கொட்டிக் கிடக்கும் துறை அனிமேஷன்.

திரைப்படத்துறையில் லைட்மேன், எடிட்டிங், சவுண்ட் எஃபெக்ட், காஸ்ட்யூம் டிசைனர், மேக்கப்மேன், ரீ ரெக்கார்டிங், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் இப்படி என்னென்ன விஷயங்கள் இருக்கின்றனவோ அத்தனையும் அனிமேஷனிலும் இருக்கிறது.

ஒரு கார்ட்டூன் படத்தில் ஒரு பொம்மை



சிரிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்த பொம்மை எப்படிச் சிரிக்க வேண்டும். என்ன உடை அணிந்திருக்க வேண்டும். நடை, உடை பாவனை எப்படி இருக்க வேண்டும். எத்தனை அடி நடக்க வேண்டும்... எல்லாமே தீர்மானித்துதான் ஒரு ஐந்து நிமிட அனிமேஷன் படம் தயாரிக்கப்படுகிறது.


இதில் லைட்டிங் அம்சத்தை ஒரு அனிமேட்டர் கவனித்துக்கொண்டால், அந்தப் படம் முழுவதும் அவர் மட்டும்தான் அதற்காகப் பணிபுரிவார். பகல் பொழுது என்றால் அதற்கு லைட்டிங் எப்படி இருக்கும். இரவுப் பொழுதானால், லைட்டிங் எப்படி இருக்கும். இப்படி எல்லா விஷயத்தையும் தீர்மானிப்பது அவர்தான்.

ஐந்து நிமிட அனிமேஷன் படத்தை உருவாக்க குறைந்தபட்சம் ஐந்திலிருந்து பத்துப் பேர் கொண்ட குழு பணியாற்றும். படம் முழுவதும் தயாரித்து நல்ல தரமாக வெளிவருவதற்கு ஒரு வாரத்துக்கு மேலாகும்.''

எப்படி இருக்கிறது வேலைவாய்ப்பு?

''வேலைவாய்ப்பு இருக்கும் அளவுக்குத் திறமையான நபர்கள் இந்தத் துறையில் இல்லை. வடமாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழக மாணவர்கள் எண்ணிக்கை இத்துறையில் குறைவாகவே இருக்கிறது. அனிமேஷன் துறைக்கு வருவதற்குப் பொறியியல் அளவுக்குப் படிக்க வேண்டிய அவசியமில்லை. கொஞ்சம் ஆங்கில அறிவு, பன்னிரெண்டாம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானது. அதற்குப் பிறகு மாயா, சாஃப்ட் இமேஜ், பிளாஷ், எக்ஸ் எஸ்.ஐ. 3டி மேக்ஸ் போன்ற சாஃப்ட்வேர்களில் ஏதாவது ஒன்றில் நீங்கள் நல்ல அறிவு பெற்றிருந்தாலே போதும். அனிமேஷன் துறையில் சாதிக்கலாம்.

நம் நாட்டிலேயே கார்ட்டூன் சேனல்கள் அதிகரித்துவிட்டன. தற்போது ஒளிபரப்பாகும் படங்கள் எல்லாமே வெளிநாடுகளில் இருந்தே தயாரிக்கப்பட்டவை. இதுவே நம் நாட்டில் தயாரித்தால், அன்னியச் செலாவணியும் வேலைவாய்ப்பும் அதிகமாகும். வெளிநாடுகளில் டைரக்ட் ஹோம் என்ற முறையில் அனிமேஷன் படங்கள் பிரபலமாகி







வருகின்றன. அதாவது தனிப்பட்ட பெரிய பெரிய அனிமேஷன் நிறுவனங்கள் தயாரிக்கும் அரைமணி நேரப் படங்கள்தான் இவை. இந்தப் படங்கள் தியேட்டரிலோ, டி.வி.யிலோ ஒளிபரப்பாகாது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களே டி.வி.டி.க்களாக வெளியிடும். கூடிய விரைவில் டைரக்ட் ஹோம் டி.வி.டி.க்கள் இந்தியாவில் பிரபலமாகும். அப்போது அனிமேட்டர்களின் தேவை இன்னும் அதிகரிக்கத்தான் செய்யும்'' என்கிறார் நிஷாந்த்.

''சிறந்த அனிமேட்டராக வேண்டுமானால், ஓரளவு ஓவியத்திறனும், படைப்பாக்கத் திறனும் அவசியம் வேண்டும்.

திறமையான அனிமேட்டர்கள் தொடக்க நிலையிலேயே 25 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக ஊதியம் பெறுகிறார்கள்.

சிறந்த அனிமேட்டராக வேண்டுமானால் ஓரளவு ஓவியத்திறனும், படைப்பாக்கத் திறனும் அவசியம் வேண்டும்.

இதுவே அனுபவமும் படைப்பாற்றலும் இருப்பவர்கள் மாதம் லட்சக்கணக்கில் சம்பாதித்து வருகிறார்கள்.

இதில் முக்கியமானது, தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் பல்வேறு தனியார் மையங்களில் அனிமேஷன் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதில் எது சிறந்த மையங்கள் என்று தேர்ந்தெடுப்பதுதான் மாணவர்கள் முன்னுள்ள சவால்.

பி.எஸ்.சி அனிமேஷன் மூன்றாண்டு பட்டப்படிப்பில் சேர குறைந்தபட்சம் பிளஸ் (படித்திருக்க வேண்டும் எம்.எஸ்.சி அனிமேஷன் படிக்க விரும்புபவர்கள், விஸ்காம் அல்லது ஃபைன் ஆர்ட்ஸ் படிப்பில் பட்டப் படிப்பு முடித்திருக்க வேண்டும்.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் அனிமேஷன் படிக்க வாய்ப்பிருக்கிறது. சென்னையில் அனிமேஷன் படிப்பைக் கற்றுக்கொடுக்கவும், படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பைத் தருவதற்கும் பல் வேறு முன்னணி நிறுவனங்கள் தயாராய் இருக்கின்றன.

வீடியோ கேம்ஸ், வெப் டிசைனிங், கட்டடக்கலை, மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளிலும், அனிமேஷனைத் தவிர்க்க முடியாது. இ- லேர்னிங் தற்போது முக்கியத்துவம் வாய்ந்த துறையாக வளர்ந்து வருகிறது. இத்துறையில் பணியாற்ற கைதேர்ந்த அனிமேட்டர்கள் எப்போதும் தேவைப்படுகிறார்கள்'' என்கிறார் நிஷாந்த்.

கல்கி ஷோகேஸ்

பார்ன் பேபிஸ் லிட்டில் கிட்ஸ்

Born Babies
A CHAIN OF BABY STORES

பை, பையாக கைக்குழந்தைக்கான பொருட்களைத் தூக்கிக்கொண்டு போக வேண்டுமே என்று குழந்தையுடன் வெளியே செல்வதையே தவிர்க்கிறவரா நீங்கள்...? ''கவலையை விடுங்கள்...'' என்கிறார்கள் Born Babies நிறுவனத்தினர். ''எங்கள் 'பிளே யார்ட்' (play yard) டை மடித்து ஒரு பையில் அல்லது கார் டிக்கியில் போட்டு விடலாம். அதில் குழந்தையின் விளையாட்டுச் சாமான்கள், ஃபீடிங் பாட்டில், நாப்கின்கள், கொசு வலை, நாப்கின் மாற்றும் வசதி, குழந்தைக்குத் தூங்கும் வசதி எல்லாமே அதில் உண்டு...'' என்கிறார்கள்.

''அதேபோல் மடக்கும் வசதிகொண்ட த்ரீ-இன்-ஒன் ஸ்ட்ராலரில் (Stroller) ஸ்லீப்பிங், ஸ்லைடிங், ராக்கிங் (தூங்க, சாய்ந்துகொள்ள, ஆட) என்று குழந்தைக்குப் பிடித்த விதத்தில் மாற்றி அமைக்கும் வசதி இருக்கிறது'' என்கிறார்கள் இந்நிறுவனத்தார்.

மிகவும் மிருதுவான பருத்தித் துணியால் நாப்கின்கள், அதுவும் சென்னை போன்ற சூடான இடங்களுக்கு ஏற்றமாதிரி தயாரிக்கிறார்கள்.

''இது டிஸ்போஸ் பண்ணுகிற நாப்கின்கள் இல்லை. பலமுறை துவைத்து உபயோகிக்கலாம்!''



இவர்களது மற்றொரு சிறப்புத் தயாரிப்பு (வைட்நெக்) (wideneck) நிப்பிள் கொண்ட ஃபீடிங் பாட்டில்கள். இவை நச்சுத்தன்மை சிறிதும் இல்லாத ரப்பரால் ஆனவை! குழந்தைக்குத் தாயிடம் தாய்ப்பால் அருந்துவது போன்ற உணர்வுதான் இருக்கும்.

3 வயது வரையிலான குழந்தைகளின் தேவைகள் எல்லாமே இவர்களிடம் உண்டு. குழந்தைகளின் அறிவுத்திறனை வளர்க்கும் விதமான விளையாட்டுச் சாமான்களும் வைத்திருக்கிறார்கள். இன்னிசையோடு இருக்கும் இவற்றில் வண்ணங்களைக் கண்டறிவது, வட்டம், நட்சத்திரம் போன்ற வடிவங்களைப் பொருத்துவது போன்ற சுவையான கேம்ஸ்களும் உண்டு. சென்னையில் நுங்கம்பாக்கம், அண்ணாநகர், வேளச்சேரி கிளைகளைத் தவிர கோவை, கொச்சின், ஹைதராபாத் போன்ற நகரங்களிலும் கிளைகள் இருக்கின்றன.

- பத்மினி பட்டாபிராமன்



மேலும் விவரங்களுக்கு: Coimbatore ☎ 0422-254 1626, 436 6455 Cust. Care No: 98438 88811
Chennai - Nungambakkam ☎ 044-2825 0067; Cust. Care No: 97109 22230; Anna Nagar: ☎ 044- 2616 2225; Cust. Care No: 98419 11120, Velachery: ☎ 044- 2259 1222; Cust. Care No: 95516 98098
Cochin ☎ 0484-235 8818, 403 0220 Cust. Care No: 98951 08686
Hyderabad ☎ 040 40033391 Cust. Care No: 98418 83391

காதல் கேம்பஸ்

6

உனக்கு
உடம்பு சரியில்லையாமே
மாத்திரைகள் எல்லாம்
தயாராகிவிட்டன
உன்னுள்
சுகமாய்க் கரைவதற்கு!

\- சகா

தேர்தல் தோல்வியை சதீஷ் பெருந் தன்மையாக ஏற்றுக் கொண்டதற்கு ஓர் அரசியல் காரணம் இருக்கிறது. ஆனால் காதல் தோல்வியை அதே கண்ணியத்தோடு எதிர் கொள்வானா? அதுவும் தேர்தலில் தன்னைத் தோற்கடித்தவனே, தனது நெஞ்சத்தில் ஆசைத்தீயை வளர்த்தவளை வரித்துக் கொள்கிறான் எனில் அதை சதீஷ் எப்படித் தாங்கிக் கொள்வான்? இதனால் சதீஷுக்கும் உதயகுமாருக்கும் தீராத பகை கருக் கொள்ளுமோ? வன்மம் பெருகிக் குருதி பலி கேட்குமோ? அகிலாவின் மனத்தில் சிந்தனை, கேள்விகளை வரிசையாக்கியது. நான் உதய்யை காதலிக்கிறேன் என்று சொல்லி விட்டு சதீஷின் எதிர்வினையை எதிர் பார்த்து நின்ற கணங்கள்... அவள் வாழ்வில் மீண்டும் ஒரு முறை நிகழ்ந்து விடக்கூடாது என்ற பிரார்த்தனையைக் கோரிய கணங்கள்.

''நான் உதய்யை காதலிக்கிறேன்'' என்று சொன்ன அகிலாவை சதீஷ் அமைதியாகப் பார்த்தான். நொடிகள் நிமிடங்களாயின. மாணவர்கள் - ஆசிரியர்கள், பணியாளர்கள் என்று எவரின் வருகையும் இல்லாமல், சதீஷ், அகிலா இருவர் மட்டுமே நிற்கிற ஒரு நிலப் பகுதியாக மாறி விட்டிருந்தது உயிரியல் துறை. அகிலா, சதீஷின் முகத்தையே பார்த்தாள்.

சதீஷின் உதடுகள் அசைந்தன. சலனமில்லாத நீர்க்கத்தோடு அவன் பேசினான். ''இருந்தாலும் நான் உன்னைக் காதலிக்கிறேன் அகிலா. நான் உனக்காகக் காத்திருப்பேன். எப்போதாவது நீ என்னைத் தேடி வருவாய். இந்த நிமிடத்தில் உன் மீதுள்ள என் காதலின் கணப் பரிமாற்றங்கள் அப்போதும் மாறாமல் இருக்கும். இது சத்தியம். போய் வா'' சதீஷ் இப்படிச் சொல்லிவிட்டு, உயிரியல் துறையின் நீண்ட பாதையில் நடந்து சென்றான். வலதுபுறம் திரும்பும் மரப்படிகளில் ஓசை எழ நடந்து, முதல் மாடியில் உள்ள விலங்கியல் துறையை நோக்கிப் போனான். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அகிலா வாய்விட்டே சொல்லிவிட்டாள். இன்னும் எத்தனை ஆச்சரியங்களை



காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை

எனக்குப் பரிசளிக்கப் போகிறாய் சதீஷ். பணத்தினால் எதையும் வாங்கிவிட முடியும் என்று எண்ணிய ஒரு மூட ஊதாரியாய் உன்னை எனக்குத் தெரியும். இந்தக் கல்லூரியின் எல்லா முடுக்குகளும் கொம்பு சீவிய காளையாய் நின்றிருக்கிறாய். பெண்கள் என்றால் எப்போதும் உனக்கு ருசி கொடுக்கும் பக்கவாத்தியம். ஆனால் நீ எப்போது மேன்மையான காதலனாய் மாறினாய்? உனக்குள் காதல் பூத்த கணத்திலா? இந்த அற்புத ரசவாத மாற்றத்துக்குக் காரணம் நானா? நச்சு முட்கள் விளைந்த நிலத்தில் மணமுள்ள வண்ண மலர்கள் மலர என் பார்வையா காரணம்? கடவுளே உனக்கு என் நன்றி. சதீஷ் என்னை மன்னித்துக்கொள். என்னால் உன்னைக் காதலிக்க முடியாது. இப்போது மட்டுமல்ல எப்போதும். ஏனெனில் என் இதயத்தின் விசாலம் முழுக்க உதய் நிரம்பி வழிகிறான்.

அகிலா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டபடி தூரத்தே வரலாற்றுத்துறை அருகே நின்றிருக்கும் சக தோழர்களை நோக்கித் தளர்வோடு நடந்தாள்.

வரலாற்றுத்துறை வாசலில் நின்று தனது சகாக்களுடன் விவாதித்துக் கொண்டிருந்த உதயகுமாரைப் பார்த்து நின்ற

வே.எழிலரசு



பேராசிரியர் பொன். செல்வகணபதி, ''உதய் தலைவரா தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.'' கரம் பற்றிக் குலுக்கினார். உதய் பணிவுடன் ''நன்றி சார்'' என்றான். ''பலபேரு உன்னை வாழ்த்தியிருப்பாங்க. ஆனால் இவ்வளவு சீக்கிரம் யாரும் கோரிக்கை வெச்சருக்க மாட்டாங்க. அதனால முதல் கோரிக்கையை நான் வைக்கிறேன்.''

உதயகுமாருக்கும் அவனது சகாக்களுக்கும் ஆச்சரியமாக இருந்தது. மாணவனிடம் ஆசிரியரின் கோரிக்கையா?

''சார். சொல்லுங்க. என்னால முடிஞ்சா கண்டிப்பா செஞ்சுடறேன்.''

''உதய், உன்னோட சீனியர்ஸ்லாம் இந்தக் கல்லூரியில் 'தென்றல்'ன்னு ஒரு இலக்கிய அமைப்பு நடத்திக்கிட்டிருந்தாங்க. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கவியரங்கம் நடத்துவாங்க. மாணவர்களோட படைப்புத் திறனுக்கு அது நல்ல வடிகாலா இருந்தது. ஆனால் கடந்த மூணுவருஷமா சில காரணங்களால தென்றல் வீசலை. நீங்க அந்த அமைப்புக்கு உயிர்



கொடுக்கணும்.''

''சார், கண்டிப்பா செஞ்சுடலாம்.''

உடனே ஆனந்த் குறுக்கிட்டு, ''வர்ற வெள்ளிக்கிழமையே தென்றல் தொடக்க விழா வெச்சுடலாம். அப்படியே வெற்றி விழா கவியரங்கம் நடத்திடலாம்.''

பேராசிரியர் ''சரி நான் விடைபெற்றுக்கறேன். இது நீங்க முடிவெடுக்க வேண்டிய விஷயம்.''

பேராசிரியர் புறப்பட்டுச் செல்லும்வரை காத்திருந்து, பின்பு உதய், ''ஆனந்த் வெற்றி விழா நடத்தி, வெற்றிவாய்ப்பை இழந்தவங்க மனசைக் காயப்படுத்தக்கூடாது.

''டியூட்டி நேரத்தில தூங்குறீங்களே... மானேஜர் கேட்டா என்ன பதில் சொல்வீங்க!''
''பதில் சொல்ற அளவுக்கு நான் தூங்க மாட்டேன்!''
- தா.முருகேசன்



அதனால வேறு ஏதாவது தலைப்பு சொல்லு...'' என்றான்.

எட்வின், ''நான் ஒரு ஐடியா சொல்றேன்'' என்று ஆரம்பித்தான். சகாக்கள் அவனையே பார்த்தார்கள். எட்வின் தம் வகுப்புத் தோழி விந்தியா, சீனியர்ஸ் நிஷா, வசுமதி, சாய் லீலா, ஷீலா அலைஸ் ஆகியோரைப் பார்த்தபடி, பெருமிதமாக, ''இப்போ எல்லோருக்கும் சயன்ஸ் மேல ஆர்வம் இருக்கு. அதனால 'ஏவுகணை'-ன்னு வெக்கலாமா?''

ஆனந்த், ''டேய், ஏற்கெனவே உன்பேரு ராக்கெட் எட்வின். அதை ஏவுகணை எட்வின்-னு மாத்திக்கலாம்னு பாக்கறியா?''

உடனே கதிர், 'ஏவுகணைக் கவிஞர் எட்வின்' என்று குரலெழுப்ப எல்லோரும் 'ஓ' போட்டார்கள்.

நிஷா வசுமதியிடம் கேட்டாள். ''ஏவுகணைக் கவிஞர்னா என்னடி?''

''அதுவா இவரு கவிதை வாசிக்க ஆரம்பிச்சதும் சபையில இருக்குற ஆடியன்ஸெல்லாம் கவுண்ட்டவுன் ஆரம்பிச்சுடுவாங்க.''

''எதுக்கு?''

''வேற எதுக்கு? கவிதையை முடிக்கறதுக்குத்தான்.'' கதிர் வசுமதியைப் பார்த்து ''சபாஷ்'' என்றான். வசுமதி கதிரைப் பார்த்து, ''நீ என்கிட்ட கடலை போடாதே'' என்று சொல்லி முறைக்க, கதிர் கோபத்தோடு முகத்தைத் திருப்பிக்கொண்டான். கூட்டம் உற்சாகத் ததும்பலில் எட்வினை அலாக்காகத் தூக்க, நிஷா வாயில் விரல் வைத்தாள்.

''ஏய் விசில் அடிக்காதடி'' என்று அவள் கையை இழுத்தாள், அப்போது வந்து சேர்ந்தாள் அகிலா. நிஷா, அகிலாவை வியப்போடு, ''அகி, இவ்ளோ நேரம் எங்கடி போயிருந்த.''

''சதீஷ் தனியா பேசணும்னு கூப்பிட்டான்.''

''என்ன ஷாக் ஆயிட்டானா?''

அகிலா தலையாட்டினாள்.

''என்ன ஆமாங்கறியா? இல்லங்கறீயா?''

இவர்கள் இரகசியம் பேசுவதைக் கண்டுகொள்ளாமல், உதயகுமார், ''யாராவது வர்ற வெள்ளிக்கிழமை நடக்கப்போற கவியரங்கத்துக்குத் தலைப்பு சொல்லுங்கப்பா'' என்றான்.

நிஷா, வசுமதி இருவரும் அகிலாவிடம் கிசுகிசுப்பதை, தான் கவனிக்கவில்லை

என்பதை தனக்கே நிரூபித்துக்கொள்ள கதிர் ''சங்கார சங்கு'' என்றான்.

உதயகுமார் கதிரிடம், ''நீ கவிதை எழுதுவியா?'' என்று கேட்டான்.

''சே! சே! அதெல்லாம் இவனை மாதிரி கனவுத் தின்னிகள் பண்ற வேலை'' என்று ஆனந்தைக் காட்டிய கதிர், ''நான் படிக்க மட்டும்தான் செய்வேன்'' என்றான்.

''நீ சொன்ன தலைப்புல அரசியல் வந்துடும். அதனால அரசியல் இல்லாத தலைப்பா சொல்லுங்க'' என்ற உதய்யிடம், ''அரசியல் இல்லாம உலகத்துல எதுவுமே இல்லையேப்பா... கவிதையில அரசியல் கூடாதுன்னா எப்படி?'' என்ற கதிரிடம் ''நான் இந்த விளையாட்டுக்கு வரலை'' என்றான் உதய். அப்போது கோபால், ''வசந்த விழா'' என்றான். உதய், கோபாலிடம் ''ஏன் 'வசந்த விழா'ன்னு வெக்கலாம்னு சொல்ற?''

''அந்தத் தலைப்பில் நான் ஒரு கவிதை எழுதியிருக்கேன். அதை அரங்கேற்றம் பண்ணிடலாம்னுதான்.''

''எப்போ எழுதனது? அஞ்சாவது படிக்கும்போதா?'' என்று கமெண்ட் அடித்த ஆனந்தை முறைத்தான் கோபால்.

''நேத்து வந்த ஃபர்ஸ்ட் இயர் பசங்க எல்லாம் நம்மளை சத்தாய்க்கிறானுங்கப்பா'' என்று அலுத்துக் கொண்டான் கோபால். புருஷோத் ஒரு சந்தேகத்தை எழுப்பினான்.

''மச்சி ஏதோ பாட்டு டேன்ஸ்-ன்னா நம்ப பசங்க எனர்ஜி பூஸ்டரோட வருவானுங்க. கவியரங்கம்னா எவன் வருவான்? சொத்த்த்-ன்னு இருக்குமேப்பா.'' உதய் அதை ஆமோதிப்பது போல் தலையாட்டினான். ''எப்படியாவது ஒரு நூறு பேரைக் கூட்டிட்டா போதும் கவியரங்கத்தைச் சிறப்பா நடத்திடலாம்.''

''ஆனாலும் இது கொஞ்சம் ஓவர்தான் கபாலி!''
''எதைச் சொல்றீங்க!''
''லாக்கப் ரூம்ல உங்க பேரை மாட்டி 'in'னு எழுதச் சொல்றது!''
- பம்மல் நாகராஜன்

உடனே கோபால் ''நூறு பேர்தானே நான் கேரண்டி'' என்றான்.

''அதுதான் எப்படி?'' என்று வினவிய ஆனந்தைப் பார்த்து, ''இதுக்குத்தான் எங்கள மாதிரி சீனியர்ஸைக் கேக்கணும்'' என்று காலரைத் தூக்கி விட்டுக்கொண்ட கோபால், தனது மதன சாணக்கிய வியூகத்தைச் சொல்லத் தொடங்கினான்.

எல்லோரும் ஆர்வமாகக் கேட்டனர். 'அட', 'அட', 'அட, என்றனர்.

கோபால் தொடர்ந்தான். ''சிம்பிள்.



ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்லயும் இருக்குற அழகான பொண்ணுங்களா பாத்து கால்ல கையில விழுந்து கவியரங்கத்துக்கு வரவெச்சிடணும். ஒவ்வொரு பொண்ணுக்கும் குறைஞ்சது அஞ்சு விசுவாச நிழலாவது இருக்கும். இதோ இங்கேயே அஞ்சு 'மேகனடிக் ஃபோர்ஸ்' இருக்கு'' என்றான் அகிலாவையும் மற்ற தோழிகளையும் பார்த்தபடி. ''ம்... அப்புறம் மறக்காம பாடனி விஜய் மனோகரியைக் கூப்பிடுங்க. அவ பின்னாலய அஞ்சு பேரு வருவான்.''

''யாரு? நம்ம காலேஜ்லய தாவணி

கட்டிக்கிட்டு வர்ற ஒரே பொண்ணு விஜய் மனோகரிதானேப்பா... அவளுக்கும் ரசிகர் பட்டாளமா?''

''ஆமாம். எப்பப் பார்த்தாலும் ஃபர்ஸ்ட் நைட்ல பால் சொம்போட நுழையற பிளாக் ஒயிட் சினிமா ஹீரோயின் மாதிரி வெக்கப் பட்டுக்கிட்டே இருப்பாளே. அந்த வெக் கத்தைப் பாக்கத்தான் பசங்க பின்னாலய வர்றானுங்க.''

''அப்படியே எங்க டிபார்ட்மெண்ட் வினியைக் கூப்பிடுங்க. அவ ஜீன்ஸில...'' ஜீசஸ் என்று சிலுவைக் குறியிட்டாள் ஷீலா அல்லயஸ்.

''ஜீசஸ் இல்லை ஜீன்ஸ்...'' என்று திருத் திய கோபால், அகிலாவின் வசுமதியின் சிவந்த முகத்தைப் பார்த்து நாக்கைக் கடித்த படி, ''நான் அப்புறமா தனியா சொல் றேன்...''

உதய், கோபாலிடம், ''பி.ஜி. முடிக்கப்போறீங்க. யார்யாருக்கு என்னென்ன ரசனைன்னு தீசிஸ் பண்ணி டுங்க டாக்டர் ஆயிடலாம்'' என்று சொல்லி விட்டு, ''சரி ஒரு உருப்படியான ஐடியா கிடைச்சிடுச்சி. இனி கூட்டம் கூட்டறதைப் பத்திக் கவலை இல்லை. ஆனா தலைப்பை யாரும் சொல்லலையே?''

''நான் சொல்றேன் தலைப்பு'' என்றாள் அகிலா.

எல்லோரும் அகிலாவை எதிர்பார்ப் போடு பார்க்க, அவள் நிதானமாக, தனக்குள் ரசித்து மெல்லச் சொன்னாள் ''காதல் வளா கம்.''

''என்னவாம்? என்னவாம்?''

'காதல் வளாகம்' ஒவ்வொருவரும் சொல்லிப் பார்த்தனர். ஒருமனதாக ஏற்றுக் கொண்டது போல் அனைவரும் கைதட்ட, உதய் அதிகாரபூர்வமாக அறிவித்தான். ''பிரெண்ட்ஸ் வர்ற வெள்ளிக்கிழமை 'தென் றல்' தொடக்க விழா கவியரங்கம் தலைப்பு 'காதல் வளாகம்.''

நிஷா, வசுமதியின் தோளை இடித்தாள். ''காதல் வளாகம்'ன்னா என்னடி அர்த்தம்?''

''காதல் கேம்பஸ்''-ன்னு அர்த்தம்.

''சூப்பர்ப். அப்படிப் போதா ரூட்,'' நிஷா, அகிலாவை இழுத்து அவள் காதோடு சொன்னாள். ''ஏய் முதல் கவிதையை நீதான் படிக்கற. இந்தக் கவிதையிலயாவது, நீ உன் காதலைச் சொல்லிடணும். இந்த முறை யும் சொதப்புன, மவளே உன்னைப் பொலி போட்ருவேன்.''

அகிலா இந்தக் கவிதையிலாவது, நீ உன் காதலைச் சொல்லிடணும். இல்லை உன்னைப் பொலி போட்ருவேன்.

அகிலா அந்தக் கணத்திலேயே தன் காதலை வெளிப்படுத்தக் கூடியதான சொற்களுக்காக மொழியின் வெளிகளில் ஓடத் தொடங்கினாள்.

'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' - என்ற தொடர் நினைவில் ஓர் மின்னலைப் போல் வெளிச்சம் காட்டி, பின்பு வானவில் போல் ஓய் வெடுத்தது. தனக்குள் அவள் அந்தத் தொடரைச் சொல்லிப் பார்த்தாள். ''ஆமாம் திருப்பாணாழ் வாரிலிருந்துதான் நான் தொடங்க வேண்டும்'' என்று முணுமுணுத்தாள். அவளின் மன முணுமுணுப்பு நிஷாவுக்கும் வசுமதிக்கும் தெளிவாகவே கேட்டது.

தனது கவிதைக்கான சொற்கள் வானத் திலிருந்து வந்து இறங்குமோ என்பது போல், அடிவானத்தைப் பார்த்தாள் அகிலா.

பார்வை வானத்தை வருடிச் சற்று கீழிறங்க, விலங்கியல் துறையின் முதல் தளம் தெரிந்தது. அங்கு சதீஷ் நிற்பது தெரிந் தது. சதீஷ் அங்கிருந்தபடி இவர்களையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவன் ஒரு சிகரெட்டை உதட்டில் பொருத்த, அவன் பக்கத்தில் நின்றிருந்த நவீன் தீமூட்டி யால் அதைப் பற்ற வைப்பதும் தெரிந்தது. ஏனோ அகிலாவின் உடலில் ஒரு நடுக்கம் மையம் கொண்டது.

(தொடரும்)

தெய்வ சிந்தனை!



சாதாரணமாக எல்லா ஜனங்களுக்குமே தெய்வ சிந்தனை இருக்கத்தான் வேண்டும். மநுஷ்ய ஜீவன் அந்தப் பெயருக்கு லாயக்காக இருக்க வேண்டுமானால் தனக்கு ஜீவ சக்தியைக் கொடுத்த ஸ்வாமியைச் சிந்தித்து, அவன் அருள் வழிகாட்டுகிற படிதான் ஜீவனம் நடத்த வேண்டும். இந்த (தெய்வ) சிந்தனை நாமே பண்ணுவதாக இருந்தால், நம்முடைய சித்தம் ஓடுகிற தாறு மாறான ஓட்டத்தில் உருப்படியாக ஒன்றும் தேறாது. அது மாத்திரமில்லாமல் நமக்கு ஸ்வாமியைப் பற்றி சொந்த அனுபவமாக என்ன தெரியும்? நமக்குத் தெரியாதவரைப் பற்றி நாம் என்னத்தைச் சிந்திக்க முடியும்? இங்கே, அப்படித் தெரிந்துகொண்ட பெரியவர்கள் பாடிய ஸ்தோத்திரங்கள் - தமிழ் முதலான ப்ரதேச பாஷைகளில் இருக்கிற துதிகளுந்தான் - நமக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட ஓடி வருகின்றன. பல காலமாக அவற்றை, ஸ்வாமியை சொந்தத்தில், நேரில் தெரிந்துகொண்ட எத்தனையோ பேர் சொல்லிச் சொல்லி அவற்றுக்கு தெய்விக சக்தி கூடிக்கொண்டே வந்திருக்கும். அவற்றைச் சொல்வதே, அதாவது 'ஸ்தோத்ர பாராயணம்', 'துதி ஓதுதல்' என்பதே நம்முடைய சித்தத்தை ஸ்வாமியிடம் சேர்த்து வைக்கும்.

நம் தேசம் செய்த பாக்கியம், இம்மாதிரி ஸ்துதிகள் ஒவ்வொரு தெய்வத்தையும் குறித்துக் கணக்கு வழக்கு இல்லாமலிருக்கின்றன. நம் தேசத்திலும் இந்தத் தமிழ்நாட்டில் பிறந்தவர்களின் பாக்கியம் இங்கே தோன்றிய நம் முன்னோர்கள் நம்முடைய தமிழ் பாஷையில் துதிகளை அப்படியே கொட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ஜனங்கள் அவரவரும், தாங்களே படித்துப் பாராயணம் பண்ணலாம். குருமுகமாகக் கற்றுக் கொண்டுதான் பண்ணணும் என்று கண்டிப்பு இல்லை. அநுபவம் கண்ட குரு எடுத்து வைத்துப் பண்ணினால் அது ரொம்ப விசேஷந்தான்; ஸந்தேஹமேயில்லை. ஆனால் அப்படிக் கட்டாயமாக விதி இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

கல்கி ஷோகேஸ்

பளபளக்கும் அழகான, அம்சமான நகைகளை அணிய வேண்டும், அதே சமயம் அது பர்ஸையும் கடிக்கக் கூடாது என்ற ஆசை யாருக்குத்தான் இருக்காது? அப்படி ஆசைப்படும் அனைத்துப் பெண்களுமே, தங்கள் ஆசை தீர நகைகளை வாங்கி, கொண்டாட முதலில் தேர்ந்தெடுப்பது 'ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸ்' கடையைத் தான். கைராசி, கண்ணைக் கவரும் டிஸைன்கள், நல்ல தரம், நம்பிக்கை இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம் "நல்ல நகையைத் தேடி வாங்க... ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸுக்கு நம்பி வாங்க" என்று அழைப்பு விடும் சென்னை தி.நகரில் இருக்கும் 'ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸ்' உரிமையாளர் திரு. நாராயணாவிடம் பேசினோம்...

ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸ்

"எங்க முத்து பிஸினஸ் என்பது எங்க தாத்தா காலத்துல அதாவது, 1900களிலேயே தொடங்கப்பட்டது. எனக்கு என் தாத்தாவின் பெயரை (நாராயணா) சூட்டியதைப் பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன்.

எங்க தாத்தா 1900களிலேயே முத்து வியாபாரத்துக்காக பாம்பேல ஒரு ஆஃபீஸ் போட்டிருந்தார். அப்பவே உலகத்தோட எல்லாப் பகுதிகள்ல இருந்தும் முத்து, பவழம், வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம்னு வந்து இறங்கும். அந்தக் காலத்து அரசக் குடும்பங்களுக்கெல்லாம், நல்முத்து கொடுத்து ராஜ குடும்பத்தினர்களிடம் நல்ல பெயர் எடுத்த எங்க தாத்தாவுக்கு அடுத்தபடியா, அப்பா இந்தப் பிஸினஸ்ல இறங்கினாரு. சின்ன வயசுல பசங்க எல்லாம் பொம்மைகளோட விளையாடுவாங்க. ஆனா, நான் விளையாடியது எல்லாம் முத்துச்சரங்களோடதான். இப்படி வாழ்க்கைல ஒவ்வொரு காலக்கட்டத்திலேயும் என்னோட இரண்டறக் கலந்து விட்டது இந்த முத்து. இந்த முத்து வியாபாரத்துல நான் எத்தனை எத்தனையோ சோதனைகளைச் சந்தித்திருக்கிறேன்.

அது 1969-ம் வருஷம். தனித் தெலுங்கானா



■ குடும்பத்தினருடன்...

முத்தான



இயக்கம் ரொம்பத் தீவிரம் அடைஞ்ச சமயம். ஆந்திராவே கொந்தளிச்சிட்டு இருந்தது.

நாங்க கடை வெச்சிருந்தது ஹைதராபாத்ல. ஆந்திராக் காரங்க யாரும் இங்க தெலுங்கானாவுல இருக்கக்கூடாதுன்னு துரத்துறாங்க. தீ வைச்சுக் கொளுத்துறாங்க. எங்களோடது ஹோல்சேல் கடைங்கிறதால, 90 சதவிகிதம் க்ரெடிட் பிஸினஸ்தான். வெளியிலிருந்து எக்கச்சக்கமான பணம் வர வேண்டியிருந்தது. கடையைத் திறக்குறதும் மூடுறதுமா ஒரு வருஷம் பிரச்னை இழுத்தது. 1970ல ஒரேயடியா கடையை மூடி ஆக வேண்டிய கட்டாயம்.

என்ன செய்ய? எட்டுப் பேர் கொண்ட எங்கக் குடும்பம் ரொம்பக் கஷ்டப்பட்டது. கஷ்டம்னா, வெறுமனே சில வார்த்தைகள்ல அதைச் சொல்லிட முடியாது. நம்பிக்கை மொத்தமும் இழந்து போய், எதிர்காலமே பெரிய இருட்டா தெரிஞ்சது.ஓஹோன்னு வாழ்ந்த குடும்பம். நொடிஞ்சு போய் நின்னோம். ஆனால் வீழ்வது தவறில்லை. வீழ்ந்து கிடப்பதுதான் தவறுன்னு புதிய சக்தியோட புறப்பட்டோம்.

ஏக்கரா கணக்குல இருந்த நிலத்துல பாதியை வித்தோம். மீதியில விவசாயம் செஞ்சோம். ஆனா, கைக்கும் வாய்க்கும்தான் சரியா இருந்தது. ஆனாலும், 'அன்னிக்குச் சாப்பாட்டுக்காவது வழி இருக்கே'னு எங்களை நாங்களே தேத்திக்கிட்டோம். இந்தச் சமயத்துல எங்களை வழிநடத்திக்கிட்டு இருந்த எங்கக் குல தெய்வமான எங்கப்பாவும் காலமானார். ரொம்பவே

> “வீழ்வது தவறில்லை. வீழ்ந்து கிடப்பது தான் தவறுன்னு புதிய சக்தியோட புறப்பட்டோம்!”


திரு.கே.வி.நாராயணா

முத்தல்லவோ!

தத்தளித்துப் போயிட்டோம்.

கும்மிருட்டுச் சூழும்போது, பயப்பட வேண்டாம்; விரைவிலேயே விடியல் ஒண்ணு கிழக்கிலே உதிக்கும்னு பெரிய வங்க சொல்வாங்க இல்லையா? அதுதான் எங்களுக்கும் நடந்தது. எங்க வாழ்க் கைக்கு ஒரு விடிவு காலம் வந்தது. புகை யிலை ரூபத்துல.

அந்த வருஷம் புகையிலை பயிரிட்ட வங்களுக்கு நல்ல லாபம். அடுத்தடுத்து, தொடர்ந்து புகையிலை பயிரிட்டோம். நாலே வருஷத்துல விட்டதைப் பிடிச்சிட் டோம். வித்த இடம் மாதிரி ரெண்டு மடங்கு நிலத்தை வாங்கினோம். திடீர்னு பார்த்தா, நாங்க வாங்கிப் போட்ட நிலத்தோட மதிப்பு உயர ஆரம்பிச்சது. ஒரு ஏக்கர் வெறும் ஆயிரம், ரெண்டா யிரம்னு வாங்கினது... பத்து லட்சம் விலைக்குப் போச்சு. 'கொடுக்கற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டுக் கொடுக் கும்'னு சொல்வாங்களே... அது இது தானான்னு கடவுளுக்கு நன்றி சொன் னோம்.

கிட்டத்தட்ட பதிமூணு வருஷமா வனவாசம் மாதிரி இருந்த எங்களை வளமா வாழ வெச்சது 1983-வது வருஷம் தான்! அதே வருஷத்துல நானும் பெரிய அண்ணனும் சேர்ந்து முத்து வியாபாரத் தைத் திரும்பவும் தொடங்கினோம்!'' என்று சொன்னவர் முகத்தில்தான் எத் தனை பெருமிதம். அதில் தடைக்கற் களையெல்லாம் படிக்கற்களாக்கி சிகரம் ஏறிவிட்ட களைப்பும், களிப்பும் சேர்ந்தே தெரிந்தது.

''ரொம்பப் பெரிய நஷ்டத்தைப் பார்த் துட்டோம். இப்போவாவது, க்ரெடிட் பிஸினஸா இல்லாம, ரெடி கேஷ் வர்ற மாதிரி ஆரம்பிக்கணும்னு முடிவு பண்ணி னோம். எல்லா மாவட்டத் தலைநகரங் களுக்கும் போவோம். அங்க ஸ்டார் ஹோட்டல் எதுன்னு பார்த்து அதுல ஹால் புக் பண்ணி, எக்ஸிபிஷன்ஸ் நடத்துவோம். ஸ்டார் ஹோட் டல்ங்கிறதால, ஹைகிளாஸ் கஸ் டமர்ஸ் மட்டும் தான் வருவாங்க. இந்த முத்துக்கள், கற்களோட மதிப்பும் தெரியும் அவங்களுக்கு.



இப்படி எக்ஸிபிஷன்ஸ் போட்டப் போதான், சென்னை எங்களுக்கு ரொம்ப வும் பிடிச்சுப்போனது. இங்க முத்தும் பவழமும் நல்லா வாங்கினாங்க. நல்ல டிமாண்ட் இருந்தது. இங்கேயே தங்கி, ஆறு மாசம் ஸ்டடி பண்ணினோம். தொடர்ந்து நல்ல வரவேற்பு இருக்கவே, தி.நகர்ல முதல் கடையைத் தொடங்கி னோம்'' என்கிறார்.

''அடுத்தடுத்து ஐந்து கடைகளாக விரிந்த வெற்றியின் ரகசியம் இடைவிடாத உங்களது உழைப்புதானே?'' என்றோம்.

''என்னுடைய உழைப்பு மட்டுமல்ல. இன்ப துன்பம், ஏற்ற இறக்கம், எல்லாச் சூழலிலும் என் கூடவே இருந்து என்னைத் தாங்கி நின்ற என் மனைவி புஷ்பா, மற்றும் அன்பால் அரவணைக்கும் என் குழந்தைகள் முதல் காரணம். வாடிக்கை யாளர்களின் திருப்தி இரண்டாவது கார ணம்.

முத்து, கல் நகைகள் வியாபாரம், வியாபாரிக்கும், வாடிக்கையாளர்களுக் கும் சந்தோஷத்தைக் கொடுக்கிற தொழில். பெண்கள் மனதார வாழ்த்தி பொருளை வாங்கிட்டுப் போற தொழில் இது தான். திருப்தியும், சேவையும் சேர்ந்தாப்ல இருக்கிறதாலதான் கடவுளோட ஆசி யும் இந்தத் தொழில்ல இருக்கு'' என் றார்.



''ஓட்டல் தொழிலிலும் அசத்தறீங்க போலிருக்கே?'' என்றோம்.

''அது ரொம்பத் தற்செயலா தொடங்கினது. என் தங்கையின் கணவரது ஹோட்டல் அது. ஆந்திராவுல இருக்கு. 'ரொம்ப நஷ்டம் ஆகிடுச்சு. வேற யாருக்கும் வித்தா பணம் வருமானு தெரியலை. நீங்க வாங்கினா ஒரு தொகை கிடைக்கும்'னார் தங்கச்சி கணவர்.

'அனுபவம் இல்லாத துறையாச்சே!'னு ரொம்பத் தயங்கினேன். அருணா ஹோட்டல் அதிபர் காளிதாஸ், ராஜ் பேலஸ் அதிபர் ராஜன் எனக்கு நல்ல நண்பர்கள். அவங்க 'பண்ணிடலாம்'னு தைரியம் கொடுத்தாங்க. 'ராஜ் பேலஸ்'காரர், தன்னோட ஹோட்டலுக்கு இன்டீரியர் பண்ற வரையே வெச்சு சூப்பரா இன்டீரியர் பண்ண வெச்சார். ஆந்திராவுல எனக்கு 25 வருஷமா தெரிஞ்ச நண்பர் ஒருத்தரை ஹோட்டலுக்கு இன்சார்ஜா போட்டேன். அவருக்கு இந்த ஃபீல்ட் பத்தி எதுவும் தெரியாது. படிப்பு கம்மி. ஆனா, இப்ப அவருக்குக் கீழ 30 பேர் இருக்காங்க. அருமையா பிஸினஸ் பண்ணிட்டு இருக்கார்.

வருமானம் வருதோ இல்லையோ... நம்பிக்கையான ஆளு... நம்ம காசை எடுக்க மாட்டார்னுதான் அவரை அந்த இடத்துல உட்கார வெச்சேன். ஆனா, அவரு எனக்கு பிஸினஸ் பண்ணிக் கொடுக்கறார். அவ்ளோதான். நம்பிக்கைதான் வாழ்க்கை'' என்று தன் வெற்றியின் ரகசியத்தைப் பகிர்ந்துகொண்டார்.

''பொதுவா, தொழிலதிபர்களுக்கும் ஆன்மிகத்துக்கும் நெருங்கின தொடர்பு இருக்கு. இது எப்படி?''

''ஒருகட்டத்துக்கு மேல போய்ட்டா பணத்துக்கு மரியாதை கிடையாது. இன்னிக்கு என் கையில இருக்குற பணத்தை வெச்சுக்கிட்டே இருக்க முடியாது. நாலு பேருக்குப் பிரிச்சுத் தரத்தான் வேணும். என்கிட்ட இருக்குற சொத்து எதையுமே நான் போகும்போது எடுத்துட்டுப் போக முடியாது. இது புரிஞ்சவங்களுக்கு ஆன்மிகம் மேல நாட்டம் வர்றது இயல்புதான்.

அதிகபட்சமா ஆந்திராவுல என்னோட சொந்த ஊர்ல ஒரு முதியோர் இல்லம் கட்டணும்னு ஆசைப்படுறேன். அதைவிடப் பெரிசா வேற எந்த ஆசையும் இல்ல. மனிதன் சாதிக்க வேண்டிய மிகப் பெரிய சாதனை, தானும் மகிழ்ச்சியாக இருந்து, தன்னைச் சுற்றியுள்ளோரையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதுதான். இரக்கத்தோடு இருப்பதே ஆன்ம திருப்திக்கு வழி வகுக்கும்!'' என்று புன்முறுவலுடன் சொல்லி முடித்த திரு.நாராயணா வார்த்தைகளில்தான் எத்தனை ஜொலிப்பு!

அது நல்முத்துக்களுக்கே உரிய தனிமதிப்பு!

- நளினி சம்பத்குமார்

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்

உங்களின் எதிர்காலம் நன்றாக இருக்கும். ஆடை ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். கடல் கடந்து செல்லும் யோகம் உண்டு. குழந்தைகள் வழியில் சுபகாரியம் கைகூடும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு ஏற்படும். எதிலும் கவனமாக இருக்கவும். வாக்குவாதம் வேண்டாம்.

ரிஷபம்

மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. குடும்ப வாழ்வில் அனுசரித்துப் போகவும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். ராகு / கேது / சனி / குருவை வழிபாடு செய்யவும்.

மிதுனம்

திருமணப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். உற்றார் உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். வீடு வாங்கும் யோகம் கிட்டும். வேலையில் நற்பெயர் ஏற்படும். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். ஆரோக்கியம் பாதிக்காது. பணவசதி குறைவு இருக்காது. சனி / ராகு / கேதுவை வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

கடகம்

வீடு மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படலாம். பொருள் சேர்க்கை உண்டாகும். உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. உடன் பிறந்தவர்கள் மூலம் நற்பெயர் உண்டாகும். வாக்கு வன்மை உண்டாகும். சத்ரு தொல்லை இருக்காது. குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

சிம்மம்

சுபகாரியம் கைகூடி வரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். மனத்தில் ஒருவித பயம் ஏற்படும். வீடு / மனை வாங்க சிறந்த தருணம். மனைவி வழியில் நற்செய்தி வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். ராகு / கேது / சனியை வழிபாடு செய்துவர நன்மை உண்டாகும்.

கன்னி

உடல் நிலையில் கவனம் தேவை. வேலையில் பளு கூடும். கடல் கடந்து செல்லும் பாக்கியம் உண்டாகும். வீடு மாற்றம் செய்யவேண்டி இருக்கும். சுபகாரியம் கைகூடிவரும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. குழந்தைகள் பற்றிய மனக் கவலை தீரும். ராகு / கேது / குரு / சனியை வழிபட நற்பலன் உண்டாகும்.

துலாம்

நற்காரியங்கள் கைகூடும். பணப் பிரச்னை இருக்காது. பூமி மூலம் ஆதாயம் கிட்டும். சுபகாரியம் கூடிவரும். ஊதிய உயர்வு உண்டாகும். வீடு / மனை வாங்க சிறந்த தருணம். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் மூலம் சுபச் செலவு உண்டாகும். சனியை வழிபாடு செய்துவர நன்மைகள் பெருகும்.

மகரம்

திருமண காரியம் கூடிவரும்.கடல் கடந்து செல்லும் வாய்ப்பு தேடி வரும். வேலையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய பணி தேடி வரும். புதிய ஆடை ஆபரணப் பொருள் சேர்க்கை உண்டாகும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். புதிய வீடு, வாகனம் வந்து சேரும். வழக்கு வெற்றி பெறும். சத்ருக்கள் தொல்லை விலகும்.

விருச்சிகம்

எதிலும் கவனமாகச் செயல்பட்டால் விரயத்தைத் தவிர்க்க முடியும். உடல் ஆரோக்கியம் தொல்லை கொடுக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இல்லறவாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வேலைப் பளு அதிகரிக்கும். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். ராகு / கேது / குருவை வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கும்பம்

நண்பர்களை விட்டு விலக நேரிடும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஏற்படும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். கடன் பிரச்னை அதிகரிக்கும். வீடு மாற்றம் ஏற்படும். வழக்கு தாமதம் ஆகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனியை வழிபட நன்மை தரும்.

தனுசு

புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். நீண்ட தூரப் பிரயாணம் தேடி வரும். சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். மனக்குழப்பம் விலகும். புதிய வீடு வாங்கும் யோகம் கிட்டும். பொருளாதாரச் சிக்கல் விலகும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் உண்டாகும். வேலையில் உயர்வு உண்டாகும். ராகு / கேது / சனியை வழிபாடு செய்துவர நன்மை கூடும்.

மீனம்

உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். உற்றார், உறவினர்களால் நற்பலன் ஏற்படும். மனைவி மூலம் ஆதாயம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். எதிர்ப்புகள் விலகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். ஊதிய உயர்வு ஏற்படும். கடன் தொல்லை தீரும். ராகு / கேது / சனி / குருவை வழிபட நற்பலனைத் தரும்.

24.10.2010 முதல் 30.10.2010 வரை **தஞ்சை பரத்வாஜ்**

'ஜன்னல்...' என்று
கவிதையைத் தொடங்கும் முன்
பறந்தோடி விட்டது
ஜன்னலில் வந்தமர்ந்த வண்ணத்துப்பூச்சி.
ஒரு கவிதை எழுதும்
அவகாசம் தந்து அமர முடியாத
வண்ணத்துப்பூச்சி எப்போதும்
அமர்ந்திருக்கிறது இந்தக் கவிதையில்.

- இரா.பூபாலன்

பிரகாசத்திலிருந்து புறப்பட்ட கவிதை!



ஹரித்துவாரிலிருந்து தில்லி வரை

மக்கள் விரைவு ரயிலில் எங்கள் அருகில் இரண்டு பேர்
அவள் சாப்பிட்டுக்கொண்டே இருக்க அவள் உடல் முழுதும்
வெள்ளைத் துணியில் போர்த்தியபடி, காலில் மெட்டி மட்டும்
மனைவி என அறிந்துகொள்ளப் போதுமானதாக.
வயதாகியும் அனுபவம் எங்களுக்குப் போதவில்லை.
ரொட்டி ஆம்லெட்டில் முட்டை இருக்குமா தெரியவில்லை.
கைவசம் இருந்த ஆப்பிள் வாழைப்பழங்கள் பசியாற உதவ.
அவன் இறங்கிப் போகும்போது தெரிந்தது பின்தொடர்ந்த
அவள் முகம் வடகிழக்குச் சாயலுடன் மூக்கும் மஞ்சள் நிறமும்.
எங்கள் கூடவந்த தம்பி குடும்பம் பெட்டியின் இன்னொரு கடைசியில்.
எழுந்து பார்க்கும்போது தூங்கிக்கொண்டிருந்தார்கள் நன்றாக.
எங்களுக்குத்தான் முடியவில்லை. காரணம் அருகருகே
மூன்று இளம் தாய்மார்கள் கைக்குழந்தைகளுடன்.
இரண்டு மூன்று மாதம் மட்டுமே இருக்கும் தொடர்ந்து
சிணுங்கிக்கொண்டே இருக்க, தாய்மார்கள்
வேறு வேறு மொழிகளில் கொஞ்சி, கேள்வி கேட்டு
பயமுறுத்தி கதை சொல்லியபடி என ஓசை ஒன்றேதான்
போலிருக்கிறது எல்லாம் புரிந்தது போல கண்கள்
மலரச் சிரிக்கின்றன குழந்தைகள் சிறிதே கைவிரல்களை விரித்து.

- ஆர்.ராஜகோபாலன்

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்

கவிதை கஃபே



பிறப்பு

அந்த மகப்பேறு மருத்துவமனையில்
மாதாந்திரப் பரிசோதனைக்காக
மனைவியோடு போய்வருகையில்
பார்த்த முகங்களில் ஒன்று
இன்று எதிர்ப்பட்டது லிஃப்டில்
கணவன் சகிதமாய்.
கைகளில் ஏந்திய சிசுவோடு
சுகப்பிரசவம் நேற்று என்று
யாரிடமோ
சொல்லிக் கொண்டிருந்தவனின்
தோள்களைப் பற்றியபடி
இருந்தவளின் முகத்தில்
சுமையொன்று இறங்கிய
சோர்வும் களைப்பும்.
பேச்சின் தொடர்ச்சியாய்
வந்து விழுந்தது
ஏழு வருடங்களுக்குப் பின்
பிறந்த முதல் பிள்ளை என்பது.
அதுவரை வாட்டமுற்றிருந்த
அவளின் முகமும் கண்களும்
அங்கிருந்த அனைவருக்கும்
பொதுவாய்
வெளிப்படுத்தியது ஒரு மலர்ச்சியை
இந்தக் கவிதை பிறந்து
புறப்பட்டது அந்த ஒரு
மலர்ச்சிப் பிரகாசத்தில்தான்.

- செல்வராஜ் ஜெகதீசன்

ரெட்டைச் சூரியன்

பிஞ்சுவிரல்கள் பத்திலும்
அணிவிக்கப்பட்ட
பத்துத் தொப்பிகள்

உள்ளங்கைகளின்
மையத்தில்
தீற்றலாய் ரெண்டு வட்டங்கள்

புரண்டு படுத்ததில்
உதிர்ந்திருந்தது
உதிர்வதற்கும் முன்னமே
காய்ந்திருந்த மருதாணி

துயிலெழுகிறேன் நான்
விரித்தேயிருந்த
என் மகளின் கைகளில்
கிளர்ந்திருந்த
ரெட்டைச் சூரியன்களின்
செந்நிற ஒளிபட்டு.

- ப.தியாகு

'கவிதை கஃபே'
பகுதியில்
இடம்பெறும்
கவிதைகளுக்கு
சன்மானம்
உண்டு.

றிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



''1947 கிடைத்தது முதல் சுதந்திரம். 1971ல் இரண்டாவது சுதந்திரம் - யாரும் தொழில் தொடங்கலாம் என்ற பொருளாதாரச் சுதந்திரம். அடுத்து 2040க்குள் வரப்போவது மூன்றாவது உண்மையான சுதந்திரம். ஏழ்மையில் இருந்து முழு சுதந்திரம்.'' முகேஷ் அம்பானியின் மனைவி நீட்டா அம்பானி, முதல்முறையாக லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பேசியபோது சொன்னது இது.

முதல் முறையாக ரயில் கோச் பாக்டரி, டபுள் டக்கர் ஏசி ரயில் கோச்சை உருவாக்கி இருக்கிறது. 78 சீட்டுகளுக்கு பதில் 128 சீட்டுகள். ஹௌராவுக்கும் தான்பாத்துக்கும் இடையே ஓடும் டபுள் டக்கர் கோச்சில், இன்னும் படுக்கை வசதி வரவில்லை!






ஃபேஸ்புக் போட்டி!

சென்னை எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியில் தீபிகா படுகோன், Fiama Di Wills ஃபேஸ்புக் போட்டியைத் தொடங்கிவைத்தார். இப்போட்டியில் வெல்பவர்கள், நவம்பர் மாதம் நடக்கும் கூந்தல் அழகி போட்டியில் பங்குபெறலாம்.





சஞ்சய் ஜா - மோட்டரோலா நிறுவன இணை சி.இ.ஓ. பிகார் மாநில உடன்பிறப்பு. 2009ல் உலகிலேயே அதிக சம்பளம் வாங்கிய முதல் 25 நபர்களில் இவரும் ஒருவர். சம்பளம் அதிகமில்லை ஜெண்டில்மென், வெறும் 3.77 மில்லியன் டாலர்கள்தான் (17 கோடிகள்)!



ஜெசிந்தா லால் - பார்க்க இந்தியப் பெண் மாதிரி இல்லை, வெள்ளைக்காரி என்று நியூசிலாந்தில் சர்ச்சை. மிஸ் இந்தியன் நியூசிலாந்து அழகிப் போட்டியில், இவரை இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டார்கள். அழகாக இருந்தால், வெள்ளையாக இருக்கக்கூடாதா என்ன?



நியூஸ் மிக்சர்

ஏடிஎம்களில் பணம் மட்டுமல்ல, இனி தங்கமும் வாங்கலாம். அபுதாபி, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயினில் ஏற்கெனவே தங்க ஏடிஎம் உண்டு. பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை தங்கத்தின் லேட்டஸ்ட் விலை அப்டேட் ஆகும். இந்த ஏடிஎம்மிலிருந்து தங்க காசுதான் வருமாம், நகையாக வராதாம்!

- துளசி

"டாக்டர், நீங்க ஆபரேஷன் பண்ணி அதிர்ஷ்டவசமா பேஷண்ட் பிழைச்சார்!"

"ஆமா... அதுக்கென்ன இப்ப?"

"ஊருக்குள்ள எல்லோரும் நீங்க போலி டாக்டரா இருப்பீங்களோன்னு சந்தேகப்படு றாங்க."

- நெல்லை ராஜ்





"நர்ஸ்! எனக்குக் காய்ச்சல் விட்டு விட்டு அடிக்குது!"

"விடாம அடிக்குறதுக்கு அதென்ன உங்க சம்சாரமா? காய்ச்சல்னா அப் படித்தான் அடிக்கும்! நிம்மதியா தூங் குங்க!"

- பா. உமாமகேஸ்வரி

அப்பாமாதிரி மாப்பிள்ளை!



"செத்தவங்க சாபம் சும்மா விடாதாமே... உண்மையா டாக் டர்?"

"யோவ்... உண்மையாயிருந்தா பத்து வருஷமா இதே இடத்துல என் னால நிம்மதியா தொழில் பண் ணிட்டு இருக்க முடியுமாய்யா!"

- ஜி.வினோத்



''எந்த மாப்பிள்ளையைப் பார்த்தாலும் எங்க அப்பாவுக்குப் பிடிக்க மாட்டேங்குது!''

''உங்கப்பா மாதிரியே ஒரு மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டியதுதானே!''

''பார்த்தோம். எங்கம்மாவுக்குப் பிடிக்கலை!''

- லீலாஜி





''தலைவர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்னு எதை வச்சு சொல்றீங்க?''

''போராட்டம் என்றதும் புறமுதுகிட்டு ஓடினாரே. அத வச்சுதான்!''

- பாண்டி கருணா



''உன் மருமக இந்த வயசுல உன்னை டான்ஸ் கத்துக்கச் சொல்றாளே... நீ கீழே விழுந்து கால், கை ஒடிஞ்சுகிட்டா என்ன பண்றது?''

''நான் அவளை என் தலை மேல தூக்கி வெச்சு ஆடலைங்கிற கோபம் அவளுக்கு!''

- ஜெயந்திலை ஆ.கார்மேகம்



9 சிவாஜியைக் காத்த விட்டலன்!

அருண்சரண்யா

வந்து சேர்ந்த பொருட்களும் தானியங்களும் எத்தனை நாட்களுக்குத்தான் இருந்துவிடும்? ஒரு கட்டத்தில் அவை தீர்ந்துவிட்டன.

கமலாபாய்க்குத் துக்கம் உண்டானது. தம் கணவர் (துக்காராம்) ஏதாவது ஒரு வேலைக்குப் போனால் நன்றாக இருக்குமே! அவராகச் செல்லமாட்டார். விட்டலனை நினைப்பது மட்டுமே அவருடைய ஒரே குறிக்கோள். எனவே தாம்தான் அவருக்கு ஒரு வேலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இப்படிக் கமலாபாய் முடிவு எடுக்க, அதற்குச் சாதகமாக வந்து சேர்ந்தது ஒரு வேலைவாய்ப்பு. அந்த ஊரில் ஒரு பணக்கார விவசாயியின் பிரம்மாண்டமான விளை நிலத்தைக் காவல் காக்க ஒருவர் தேவைப்பட்டார். கமலாபாயிடம், ''உங்கள் கணவர் இந்த வேலையைச் செய்வாரா?'' என்று கேட்டார் அந்த விவசாயி.

''அதைவிட அவருக்கு வேறு என்ன வேலை?'' என்று துள்ளிக் குதித்தாள் கமலாபாய். குடும்பத்துக்குத் தேவையான தானியங்களை முன்தொகையாக விவசாயி அளித்தார். நாணயமான துக்காராமை நம்பி தமது விளைநிலத்தை ஒப்படைப்பது புத்திசாலித்தனமான முடிவு என நினைத்தார் அந்த விவசாயி. துக்காராம் ஒருபோதும் திருடமாட்டார் என்று நம்பினார். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. துக்காராம் திருடவில்லைதான். ஆனால் ஒரு காவல்காரர் திருட்டுப்போக இடம்கொடுக்கலாமா?

பறவைகள் தானியங்களைக் கொத்திச் செல்லாமல் பாதுகாக்க வேண்டிய காவலாளியான துக்காராம் அதற்கு மாறாகச் செயல்பட்டார்.

ஒரு பறவை அந்தத் தோட்டத்துக்கு வந்து அமர்ந்தது. சுற்றுமுற்றும் பார்த்தது. அடடா, உண்பதற்குச் சுவையான எத்தனை தானியங்கள்! புதிய காவலாளியான துக்காராமை அந்தப் பறவை உற்றுப் பார்த்தது. அவர் கையில் கவண்கல் இருந்தாலும் அவர் கண்களில் கருணை புலப்பட்டதைக் கவனித்தது. போதாக்குறைக்கு துக்காராம் தம் கண்களை மூடியபடி விட்டல பஜனை செய்யத் தொடங்கினார். பறவைக்குத் துணிவு அதிகரித்தது. ஒரு தானியமணியைச் சுவைக்கத் தொடங்கியது. துக்காராம் தமது பாடலிலும் பக்தியிலும் தொடர்ந்து மூழ்கிக் கொண்டிருந்தார். பறவை தமது தோழர்களை எல்லாம் குரல் கொடுத்து வரவழைத்தது. அவை அனைத்துமாக உற்சாகமாகத் தானியங்களை உட்கொண்டன.

துக்காராம் கண்விழித்தார். அவர் எதிரே இனி


தீராத விளையாட்டு விட்டலன்

பாகம்-2

மையாக ரீங்கார மிட்டபடி பற வைகள் பசி ஆறிக்கொண்டு இருந்தன. 'இறைவன் படைப் பில்தான் எத்தனை அற்புதம்!' என்று மெய்சிலிர்த்தார்.

பிறகென்ன, தினமுமே பற வைகள் அங்கு வரத்தொடங் கின. சலுகை எடுத்துக் கொண் டன.

நில உரிமையாளரான விவ சாயி ஒருநாள் அங்கு வந்தார். நடப்பதைப் பார்த்துப் பதறி னார். கூப்பாடு போட்டார். பற வைகள் பறந்து சென்றன. ஆனால் துக்காராம் நடப்பதை அறியாமல் கண்களை மூடியபடி விட்டலனின் மீது அபங்கங்களை இயற்றிப் பாடிக்கொண் டிருந்தார்.



துக்காராமின் மீது மிகுந்த கோபம் வந்தது விவசாயிக்கு. என்றாலும் விட்டல பக்தனான அவரைத் தண்டிக்கவும் பயம். ''போதும் ஐயா நீர் காவல் காத்த லட்சணம். வெளியே போங்கள்'' என்று அவரை வீட் டுக்கு அனுப்பிவிட்டார்.

அறுவடை நடந்தது. துக்காராமின் அலட்சியத்தால் வழக் கத்தில் பாதிகூட இந்த முறை தேறாது என்று நினைத்திருந்த விவசா யிக்கு ஆனந்த அதிர்ச்சி. வழக்கத்தை விட பல மடங்கு அதிகமாக இருந் தது விளைச்சல்! துக்கா ராமின் மதிப்பை விட் டலன் உணர்த்துகிறார் என்பதை உணர்ந்தார். உடனே துக்காராமின் வீடு சென்று வணங் கினார். மன்னிப்பும் கேட்டார்.



கமலாபாய் நல் லவள்தான். ஆனால் உலக வாழ்க்கை என்று ஒன்று இருக்கிறதே. தவிர மகன்களை வளர்க்கவேண்டிய கட்டாயம். இந்த நிலையில் ''கமலா, என் கனவில் கண் ணன் வந்தான். என்னை நாம தேவரின் மறுபிறவி என்றான். நாமதேவர் பாடாமல் மிச்சம் வைத்த பாடல்களை நான் பாடவேண்டும் என்றான்'' என்றெல்லாம் பரவசமாகக் கூறியதை அவள் ரசிக்க வில்லை. அங்கிருந்து நகர்ந்தாள். அது பற்றி துக்காராம் கவலைப்படவில்லை. அன்றிலிருந்து மேலும் அருமையான கவி தைகள் அவர் வாயில் இருந்து வெளியாகின. அவர் குரலின் இனிமையும் பாடல்களின் பெருமையும் பல ஊர்களுக்கும் பரவத் தொடங்கியது. அது மன்னன் சிவாஜியை யும் எட்டியது.

பாண்டுரங்களை இஷ்டதெய்வமாக மனத்தில் ஏற்றுக் கொண்டபிறகு பண் டரிபுரத்துக்கு விஜயம் செய்யாமல் இருக்க முடியுமா? துக்காராம் அடிக்கடி பண்டரிபுரம் செல்லத் தொடங் கினார்.

துக்காராமின் கவி தைகள் இயற்றும் திறமை, அவரது இனிய குரல், அவரது அபரி மிதமான பக்தி போன் றவை குறித்து சிவாஜி கேள்விப்பட்டார். துக் காராமின் பாடல் களைக் கேட்க வேண்டும்

என்று ஆவல் அவருக்கு அதிகமானது.

துக்காராமை அரண்மனைக்கே அழைத்து வந்து பாடச் செய்யலாம்தான். ஆனால் சிவாஜிக்கு அதில் விருப்பமில்லை. தெய்விகப் பாடல்கள் ஆலயங்களில் பாடப் படும்போதுதான் அவை பூரணம் அடை கின்றன என்பதை உணர்ந்திருந்தார். எனவே, துக்காராம் பண்டரிபுரம் செல்கை யில் தானும் அங்கு சென்று அவரது பாடல் அமுதத்தைப் பருக வேண்டும் என்று தீர் மானித்தார். ஆனால் மன்னனாகச் சென் றால் மக்களின் கவனம் தம்புறம் திரும்பும். துக்காராமின் பாடல்களுக்கு இதனால் இடையூறு வரும் என்பதை யூகித்த சிவாஜி, வேறொரு முடிவெடுத்தார். ஓர் எளிய மனி தனாக ஒரு பஜனை கோஷ்டியுடன் தம்மை யும் இணைத்துக்கொண்டு பண்டரிபுரம் சென்றார்.


துக்காராம் குரலையும் அதன் மூலம் வெளிப்பட்ட பக்திப் பெருக்கையும் நேரடியாகக் கண்ட சிவாஜி அதில் மயங்கி நின்றார்.

ஒற்றர்கள் மூலம் இந்தச் செய்தி தில்லியை எட்டியது. ஔரங்கசீப் திட் டம் தீட்டினான்.

'போரில் சிக்கவைக்க முடியாத சிங்கமான வீரசிவாஜியைச் சிறைப்படுத்த இது ஒரு சரியான சமயம். பண்டரிபுர ஆல யத்தில் துக்காராமின் பாடல்களை மெய் மறந்து சிவாஜி கேட்டுக்கொண்டிருக்கும் போது அவரைச் சிறைப் பிடித்துவிடலாம். புதிய இடம், வீரர்கள் சுற்றிலும் இல்லாத புதிய சூழல், முற்றுகையைச் சற்றும் எதிர் பார்த்திராத மனநிலை - ஆக இவை அனைத்துமாகச் சேர்ந்து சிவாஜி விரைவில் நம் வசம்' இப்படி எண்ணமிட்டார்.

ஔரங்கசீப்பின் படை சத்தமில்லா மல் பண்டரிபுரத்தை முற்றுகையிட்டது. பண்டரிபுரம் முழுவதும் பரபரப்பு, வியப்பு. 'நமது ஊரை எதற்கு ஔரங்கசீப் முற்றுகையிடுகிறார்?' அவர்களுக்குத் தெரியாது துக்காராமின் பரம ரசிகரான ஒரு மாபெரும் முக்கியஸ்தர் தங்கள் ஊரில் மாறுவேடத்தில் இருக்கிறார் என்று.

மன்னர் சிவாஜி தம்மைக் காண வந் திருக்கிறார் என்பதை துக்காராம் இதற்குள் தெரிந்துவைத்திருந்தார் - கூடிய கூட்டத்தில் யார் மன்னர் என்பது விளங்கவில்லை. ஆனால் ஹிந்து மதத்தின் காவலனாக விளங்கும் மன்னர் சிவாஜி சிறைப்படுத் தப்படக்கூடாது எனும் ஆழமான எண்ணம் துக்காராமுக்கு உண்டானது.



அபங்க அமுதம்

விட்டல விட்டல யேணே சந்தே
ப்ரஹ்மானந்தே கர்ஜாவே
வாயே டாள டாள்யா டாளீ
ஹோயை ஹோளீ வின் னாம் சி
விட்டல ஆதி அவஸானீ
விட்டல மனீ ஸ்மராவா
துகா ம்ஹணே விட்டல வாணீ
லதா கானீ ஆயிகா

- பக்த துக்காராம்

கைகளிலோ தாளத்தினாலோ, தாளம் போட்டுக்கொண்டு விட்டல, விட்டல என்ற சந்தத்தை பிரம்மானந்தத்துடன் கூறுங்கள். அதனால், பிரச்னைகள் பொசுங்கிவிடும். எல்லாச் செயல்களின் ஆரம்பத்திலும், முடிவிலும் விட்டலன் பெயரைச் சொல்லுங்கள், விட்டலனை மனத்தில் கொள்ளுங்கள். காதால் விட்டல நாமத்தையே கேளுங்கள்.

மனமுருக விட்டலனிடம் வேண்டிக் கொண்டார். 'உன்மீது நான் பாடும் பாடல்களைக் கேட்பதற்கென்றே மன்னர் சிவாஜி இங்கு வந்திருக்கிறார். அவரைக் காப்பது உன் கடமை விட்டலா' என்று பிரார்த்தனை செய்தார்.

ஆலயத்துக்கு வெளியே படைவீரர்கள் காத்திருந்தார்கள். எப்படியும் சிவாஜி வெளியே வந்துதானே ஆக வேண்டும்? அப்போது மின்னலைப் போல அவரைச் சூழ்ந்து கொள்ளலாம், சிறைப்பிடிக்கலாம் என்று திட்டமிட்டனர்.

சிவாஜி வெளியே வந்தார். ஆனால் மின்னலாகச் செயல்பட்டது அவர்தான், வீரர்கள் அல்ல. அங்கிருந்த குதிரையில் ஏறி சிவாஜி வேகமாகக் கிளம்பிச் செல்ல, சற்று தாமதமாக இதை உணர்ந்து கொண்ட படை வீரர்கள் வேகமாக சிவாஜியைத் துரத்தத் தொடங்கினர். சிவாஜியோ காடு மேடு என்று பல இடங்களை அனாயாசமாகத் தாண்டிச் சென்றார். அவரது பாய்ச்சலுக்கு வீரர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை. சிவாஜியைத் துரத்துவதை நிறுத்திக்கொண்டனர். களைத்து நின்றுவிட்டார்கள். பிறகு ஔரங்கசீப் எதிரே தலைகுனிந்தபடி தங்கள் இயலாமையை ஒப்புக்கொண்டனர்.

இந்தச் செய்தி பண்டரிபுர ஆலயத்தையும் அடைய, அங்கு துக்காராமின் பாடல்களை ரசித்துக் கொண்டிருந்த சிவாஜி திகைத்துப் போனார். 'இது எப்படிச் சாத்தியம்? முன்தினம் முழுவதும் நாம் துக்காராமின் அபங்கங்களைக் கேட்டபடி ஆலயத்துக்கு உள்ளேதானே இருந்தோம்?' பாண்டுரங்கனைப் பார்த்தார், துக்காராமைப் பார்த்தார். அவருக்கு உண்மை புலப்பட்டது. மெய்சிலிர்த்தார்.

அடுத்த சில நாட்களில் துக்காராமின் வீட்டுக்குச் சில தானிய மூட்டைகள் வந்து சேர்ந்தன. 'மன்னர் சிவாஜியின் விருப்பம். மறுக்காமல் பெற்றுக் கொள்ளவும்' என்றார்கள் தானியங்களைக் கொண்டுவந்தவர்கள். மறுக்காமல் ஏற்றுக்கொண்டார் துக்காராம்.

மகிழ்ந்துபோன அவர் மனைவி கமலாபாய் தானியங்களைச் சேமித்து வைத்துக் கொள்ளலாமா? அல்லது விற்றுக் காசு பார்க்கலாமா என்று மனத்தில் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்க, அது குறித்துக் கவலைப்படாமல் வறியவர்களுக்கும் விட்டல பக்தர்களுக்கும் அந்தத் தானியங்களை இலவசமாகவே அளித்துவிட்டார் துக்காராம்.

யாத்திரை தொடரும்

கல்கி ஷோகேஸ்

டயபடிக் டிஸையர் ஸ்வீட்ஸ்

டயபடிஸ்காரர்களுக்கும், உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர்களுக்கும் ஓர் இனிப்பான செய்தி. நீங்கள் சாப்பிடுவதற்கென்றே ஸ்பெஷலாக இனிப்பு வகைகளைத் தயாரித்து விற்பனை செய்கிறார்கள் சுந்தர் டயபடிஸ் டிஸையர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர். சென்னை தி.நகர் வாணி மகால் அருகில் இருக்கும் டிஸையர் இனிப்பகத்துக்குச் சென்று ''எனக்கு டயபடிஸ், ஆனாலும் ஸ்வீட் சாப்பிட ஆசை'' என்றதும் மடமடவென்று 'ரசகுல்லா, ரசமலாய், பாதுஷா, ஜாங்கிரி, குலோப் ஜாமூன், கோதுமை அல்வா, மில்க் அல்வா, பர்ஃபி, பேடா வகைகள்' என்று 24 ஐட்டங்களைச் சொல்கிறார்கள்.

பொதுவாக, டயபடிஸ் இருப்பவர்களுக்கு இனிப்புகள்தான் முதல் எதிரி.



நீங்கள் ஒரு நீளமான பட்டியலே படிக்கிறீர்களே? என்றால் ''வழக்கமான சர்க்கரையைப் பயன்படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக 'லெவுலோஸ்' என்கிற இயற்கையான மாற்று சர்க்கரையைத்தான் பயன்படுத்துகிறோம். எனவே, இந்த இனிப்புகளைச் செரிப்பதற்கு இன்சுலின் அவசியமில்லை'' என்கிறார்கள்.

இதுபற்றி விஞ்ஞானபூர்வமாக ஏதாவது ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளதா?

''எஸ்! தமிழ்நாட்டின் பிரபலமான நீரிழிவு நோய் நிபுணர் ஒருவர், நாங்கள் இனிப்பு தயாரிக்கப் பயன்படுத்தும் லெவுலோஸ் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டு, லெவுலோஸ் பயன்படுத்தினால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்காது என்று சான்றிதழ் அளித்துள்ளார். அதே போல சென்னையில் இன்னொரு முன்னணி நீரிழிவு சிகிச்சை மையம் எங்கள் தயாரிப்பான ரசகுல்லாவை, தங்கள் மையத்தில் சிகிச்சை பெறும் டய



படிஸ்காரர்களிடம் கொடுத்து ஆராய்ச்சி செய்து, ''இந்த ரசகுல்லாக்களை டைப் 2 பிரிவு டயபடிஸ்காரர்கள் எப்போதாவது சாப்பிட்டால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு பாதிக்கப்படாது'' என்று சான்றிதழ் வழங்கியுள்ளது. இப்போது கிடைக்கும் மாற்றுச் சர்க்கரைகள் எல்லாம் செயற்கை ஆனவை. டயபடிக் டிஸையர் மட்டும்தான் இயற்கையானது...''

இனிப்புகள் மட்டும்தானா?

''உடலுக்கு ஆரோக்கியமான சோயா கலந்து தயாரிக்கப்பட்ட ரிப்பன், தட்டை ஆகிய காரவகைகளும் விற்பனை செய்யப்படுகின்றன!''

ஸ்வீட் நியூஸ்!



சென்னையில் மட்டும்தான் டிஸையர் இனிப்புகள் கிடைக்குமா?

''சென்னையில் தி.நகரில் ஒன்றும் (வாணி மகால் அருகில்), அண்ணாநகரில் ஒன்றும் (பழமுதிர் நிலையம் அருகில்) என இரண்டு உள்ளன. இவை தவிர, பெங்களூருவிலும், ஹைதராபாதிலும் தலா இரண்டு கிளைகள் உள்ளன.

இந்த தீபாவளிக்கு என்ன ஸ்பெஷல்?

''டயபடிஸ் உள்ள உங்கள் பெற்றோர்கள், நண்பர்கள், ஆஃபீஸ் பாஸ் என அனைவருக்கும் தீபாவளிக்குப் பரிசளித்து மகிழும், மகிழ்விக்கும் வகையில் கால்கிலோ, அரை கிலோ கிஃப்ட் பேக்குகள் விற்பனை செய்ய இருக்கிறோம். இந்த கிஃப்ட் பேக்குகள் எங்கள் விற்பனை மையங்களில் மட்டுமில்லாமல் சென்னை நகரத்தின் முக்கியமான சூப்பர் மார்க்கெட்டுகளிலும் விற்பனைசெய்யப்படும்.''

தீபாவளி நன்னாளில் இதைக் காட்டிலும் இனிப்பான செய்தி இருக்குமா?

- கௌதம் ராம்

மேலும் விவரங்களுக்கு:
சுந்தர் டயபடிஸ் டிஸையர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், சென்னை
044 - 42121415/ 044 - 42172083 - 64588088

மூலதன மந்திரம்

அதென்ன பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்?

சி. விஜயாம்பாள், கிருஷ்ணகிரி


2003க்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்தவர்களுக்கு பென்ஷன் இல்லை. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மட்டுமே என்கிறார்களே. அதனைப் பற்றி விளக்கவும்?

பங்களிப்பு ஓய்வூதியம் என்றால் உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியத்தில் உங்கள் பங்கும் இருக்கவேண்டும் என்பதாகும். நீங்கள் சர்வீஸில் இருக்கும்போது உங்கள் சம்பளத்தில் இருந்து நீங்கள் சேமிக்கும் தொகையையும், அத்துடன் அரசு உங்களுக்காகத் தரும் அதனுடைய பங்களிப்புத் தொகையையும் சேர்த்து முதலீடு செய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு நீங்கள் ஓய்வு பெறும்போது உங்கள் பணத்தேவைக்கேற்ப ஒரு பென்ஷன் திட்டத்துக்கான ஆன்னியூட்டியை உங்களின் விருப்பப்படி பெற்றுக்கொள்வது தான் இதன் நோக்கம். 1-4-2003 தேதிக்குப் பின்னால் அரசுப்பணியில் சேர்ந்தவர்கள் அனைவரும் (இந்தத் தேதிக்கு முன்னால் செலக்ட் ஆகியிருந்து 1-4-2003ல் சேர்ந்தவர்களுக்கும் இது பொருந்தும்) அரசாங்கம் அதனுடைய செலவில் பென்ஷன் தராது. அதற்குப் பதிலாக அலுவலரின் சம்பளத்தில் (பேசிக் பே + கிரேட் பே + டியர்னஸ் அலவன்ஸ்) 10 சதவீதத்தைப் பிடித்தம் செய்து அதே சமமான தொகையை அரசாங்கமும் அதன் கையிலிருந்து போட்டு அந்தப் பணத்தை முதலீடு செய்து நீங்கள் சர்வீஸில் இருக்கும் வரை அரசாங்கமே நிர்வகிக்கும். இந்த பென்ஷன் ஃபண்டை மேனேஜ் செய்ய அரசாங்கம் பென்ஷன் ஃபண்ட் ரெகுலேட்டரி மற்றும் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்ற ஒரு ரெகுலேட்டரையும் அமைத்துள்ளது. இந்த ரெகுலேட்டர் அப்ரூவ் செய்த பென்ஷன் ஃபண்ட் மேனேஜர்கள் மூலம் இந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டு நிர்வகிக்கப்படும். கிட்டத்தட்ட மூன்று விதமான முதலீட்டுத் திட்டங்களில் (வேறுவேறு விதமான ரிஸ்க்-ரிட்டர்ன் காம்பினேஷன் உள்ளவை) முதலீடு செய்யப்படுகின்றன. எந்தவிதமான திட்டத்தை நீங்கள் விரும்புகிறீர்களோ அதில் உங்களை இணைத்துக் கொள்ளலாம். நீங்கள் ஓய்வு பெறும்போது உங்களுடைய பென்ஷனுக்கான சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்தின் 60 சத



உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்ப
KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர்,

டி.பாலசுந்தரம்



வீதத்தை ரொக்கமாகக் கையில் பெற்றுக் கொள்ளலாம். மீதமுள்ள 40 சதவீதத் தொகையை உங்களுக்குப் பிடித்ததொரு இன்சூரன்ஸ் கம்பெனியில் பென்ஷன் பெறுவதற்கான முதலீட்டுத் திட்டத்தில் (ஆன்னியூட்டி) கட்டாயமாக முதலீடு செய்யவேண்டும். அந்த ஆன்னியூட்டி முதலீட்டில் இருந்து வரும் பென்ஷனை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்.ராமநாதன்

டி.டி.எஸ்.ஸை (TDS) தவிர்ப்பதற்காக நான் ஒரு லட்சத்துக்கு மேல் உள்ள முதலீடுகளைப் பிரித்து வங்கிகளில் முதலீடு செய்திருக்கிறேன். இதனால், என் வருமான வரியில் ஏதேனும் சிக்கல் வருமா?

டி.டி.எஸ். பிரச்னைக்காக நீங்கள் பல வங்கிகளில் டெப்பாசிட் வைத்திருந்தாலும் அந்த டெப்பாசிட்டுகளில் இருந்து வரும் வட்டியை உங்கள் வருமானத்தில் சேர்த்து அதற்குண்டான வருமான வரியை அந்தந்த வருடமே செலுத்திவிட்டீர்கள் என்றால் எந்த விதப் பிரச்னையும் வர வாய்ப்பில்லை. அப்படிச் செய்யாத பட்சத்தில் சிக்கல்கள் வர வாய்ப்புள்ளது. வங்கிகள் கம்ப்யூட்டர் மயம் ஆனதால் உங்கள் பெயர், பிறந்த தேதி, தகப்பனார் பெயர் மற்றும் விலாசம் போன்ற டேட்டாக்கள் நீங்கள் பணம் போட்டு வைத்திருக்கும் ஒவ்வொரு வங்கியிலும் எலெக்ட்ரானிக்காகப் பதிந்து வைக்கப்படுகின்றது. என்றைக்காவது ஒரு நாள் அத்தனை வங்கிகளின் டேட்டா பேஸையும் இணைத்து வருமான வரித் துறை அனலைஸ் செய்யும்போது ஒரே மாதிரியான பதிவு விவரங்கள் கொண்ட உங்களுடைய அத்தனை கணக்குகளும் வருமான வரித்துறையினருக்குத் தெரியவர வாய்ப்பு உள்ளது. அப்படித் தெரிய வரும்போது வட்டியின் மீதான வருமான வரி ஏய்ப்புக்குண்டான நடவடிக்கைகளை வருமான வரித் துறையிடமிருந்து நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். அதுபோன்ற சிக்கல்களைத் தவிர்க்க உங்கள் வட்டி வருமானத்துக்குண்டான வரியைச் செலுத்திவிடுவது மிக நல்லது.



ki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் யவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

'புஸ் புஸ்' என்று கரிய புகையினைக் கக்கிக் கொண்டு முக்கி முனகி, அந்த உயர மலைப் பாதையில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஏறிவந்து கொண்டிருந்தது 420 வேன் ஒன்று.

ஒருவழியாக மேடு ஏறி ஓரிடத்தில் ஓரங்கட்டி நின்றது.

வேனில் வந்தவர்கள் ஒவ்வொருவராக இறங்கி னார்கள். மொத்தம் எட்டு நபர்கள். அதில் இருவர் பெண்கள். துப்பாக்கியுடன் இரண்டு போலீஸ்காரர் களும்.

சாலையின் ஓர் ஓரத்தில், ஒரு தற்காலிகக் கீற்றுக் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. நான்கு பக்கமும் கீற்றினாலேயே அடைக்கப்பட்டிருக்க, முகப்பில் 'பட்டேரி ஊராட்சி - வாக்குச்சாவடி' என்று எழுதப்பட்ட போர்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

வேனில் கொண்டு வந்திருந்த பொருட்கள் மற்றும் தத்தம் லக்கேஜ்களை இறக்கி அந்தக் கொட்டகைக்குள் வைத்தார்கள்.

இந்த மலைக்கிராமத்தில் நாளை தேர்தல் நடைபெறவுள்ளது. பட்டேரி ஊராட்சி மன்றத் தேர்தல் மற்றும் வார்டு உறுப்பினர்கள் தேர்தல். அடிவாரத்தில் உள்ள பட்டேரி ஊராட்சியைச் சேர்ந்த ஒரு குக்கிராமம்தான் இது.

இந்தத் தேர்தலுக்குத்தான் வாக்குப் பதிவு அலுவலர்கள் வந்திருக்கிறார்கள்.

தலைமை வாக்குச்சாவடி அலுவலர், கொட் டகைக்குள் நுழைந்து சுற்றுமுற்றும் பார்த்தார். வாக்குச்சாவடி அமைப்பதற்கான எந்த உபகரணங் களும் அங்கு இல்லை. உட்காருவதற்கு ஒரு பெஞ்ச் கூட இல்லை.

''சரியா வந்து மாட்டிக்கிட்டோம் போலிருக்கு சார்...'' ஒரு பெண் அலுவலர் முனக, ''மலைக்கிராமம் தானே... பள்ளிக்கூடம் போன்ற பொதுக்கட்டடம் எதுவும் இல்லாத தனால்தான் டெம்பரரி கொட்டகை போட்டிருக்காங்க... இந்த ஊர்க் காரங்ககிட்ட கேட்டு எல்லாம் ஏற் பாடு பண்ணிக்கலாம்... கவலைப் படாதீங்க...'' என்றார் தலைமை வாக்குச் சாவடி அலுவலர்



பாண்டியன்.

ஊராட்சி ஒன்றியத்துக்கு செல்லில் தொடர்புகொண்டார். உள்ள நில வரத்தை விளக்கினார்.

''பி.டி.ஓ.கிட்ட பேசிட்டேன்... வி.ஏ.ஓ மீனியல் ஒருத்தர் வந்துடு வாராம். அவர் வந்து எல்லா ஏற் பாடும் செஞ்சு தருவாராம். சரி சரி... யாராவது வெளியே போய் அங்கிருக் கிற குடிசைங்கள்ல ஏதாவது நாற்காலி பெஞ்ச் கிடைக்குதான்னு பாருங்க...''

ஓரிருவர் வெளியே செல்ல, பாண்டியன் கொட்டகையை விட்டு வெளியே வந்து சுற்று முற்றும் பார்த் தார்.

ஓங்கி வளர்ந்த பச்சைப்பசேல் காட்டு மரங்கள். மத்தியான வெயில் 'சுள்'ளென்று அடித்தாலும் சூழ்நிலையோ குளுமையாகவே இருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இங் கொன்றும் அங்கொன்றுமாகச் சோளத்தட்டைகள் வேய்ந்த குடிசைகள். ஓரிரு கிழடு கட்டைகள் தவிர, ஜன நடமாட்டம் அதிகம் காணோம். வேலை வெட்டிக்குப் போயிருப்பார்கள் போலிருக்கிறது.

வெளியே சென்றவர்கள் ஒன்றிரண்டு ஓலைப் பாயுடன் வந்தார்கள்.

''மரப்பலகைகள் எதுவும் இல்லை சார்... இந்த ஓலைப் பாய்தான் கிடைச்சது.''

''சரி சரி... பாயைக் கொட்டகைக்குள் விரிங்க... போலிங் மெட்டீரியல்ஸை சரிபார்த்துடுவோம்...''

ஓலைப்பாய்களை விரித்து, வட்டமாக அமர்ந்து



கொண்டார்கள். நடுவில், கொண்டுவந்திருந்த தேர்தல் பொருட்கள்.

''முருகையன் ஸார்... நீங்க வோட்டுப் பெட்டிகளைத் திறந்து பாருங்க... சரியாலாக் ஆகுதான்னு சரி பார்த்துடுங்க...டீச்சர்... நீங்க லிஸ்ட்படி எல்லாப் பொருளும் இருக்கான்னு வெரிஃபை பண்ணுங்க... நான் வோட்டுச் சீட்டுகளைச் சரிபார்க்கிறேன்...''

அவரவர் அனைத்தையும் சரிபார்க்கத் தொடங்கினார்கள்.

''முக்கியமா வாக்காளர் பட்டியலும் பிரித்தறி சின்னமும் நம்ம போலிங் ஸ்டேஷனுக்கு உரியதுதானான்னு பாருங்க. இன்டெலிபிள் இங்க்கும், ஆரோகிராஸ் மார்க்கும் போதுமான அளவு இருக்கான்னு பார்த்துடுங்க...'' பாண்டியன் இன்ஸ்ட்ரக்ஷன் சொல்லிக்கொண்டே போனார்.



''டாக்டர் ஏன் உங்களைப் பொறாமையா பார்க்குறாரு?''

''என் மனைவிக்கு இரண்டு நாளா தொண்டை கட்டியிருக்குன்னு சொன்னேன்!''

- பா. உமாமகேஸ்வரி

ஆயிற்று. நாளை நடக்கப்போகிற தேர்தலுக்கு ஆயத்தம் ஆகிவிட்டது. வாக்குச் சாவடி விவரம், வாக்காளர் மற்றும் வேட்பாளர் விவரம் அடங்கிய போஸ்டர்கள் வெளிப்புறப் பகுதியில் ஒட்டப்பட்டன.

நாற்காலி பெஞ்சுகள் வந்துவிட்டால் வாக்குச் சாவடி தயார்.

வருவாய்ப் பணியாளரை இன்னும் காணவில்லை. இன்னும் நேரம்தான் இருக்கிறதே... மெதுவாக வரட்டும்...

காற்று 'சிலுசிலு' வென்று அடித்தது. வந்த களைப்புத் தீர சற்று தலை சாய்க்கலாம் என்ற எண்ணத்தில், உட்கார்ந்த இடத்திலேயே லக்கேஜை தலைக்கு வைத்தபடி பாயில் சாய்ந்தார்கள்.

போலீஸ்காரர்கள் மட்டும் கையில் துப்பாக்கியுடன் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஏது தூக்கம்?

மாலை மங்கியது. ரம்மியம் சூழ்ந்துகொண்டது. அலுவலர்கள் எழுந்து கொண்டார்கள். கையோடு கொண்டு வந்திருந்த கேன் தண்ணீரைக் கொண்டு முகம் கழுவிக் கொண்டார்கள்.

வருவாய்ப் பணியாளர் வந்துவிட்டார். அடிவாரத்திலிருந்து ஒரு பெஞ்ச், ஒரு நாற்காலி, ஒரு ஸ்டூல் ஆகியவற்றை ஆட்கள் மூலம் தலைச்சுமையாகக் கொண்டு வந்திருக்கிறார். கூடவே இரண்டு கேஸ் விளக்குகளும்.

''இந்தச் சாமான்தான் கொண்டு வர்ற முடிஞ்சது... இத வச்சி அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க சார்...'' என்று பணியாளர் சொல்ல, ''பார்த்துக்கிறோம்பா...'' என்று தலையசைத்தார் பாண்டியன்.

''அப்புறம் ஒரு விஷயம் சார்... இந்தப் பொட்டல்காட்டிலே சாப்பிட ஒண்ணும் கிடைக்காது. நீங்க எல்லோரும் கையில் ஏதாவது ஆகாரம் கொண்டு வந்திருக்கீங்க

தானே...''

''கொண்டு வந்திருக்கோம்பா...''

''நாளைக்கு வரைக்கும் வச்சிக்கிட்டு மாளிச்சிக்குங்க... அப்புறம் ஒரேயொரு க்கொஸ்ட்டு... அடிவாரத்துலதான் என் டு இருக்கும். என் ஒய்ஃபுக்கு ரொம்ப டம்பு சரியில்லை. காலையிலிருந்து ஆபீஸிலேயே இருந்துட்டேன். வீட்டுக்கே போகலை. இப்போ சைக்கிள்ல வீட்டுக்குப் போய் ஒரு எட்டு பார்த்துட்டு வந்துடறேன் சார்...''

''சரிப்பா... சீக்கிரம் வந்துடு...''

வெளியே சலசலவென்று பேச்சுக்

கொடுக்கணும்...''

''அதெல்லாம் தேவையில்லீங்க... எல்லோருக்கும் வோட்டுப் போடத் தெரியும். இதுக்கு முன்னாடி நெறைய தடவ போட்டிருக்கோம்...''

''நாளைக்குக் காலையில சரியா எட்டு மணிக்கு வோட்டுப் பதிவு ஆரம்பிச்சிடும்... வேட்பாளர்களுடைய ஏஜெண்டுகள் 7.30 மணிக்கே வந்துடணும்...''

''ஏஜெண்ட்டா... அப்படின்னா?''

''இந்தத் தேர்தல்ல நான்கு வேட்பாளருங்க நிக்கிறாங்க... தேர்தல்ல ஏதாவது தப்புத்தண்டா நடக்கக்கூடாதுல்ல... அதைக் கண்காணிக்கிறதுக்காக ஒவ்வொரு வேட்



''அந்த அநாதைப் பேஷண்ட்டுக்கு நீங்க ஏன் ஆபரேஷன் செய்ய முடியாதுன்னு சொல்லிட்டீங்க டாக்டர்!''

''ஆபரேஷனுக்குப் பிறகு அவருக்குச் செய்ய வேண்டிய இறுதி காரியங்களை யாரு செய்யுறதாம்!''

- டி.சேகர்

குரல் கேட்டது. மலைகிராமத்து மக்கள் வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது.

பாண்டியன் வெளியே வந்தார்.

அவர்களைப் பார்த்துக் கைகூப்பினார்.

''நாளைக்கு இங்க எலெக்‌ஷன் நடக்கப் போகுது... அதுக்காக வந்திருக்கோம்... இங்க மொத்தம் எத்தனை வோட்டு இருக்கு தெரியுமா?''

பெரிசும் இளசுமாக அரை நிர்வாணக் கோலத்தில் நின்ற கிராம மக்களிடையே ஒருவர் மட்டும் விஷயம் தெரிந்தவர் போல முன்னே வந்தார். ''இங்க ஆயிரத்து அம்பது வோட்டு இருக்குது சார்...''

''எல்லோரையும் கூப்பிடறீங்களா... வோட்டுப்போடறது எப்படின்னு சொல்லிக்

பாளரும் தங்களுக்காக ஒரு ஏஜெண்ட்டை வாக்குச் சாவடியில உட்கார வைப்பாங்க...''

''அப்படியெல்லாம் இங்க கெடையாது சாமி... எந்த வேட்பாளரும் எங்க ஊருக்கு வர்றது கிடையாது...''

''என்னப்பா இது ஆச்சரியமா இருக்கு... வோட்டு கேட்கக் கூட வரலையா?''

''சூரியனும், நிலாவும்தான் எங்களுக்கு வெளிச்சம் தர்ற கடவுள். ரொம்ப உசரத்துல இருக்கும் மலையுச்சியில் விழும் சின்ன அருவிதான் தண்ணீர் கொடுக்கும் தெய்வம். மலைப்பாதையே கருங்கல் சாலை. மூலிகையே மருந்து... எங்கள் உழைப்பே ஜீவனம். மத்தவங்களால எங்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்ல... அதனால

எங்களைப் பார்க்க வெட்கப்பட்டுக்கிட்டு யாரும் இங்க வரமாட்டாங்க...''

ஆள் எப்படியிருந்தாலும் பெரிசு விவரமாகத்தான் பேசினார்.

''நான் இப்படிக் கேட்கக் கூடாதுதான். இருந்தாலும் கேட்கிறேன். ஒரு பள்ளிக்கூட வசதிகூட யாரும் இந்த ஊருக்கு செஞ்சு கொடுக்கல... ஒரு வசதியும் கெடைக்காத நீங்க, வோட்டு மட்டும் ஏன் போடறீங்க...'' பாண்டியன் கேட்க...

'கெக்கே பெக்கே' என்று பொக்கைப் பல் தெரிய சிரித்தார் பெரியவர்.

''எங்களுக்குச் சூடு, சொரணை இருக்கு சாமி... மத்தவங்களைப்போல் நாங்க இல்ல. எங்க வேலைய நாங்க சரியா செய்வோம்...''

இருட்டத் தொடங்கிவிட்டது. கும்மிருட்டு குப்பென்று பற்றிக்கொண்டது.

கேஸ் விளக்கை எடுத்து ஏற்றி வைத்தார்கள். தத்தம் உடைகளை மாற்றிக் கொண்டார்கள். அவரவர் கொண்டு வந்திருந்த சாப்பாடு மூட்டைகளைப் பிரித்துப் பசியாறிக் கொண்டார்கள்.

கும்பல் கலைந்து போய்விட்டது.

வெளியே எட்டிப்பார்க்கவே பயமாயிருந்தது அலுவலர்களுக்கு. பல்வேறு வகையான கர்ண கடூர குரல்கள் - ஊடே பறவைகளின் ஒலிகளும். அவ்வப்போது ஆங்காரமாய் வீசும் காற்றின் ஓங்காரச் சத்தம்.

சூழ்நிலை இறுக்கமாகிப் போனது.

''இப்படியே படுத்துட வேண்டியது தானா?''

''வேறென்ன செய்றது... பெட்ஷீட்டை எடுத்து வச்சிக்கங்க... அப்படியே ஒருக்களித்துப் படுத்துக்கங்க... தூக்கம் வராது தான். இருந்தாலும் பொழுதைப் போக்கணுமே... காலையில அஞ்சு மணிக்கு வேற எந்திரிச்சு எல்லாரும் ரெடியாகணும்.''

பாண்டியன் கடமையே கண்ணாகப் பேசினார்.

''பூச்சிப்பொட்டு கடிச்சா கூட கேட்க நாதியில்லை...'' டீச்சர் முனகிக் கொண்டே கந்தசஷ்டி கவசத்தை முணுமுணுக்கத் தொடங்கினார்.

எங்கிருந்தோ திடீரென்று ஒரு பேய்க் காற்று வீசியது.

கொட்டகைக்குள் எரிந்துகொண்டிருந்த கேஸ் விளக்கு இரண்டும் அந்தப் பேய்க் காற்றில் தடுமாறித் தலைகுப்புற விழுந்து - மேண்டில்கள் உடைந்துபோக -

'சட்'டென்று மீளவும் கும்மிருட்டு கவிழ்ந்துகொண்டது.

அலுவலர்கள் செய்வதறியாது தவிக்க ஆரம்பிக்க -

பாண்டியன் வெளியே ஓடினார்.

''ஐயா... ஐயா... யாராவது வாங்களேன்...'' ஓங்கிக் குரலெடுத்துக் கத்தினார்.

குரல்கேட்டு 'தபதப'வென்று ஓரிருவர் ஓடிவர -

விளக்குகள் அணைந்துபோனதைத் தெரிவித்ததும் -

''அரசாங்கம் எங்களு அதனோட ஆபீஸர்களு வச்சோ

''பயப்படாதீங்க சாமி... இதோ உடனே வந்துடறோம்...''

அடுத்த சில நிமிடங்களில் ஆளுக்கொரு தீப்பந்தம் ஏந்திக்கொண்டு ஓடி வந்தார்கள். கொட்டகைக்குள் நுழைந்து மூலைக்கொருவராக உட்கார்ந்து கொண்டார்கள்.

''இனி பயமில்லை. நீங்க தூங்குங்க. இவங்க நாலு பேரும் விடிய விடிய இங்கதான் இருப்பாங்க...'' பெரியவர் சொன்னார்.

வினோத சத்தங்களுடன் நேரம் மெல்ல மெல்ல ஊர்ந்துபோக -

விடியற்காலை மூன்று இருக்கும்.

திடீரென்று பல்வேறுவிதமான பதற்றமான குரல்கள். அங்குமிங்கும் 'தபதப'

ிவன்று ஓடும் காலடிச்சத்தங்கள்.

அலுவலர்கள் அனைவரும் அலறி அடித்து எழுந்துகொள்ள -

தீப்பந்த ஆள் ஒருத்தன் சொன்னான்: 'ஒண்ணுமில்லை ஐயா... நீங்க காலையில நளிக்கறதுக்காகத் தண்ணி கொண்டார மலையுச்சிக்கு எங்க ஆளுங்க போனாங்க... அதுல ஒருத்தனுக்கு இருட்டுல பாம்பு கடிச்சிட்டுதான்... அதான் மருந்து வக்கிறாங்க.''

''தெய்வமே...'' என்றார் பாண்டியன். அதற்கப்புறம் யாரும் படுக்கவில்லை.

ஆயிற்று. ஐந்து மணி ஆகிவிட்டது.

எல்லோரும் எழுந்து பல்துலக்கிக் குளிக்கத் தயாரானார்கள்.

எங்கே போய்க் குளிப்பது...?

''யாரும் குளிக்க வேணாம்... இருக்கிற தண்ணிய வச்சிக்கிட்டு பல்லை மட்டும் துலக்கிடுவோம்...''

பெரியவர் அரக்கப் பரக்க ஓடி வந்தார்.

''மலையுச்சியிலிருந்து தண்ணி கொண்டாந்து கொப்பரையில் ஊத்தி வச்சிருக்கோம். போய் நல்லா குளிங்க...''

குளித்தார்கள். குளித்த பின் சுக்குக் காப்பி மணக்க மணக்கக் கொண்டு வந்து கொடுத்தார்கள். மனம் சுளிக்காமல் வாங்கிச் சுவைத்தார்கள்.

காலை ஆகாரம் கேப்பங்கூழ் வந்தது. அமிர்தமாக இருந்தது. தாங்கள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டார்கள்.

தேர்தல் முடிந்தது.

வாக்குச்சாவடி ஆவணங்கள் அனைத்தையும், வேனில் வந்திருந்த தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு, அந்த வேனிலேயே அனைவரும் புறப்பட்டார்கள்.

''இந்த வாக்குச் சாவடியில் எத்தனை பர்சண்ட் போலிங் ஆச்சு?'' தேர்தல் அதிகாரி கேட்க -

''நூறு சதவிகிதம் சார்...'' என்றார் பாண்டியன்.

''என்னது? ஆச்சரியமாயிருக்கே...''

''ஆமா ஸார்... இத்தினிக்கும் இந்த ஊருக்கு எந்த வசதியும் யாரும் செஞ்சு கொடுக்கல... லைட் வசதி, குடிதண்ணீர் வசதி எதுவும் கிடையாது. ஒரு பள்ளிக்கூடம் கூட கிடையாது. இருந்தாலும் நூறு சதவிகிதம் வோட்டு போட்டிருக்காங்க. கேட்டா, எங்களுக்கு எதுவும் செய்யலன்னாலும் எங்க உரிமையை நாங்க தவற விடமாட்டோம்கிறாங்க...''

...துவும் செய்யலன்னாலும்,
...ங்க ஏதாவது குறை
...மி...''



''நேத்து ராத்திரி தண்ணி கொண்டுவரப் போயி, பாம்பு கடிச்சி, வைத்தியம் சரியா பண்ண முடியாம, ஒருத்தன் செத்துப் போயிட்டான் சாமி. அதனாலதான் அந்த ஒரு வோட்டு கொறைஞ்சிப் போயிட்டுது...'' பெரியவர் சொன்னதும், தேர்தல் அதிகாரிக்கே என்னவோ போலாகிவிட்டது.

''சாமி...'' என்றான் ஒருவன் கூட்டத்தில். ''அரசாங்கம் எங்களுக்கு எதுவும் செய்யலன்னாலும், அதனோட ஆபீஸர்களுக்கு நாங்க ஏதாவது குறை வச்சோமா சாமி... உங்க எல்லோருக்கும் திருப்திதானே...''

அப்பாவியாய் அவன் கேட்க, மனத்தைப் பிழிந்தது அலுவலர்களுக்கு.

●

கல்கி
ஷோகேஸ்

ஸ்ரீ ஐஸ்வர்யா சாரீஸ்

தீப ஒளி வீசும் தீபாவளிக்கு என்ன இருக்கு ஐஸ்வர்யாவில்?

வர்ண ஒளி வீசும் வர்ண ரூபிணி கலெக்ஷன்ஸ்!



இந்த தீபாவளிக்கு ஐஸ்வர்யா சாரீஸில் வேறு என்ன இருக்கு?

பட்டுப் புடைவைகள், ஜூட் வேலைப்பாடு செய்யப்பட்ட பட்டுப் புடைவைகள், சில்க் காட்டன் புடைவைகள், கலாத்மிகா கலெக்ஷன், எக்ஸ்குளுசிவ் எம்பிராய்டரி புடைவைகள், பிரத்யேகமான பிரிண்ட்டட் புடைவைகள், டஸ்ஸர், கோட்டா, பாலிகாட்டன், காட்டன், 10 கெஜம் புடைவைகள் மற்றும் டிரஸ் மெட்டீரியல்ஸ் எனப் பல பல ரகங்கள்!


Sri Aishwarya Sarees
பர்கண்டி கலர் பார்டரில் ஏலக்காய் வண்ணத்தில் ஜர்தோஸி வேலைப்பாடுகளுடன் ஆலிலை அப்ளிக் ஒர்க் செய்யப்பட்ட கோர்வை சில்க் காட்டன் வர்ண ரூபிணி கலெக்ஷன். ஸ்காலப் ஒர்க் செய்யப்பட்ட பிளவுஸ் இதன் ஸ்பெஷாலிடி. இது பல வண்ணங்களில் உண்டு.
இவை மட்டுமல்ல,
வாடிக்கையாளர்களின் விருப்பத்துக்கேற்ப புடைவைகள் மற்றும் பிளவுஸ்களில் மனம் கவரும் டிசைன்களில் எம்பிராய்டரி ஒர்க் செய்து தரப்படும்.
தீபாவளி சிறப்புத் தள்ளுபடி: 5% முதல் 30% வரை
ஐஸ்வர்யா சாரீஸின் கோலாகலமான தீபாவளி ஸ்பெஷல் விற்பனை.
4.11.2010 வரை உண்டு.
இந்த தீபாவளியை வர்ண ரூபிணியுடன் கொண்டாடுங்கள்!
அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி வாழ்த்துக்கள்!!
மேலும் விவரங்களுக்கு:
Sri Aishwarya Sarees, #19, Arcot Street, T.Nagar, Chennai-17
(Near M.G.R. Memorial House). Ph: 4260 4447, Cell: 98409 83999



எதிர்பார்க்கும் கூட்டம் வருமா? அல்லது பிசுபிசுத்துப் போகுமா? - ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள் அ.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு. ஆனால், திரண்ட கூட்டம் அரசியல் பார்வையாளர்களையே சற்று அதிர வைத்துள்ளது. மதுரை ரிங் ரோடு முழுவதுமாக அந்தளவுக்குக் கூட்டம். விமான நிலையத்திலிருந்து ஆர்ப்பாட்ட மைதானம் பதினைந்து கி.மீ. தூரம். ஜெயலலிதாவுக்கு காரில் அதனைக் கடந்து வரவே இரண்டு மணி நேரம்.

● மதுரை ரிங் ரோடு விரகனூர் பாண்டி கோயில் அருகே, இருபது ஏக்கர் பரப்பளவு மைதானம் தயார்படுத்தப்பட்டிருந்தது. மைதானத்தையொட்டி நீண்டும் வளைந்தும் வளைவுச் சாலைகள் முழுமையுமாகத் தொண்டர்கள் பெருங்கூட்டம் திரண்டுநிற்க வசதியாக இருந்தது.

● ''நைட்டு ரெண்டு மணிக்கெல்லாம் எங்க பஸ் இங்க வந்திடுச்சு. வாலாஜாபாத்லேர்ந்து முதல் நாள் சாயந்திரம் நாலு மணிக்குக் கிளம்பினோம். இங்க வந்து சேர்ந்த அதிகாலை நேரத்துலேருந்தே நெறைய பஸ்களும், வேன்களுமா வந்து குவியத் தொடங்கிடுச்சு. நாங்க தொடர்ந்து கலந்துக்கற அஞ்சாவது ஆர்ப்பாட்டம் இது!'' எனக் கூறுகிறார் வாலாஜாபாத் ஒன்றிய அ.தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் அருண்.

● அதிகாலை முதல் குவியத் தொடங்கிய தொலைதூர வெளியூர் தொண்டர்கள், மதியம்வரை வந்து சேர்ந்த தென் மாவட்டத் தொண்டர்கள் என லட்சக்கணக்கில் கூட்டம் திரளத் தொடங்கியது.

● மேடையருகே சென்னை ஆவடி முன்னாள் கவுன்சிலர் பானுமதி, தொண்டர்களை உற்சாகப்படுத்த 'குத்தாட்டம்' போட்டுக்கொண்டிருந்தார். ஆனால், திரண்டு வந்து கொண்டிருந்த தொண்டர்களோ ஆங்காங்கு டாஸ்மாக் கடைகளில் மிதந்து கொண்டிருந்தனர்.

● உற்சாக பானம் உள்ளே தள்ளிய தொண்டர்களில் ஒரு சிலர், மு.க. அழகிரி குறித்துச் சென்டல் வார்த்தைகளை சீறிப் பாய விட்டுக் கொண்டிருந்தனர். 'இன்னைக்கி நல்ல யாவாரம்லே. சூப்பரா கல்லா கட்டறான்லே' என்றது ஒரு ரத்தத்தின் ரத்தம்!

● ''என் ஆட்டோவை ஏர்போர்ட்டுக்கு அங்கிட்டே நிப்பாட்டிட்டேன். 1977ல அஞ்சாவது படிச்சப்பவே என் கையில ரெட்டை எலை பச்சை குத்திக்கிட்டேன். பதினேழு கி.மீ. நடந்தே வந்திருக்கேன்!'' என்கிறார் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சாயல்குடி பாண்டியன்.

● மார்பிலும் வயிற்றுப் பகுதியிலுமாக வண்ணம் பூசி, அதில் இரட்டை இலை - எம்.ஜி.ஆர். முகம் - ஜெ.முகம் மற்றும்

கையில் கட்சிக் கொடியென வலம் வந்து கொண் டிருந்தார் கோவை பி.என்.பாளையம் பெயிண்டர். ''எழுபதுகளில் எம்.ஜி.ஆருக்கு இருந்த எழுச்சியை, நாற்பதாண்டுகளுக்குப் பின்னர் தற்போது நேரில் பார்க்கிறேன்!'' என்கிறார் இவர்.

● ''ஒவ்வொரு கண்டன ஆர்ப்பாட்டத்துக்கும் கூட்டம் அதிகமாயிட்டே போவுது. அந்தளவுக்கு ஜனங்க நொந்து போயிருக்காங்க. அரிசி, மளிகைச் சாமான், காய்கறி எல்லாமே மூணு, நாலு மடங்கு விலை கூடிப் போச்சு!'' எனக் குறிப்பிடுகிறார் அரிய லூர் தனியார் மருத்துவமனை ஊழியரான ராணி.

● ''கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் தொடர்ந்து நீடிக்கற மின்வெட்டு, தி.மு.க அரசோட பெரிய சாத னைன்னே சொல்லலாம். சென்னை லிமிட்ல பவர் கட் இல்லேன்னுதான் பேரு; லோ பவர் கரெண்ட்டால நாங்க படுற பாடு கொஞ்ச நஞ்சமல்ல. தமிழ்நாட்டை மின்தடை இல்லாத மாநிலமா வெச்சிருந்தாங்க அ.தி.மு.க. ஆட்சியில!'' எனச் சொல்கிறார் சென்னை புழல் பகுதியிலிருந்து வந்திருக்கும் இந்திரா.

● பாண்டி கோயில் எதிரே ரிங் ரோட்டில் ஒரு பேருந்தின் மேற்கூரையில் எம்.ஜி.ஆர், வேடமணிந்த ஒருவர், கூட்டத்தினரை குஷிப்படுத்திக் கொண்டிருந் தார். எம்.ஜி.ஆர். வேடமணிந்திருந்தவரின் அருகே கும்பகோணம் அ.தி.மு.க. நகரச் செயலாளர் ஏதோ தேர்தலுக்கு வாக்கு சேகரிப்பது போல கரம் குவித்துக் கும்பிட்டபடி நின்று கொண்டிருந்தார்.

● ஜெ. பேச்சு ஜெயா தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு. மதுரை மாநகரில் பல ஏரியாக்களில் அது செயற்கையாகத் தடை செய்யப்பட்டிருந்தது. கேபிள் கனெக்‌ஷன் கட். கூட்டம் நடைபெற்ற ரிங் ரோடு பகுதியில் சாலை விளக்குகளுக்குப் பவர் கட். கூட்டம் முடிந்து செல்லும்போது அனைவரும் திண்டாடிப் போயினர்.

● ''மதுரை சித்திரைத் திருவிழாவுக்குக் கூடுற கூட்டத்தைக் காட்டிலும் இது பத்து மடங்கு ஜாஸ்தி. இந்தக் கூட்டத்தைக் கேள்விப்பட்டு எங்க மது ரையே(?) மிரண்டு போயிருக்குனா பார்த்துக்கங்க!'' என்றார் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் மதுரை இளவட்டம் ஒருவர்.

தொகுப்பும் சித்திரங்களும்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஏழைகளின் எழுச்சி!



● ராணி



● இந்திரா



● அருண்



● பாண்டியன்


கல்கி ஷோகேஸ்

தாரா ஜுவல்லர்ஸ்



தாரா வினோத்

நெற்றிச்சுட்டி, தலை சாமான்கள், கழுத்தை ஒட்டிய சோக்கர், நீண்ட அடுக்கடுக்கான செயின்கள், ஜிமிக்கி, மூக்குத்தி, நத்து, கைவங்கி, வளையல்கள், ஒட்டியாணம், கால் கொலுசு... இத்தியாதி... என்று மொத்தம் 18 ஆபரணங்கள்! குந்தன் கற்கள் பதித்து, மணமகளை ஜொலிக்கச் செய்யும் இந்த ஆபரணங்களை செட்டாக விற்பனை செய்கிறார்கள் சென்னையில் உள்ள தாரா ஜுவல்லரி கடையில்...



●வெள்ளி நகைகளில் வெள்ளை ஃபினிஷ், கோல்ட் ஃபினிஷ் என்று இரண்டு விதங்களில் செய்யும் நகைகளுக்கும், 'கடா' டைப் வளையல்களுக்கும் நல்ல டிமாண்ட் இருக்கிறது.

●அந்தக் காலத்துத் தண்டை அதே பழைய மோஸ்தரில், ஆனால் புது செட்-அப்புடன் குந்தன் போல்கி கற்கள் பதித்து, மனசை அள்ளுகிறது.

●லட்சக்கணக்கில் செலவு செய்து வாங்கிய வைர நெக்லஸ், க்யூபிக் ஸிர்கோன் கற்கள் பதித்து 1 கிராம் தங்கத்தில் செய்த அழகிய நெக்லஸிடம் தோற்றுதான் போகிறது.



பட்டுக்கு பதில் தங்கம்

''கல்யாணத்தன்று மட்டும் கிராண்டாக இருக்கணும். எப்பவும் இப்படி கிராண்டா டிரெஸ் பண்ண பிடிக்காது'' என்று சொல்கிறவர்களுக்காகவே இந்த அற்புதமான மணமகள் செட். (விலை பன்னிரண்டாயிரம் ரூபாயிலிருந்து நம் தேவைக்கேற்ப) வெள்ளை குந்தன், போல்கி கற்கள் பதித்து கோல்டு ப்ளேடிங் செய்தால் எந்தக் கலர் புடைவைக்கும் பொருந்தும் என்றாலும், குந்தன் கற்களுக்குப் பதில் வேறு கற்களையும் பயன்படுத்திச் செய்து தருகிறோம். ஒரு மாத அவகாசம் மட்டும் தேவை'' என்கிறார் உரிமையாளர் தாரா வினோத்.



●கொஞ்சம் டல்-லுக் தரும் விக்டோரியன் நகைகள், டிசைனர் புடைவைகளுக்கு ஏற்ற சம்கி டிசைன் தோடுகள், மாற்றி மாற்றி அணியக்கூடிய பாலி டைப் காது தொங்கட்டான்கள்... ஆஹா! அனைத்தும் புதுமையோ புதுமை!

●பழைய பட்டுப் புடைவைகள் மாற்றி, உங்களுக்குப் பிடித்த 1 கிராம் நகையையும் எடுத்துக்கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு:
தாரா ஜுவல்லரி, சென்னை. தொலைபேசி: 044-2464 1799
Website: tarasjewellery.com



குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா
நினைவுச்
சிறுகதைப் போட்டி
முடிவு

★ வெள்ளை நாரை!

★ டீசலுக்கு மாற்று!

மனசெல்லாம் மத்தாப்பூ!

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

நவம்பர் 2010 விலை ரூ 8/-

தென்தமிழகத்துக்கே உரிய இரத்தமும் வெக்கையும்தான் கதை. விடிஞ்சா வன்முறை, இருட்டுனா கலவரம்னு திரியும் ஒருவனுக்குள் பொசுக்குன்னு ஒரு பூ பூத்தா, பயபுள்ளக்குள்ள கிறுக்குப் புடிக்குமுள்ள; அதுதான் அடிநாதம். கூடவே சாதிக்காக வரிந்துகட்டும் வன்முறையும் சேர்ந்துகொள்ள, மண் மணம் மணக்க மணக்கப் படத்தைத் தந்திருக்கிறார் அறிமுக இயக்குநர் ஆசைத்தம்பி. வெட்டுக் குத்து இரத்தம் சைட் டிராக்! ஹீரோ தயா புதுமுகம். எனினும் கூச்சம் நாச்சமில்லாமல் நடித்திருக்கிறார். எந்நேரமும் இறுகியமுகம். இடுக்கிய கண்ணோடு தெரியும் அவரது தெனாவட்டு ஊர்க்காரர்களுக்கே உரியது. காதல் வந்தபிறகு விடைத்துக் கொள்ளும் அவரது கோபம் கல்லுக்குள் ஈரம். கதைக்கு ஏற்ற ஹீரோயின் தாமரை. சன்னமாக ஆரம்பிக்கும் இவரது நடிப்பு மெல்ல மெல்ல சூடுபிடித்து ஹீரோவைத் திருத்தும் கட்டத்தில் சந்நதமாடுகிறது.



தாம் அனுபவமுள்ள நடிகன் என்பதைப் படம் முழுக்க நிரூபிக்கிறார் ராஜேஷ். மகனுக்காக ஏங்குவதிலும் அவனுக்காக வெடிப்பதிலும் அத்தனை கச்சிதம்.

தயாரிப்பாளர் திரவிய பாண்டியனுக்கும் இந்தப் படத்தில் மிக முக்கியமான கேரக்டர். 'முதுகுல கூட்டு கோழையாக்கலாம்னு நினைச்சியா, நெஞ்சுல சுடுய்யா'ன்னு நிமிர்ந்து நிற்கிறபோது அவரது கேரக்டரும் நிமிர்கிறது.

கஞ்சா கருப்பு, ஷகிலா ஜோடியின் ஆட்டத்தில் ஏகத்துக்கும் கலகலப்பு. தெக்கத்திக் கிராமத்தைக் கண்முன் நிறுத்தும் பிரேம் சங்கரின் ஒளிப்பதிவும், முணுமுணுக்க வைக்கிற ஜீவராஜாவின் இசையும் தித்திப்பான பங்களிப்பு. சாதியைத் தாங்கிப் பிடிக்கிற கதைதான் நெருடல்.

- மகிமைராஜன்

கல்கி ஷோகேஸ்

டோபாஸ் பேங்கிள்ஸ்



வளையல்களுக்கென்றே பிரத்யேகமான கடையாக பாண்டிபஜாரில் இருக்கிறது டோபாஸ். மக்கள் கூட்டம் பொங்கி வழிய, வாடிக்கையாளர்களிடம் பேசிக் கொண்டிருந்த அனுராதாவிடம் பேச்சு கொடுத்தோம்:

முகூர்த்த வளையல், ஃபேஷன் வளையல், காஷுவல் வளையல் என்று ரக வாரியாய்ப் பிரித்து வைத்திருக்கிறீர்களே?

கண்டிப்பாக. முகூர்த்தம், சீமந்தம் அன்று கண்ணாடி, ஃபேன்சி கண்ணாடி வளையல்கள். ஃபேஷனுக்கு ஸ்டோன், குந்தன், மிர்ரர் வொர்க் வளையல்கள். காஷுவலுக்கு வுட், பிளாஸ்டிக், மெட்டல் வளையல்கள் என்று பிரித்து வைத்திருக்கிறோம்.

டோபாஸ் தொடக்கம், வளையல் கலெக்ஷன்ஸ், லேட்டஸ்ட் டிசைன் அனைத்தும் உங்களது ஐடியாக்களா?

ஆமாம். பொதுவாவே ஃபேன்சி ஸ்டோர்லதான் கிளிப்ஸ், ஸ்டிக்கர்ஸ், ஹேர் கிளிப்ஸ், வளையல்னு வாங்க முடியும். வளையலுக்குத் தனியா கடைகள் கிடையாது. அதனால தான் டோபாஸ் தொடங்கினேன். வளையல் கலெக்ஷன்ஸ்க்கு நானே நேரில் போவேன். கண்ணாடி வளையல் வாங்க ஆக்ராவில் இருக்கும் செரோஸா பாத், லாக் வளையலுக்கு ஜெய்ப்பூர். ஃபேன்சி வளையலுக்கு தில்லினு போய் வாங்கிட்டு வருவேன்.



மிக்ஸ் அண்ட் மேட்ச்...



வளையல் தரமானதா பாத்து வாங்க, பாதுகாப்பா வெச்சுக்க என்ன செய்யணும்?

வளையலை அழுத்திப் பார்க்கும் போது அழுந்தக்கூடாது. வளையலில் இருக்கிற கலர் கைல ஒட்டாம இருக்கணும். கலரும் போகாம இருக்கணும். அப்படி இருந்தா அது தரமான வளையல். அப்புறம் வளையலைத் தண்ணிப்படாம துடைச்சுப் பெட்டியில்தான் வைக்கணும்.

டோபாஸ் ஸ்பெஷல் வளையல் என்ன?

எங்க ஸ்பெஷலே மிக்ஸ் அண்ட் மேட்ச்தான். என்ன கலர்ல, என்ன டிசைன்ல நீங்க டிரஸ் கொண்டுவந்தாலும் அந்த கலருக்கும், டிசைனுக்கும் ஏத்த மாதிரி வளையலை வாங்கிக்கலாம். குட்டீஸ்லேர்ந்து சீனியர் வரைக்கும் எல்லா டிசைனும் கிடைக்கும்.

லேட்டஸ்ட் ஃபேஷன் என்ன?

எல்லோருமே வளையல் சத்தம் அதிர அதிர ஒவ்வொரு கையிலும் இரண்டு டஜன் அணியறதும், இல்ல பத்து வளையல் சேர்ந்தாப்ல பட்டையா ஒத்த வளையல் அணியறதும்தான் ஃபேஷன். என்னதான் இருந்தாலும் ஓல்டு இஸ் கோல்டு ஆச்சே... என்றபடி விடைகொடுத்தார்.

மேலும் விபரங்களுக்கு:
டோபாஸ், 36, சிவப்பிரகாசம் தெரு, பாண்டிபஜார்,
தி.நகர், சென்னை - 17. தொலைபேசி எண்: 044 - 4207 0430

மூட்டுக்கு Mood அவுட்!



ராதா நாராயணன், அண்ணா நகர்

என் அம்மாவுக்கும் சகோதரிக்கும் நீரிழிவு நோய் உள்ளது. சமீபத்தில் பரிசோதனை செய்தபோது எனக்கும் இரத்தத்தில் சர்க்கரை அளவு ஏறி இருப்பது தெரிய வந்தது. அக்குபிரெஷர் முறையில் சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியுமா?

அக்குபிரெஷர் நிபுணர் டாக்டர் ஜெ.ஜெயலட்சுமி: நம் உள்ளங்கையில்தான் உடலில் உள்ள எல்லா உறுப்புகளையும் பிரதிபலிக்கும் புள்ளிகள் இருக்கின்றன. குறிப்பாக சர்க்கரையைக் கட்டுப்படுத்தும் புள்ளிகள் உள்ளங்கை, உள்ளங்கால் மற்றும் காதுகளில் இருக்கின்றன. இதற்கு ஆங்கிலத்தில் reflexology என்று பெயர். வலது உள்ளங்கையில் சுண்டு விரலுக்குக் கீழே வலதுபுறம் இருப்பது கல்லீரல் மற்றும் பித்தப்பைக்கான புள்ளிகள். சுண்டு விரலுக்குக் கீழே இருக்கும் முதல் கோடு இதயத்தின் பிரதிபலிப்பு. அதற்குக் கீழ் இருப்பது மண்ணீரல். நடுவில் இருக்கும் புள்ளி, கணையம். இந்தப் புள்ளிகளிலும், காலை, மாலை என இரு வேளையும் 14 முறை அழுத்தம் கொடுத்து வந்தால் இரத்த ஓட்டம் சீராகி, ரத்தத்தில் இன்சுலின் சரியானபடி சுரக்க ஆரம்பிக்கும்.

ராமநாதன், வேலூர்

எனக்கு 72 வயசாகிறது. திடீரென மூட்டு வலி ஏற்பட்டுள்ளது. மூட்டுத் தேய்மானத்தால் வலி ஏற்படும் என்று நண்பர்கள் சொல்கிறார்கள். தினம் 1 மணி நேரம் நடை பயிற்சி செய்யும் எனக்கு ஏன் இப்படி மூட்டுத் தேய்மானம் வந்தது? பிசியோதெரபி உடற்பயிற்சி செய்து வந்தால் இந்தத் தேய்மானம் சரியாகி விடுமா?

பிசியோதெரபிஸ்ட் கே.லக்ஷ்மி: வயதானால் தலைமுடி எப்படி நரைத்து விடுகிறதோ அப்படித்தான் மூட்டு எலும்பில்,

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekl
ஒரு ஸ்பேஸ்

வயதாக வயதாகத் தேய்மானம் ஏற்படுகிறது. மூட்டில் தேய்மானம் ஏற்பட்டுவிட்டால் அதை முற்றிலும் சரிசெய்ய இயலாது. ஆனால், அதனால் ஏற்படக்கூடிய வலியை பிசியோதெரபிஸ்ட் சொல்லித்தரும் உடற்பயிற்சிகளைச் செய்வதன் மூலம் குறைத்துக்கொள்ள முடியும். கீழே உட்காருவது, மாடிப் படிகளில் ஏறி இறங்குவது, வேகமாக நடப்பது... போன்றவற்றைக் குறைத்துக் கொண்டால் மூட்டுத் தேய்மானத்தால் வரக்கூடிய வலி வராது. உடற்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தால், மேன்மேலும் மூட்டுத் தேய்மானம் வராமல் பார்த்துக் கொள்ளலாம். அதைப் போலவே, உடற்பயிற்சியால் இரத்த ஓட்டம் சீராகி, இரத்த ஓட்டத்தில் தடை இல்லாமல் இருக்கும். அதனால் மூட்டுவலி நிச்சயம் குறையும்.



ஜெ.ஜெயலட்சுமி



கே.லக்ஷ்மி



ரேகா ஹரிஹரன்

சுவாமி நாதன், திருப்பூர்


பற்களைப் பார்த்தே ஒருவருக்கு உள்ள உடல் கோளாறுகளையும் நோய்களையும் கண்டுபிடித்து விடலாம் என்கிறார்களே?

பல் மருத்துவர் ரேகா ஹரிஹரன் : பற்களைப் பார்த்தே பல நோய்களைக் கண்டுபிடித்து விடலாம். இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், ஹார்மோன் குறைபாடுகள் மற்றும் எபிலெப்சி நோய் உள்ளவர்களின் ஈறுகள் வீங்கி இருக்கும். பற்களுக்கு இடையே இடைவெளி, ஈறுகள் மிகவும் சிவந்து இருத்தல் என உடலில் உள்ள கோளாறுகளைப் பற்கள் அழகாகக் காட்டிக் கொடுத்துவிடும். அதைப் போலவே, உயர் இரத்த அழுத்தத்துக்காகச் சாப்பிடும் மாத்திரையின் தன்மையைப் பொறுத்து ஈறுகள் வீங்கிப் போவதற்கான வாய்ப்பு இருக்கிறது.



தொகுப்பு: **நளினி சம்பத்குமார்**

அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli என்று டைப் செய்து
ள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.



கிழவனுக்கு ஒரு போர்வை!

அந்தக் கிழவனைப் பார்க்கப் பார்க்க, என் மனம் நெகிழ்ந்தது. எண்ணெய் கண்டிராத தலை, குளித்து நிச்சயம் ஒரு மாதமாவது ஆகியிருக்கும். ஓர் அழுக்கு வேட்டியே மானம் காக்கவும், குளிர் காலத்தில் போர்வையாகவும், என்றாவது தலை குளித்தால் துண்டாகவும் பயன் பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

அவன் பக்கத்தில் ஓர் அலுமினியக் குவளை, விரிசலாக இருந்த எவர்சில்வர் பாத்திரம், அதில் மஞ்சள் பூத்த பழைய சோறு, அதைக் கடக்கும்போது அந்தக் கிழவனின் உடல்மேல் ஒரு வீச்சம். எல்லாம் சேர்ந்து குடலைப் புரட்டியது. ஆனாலும் இத்தனை வறுமையிலும், அவனுக்கு உழைத்துச் சாப்பிடவேண்டும் என்கிற நம்பிக்கை... தன்னம்பிக்கை.

ஒரு சிறிய ரம்பம், மரக்கட்டை இதுவே அவன் சொத்து.

கண்ணருகில் கொண்டு சென்று சிரத்தையாய், அந்த மரக்கட்டையை ராவி ஈருளி செய்யும் சாதுரியம் என்னை வியக்க வைத்தது.

இதில் இவன் என்ன சம்பாதித்து எதைச் சாப்பிட முடியும்?

இதில் பேரம் பேசும் சிலரைப் பார்த்தால் என்னுள் எரிச்சல்தான் தோன்றும்.

ஆனாலும், அவன் மனம் தளராமல் ஈருளி செய்து கொண்டேயிருப்பான்.

இன்று என் மனத்தில் உறுதியாய் ஒன்று தோன்றியது. வீட்டில் ஐந்து கம்பளிகள். அதுதவிர, நிறையப் போர்வைகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு போர்வையைக் கொடுத்தால் நல்லதென்று நினைத்தேன்.

பக்கத்தில் இருந்த வாழைப்பழக் கடையில் ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்கினேன். அப்படியே அதில் இரண்டு பிய்த்து அவனிடம் கொடுத்தேன்.

இடுங்கிய கண்களில் என்னைக் கூர்ந்து நோக்கினான்.

''என்ன சாமி... எதுக்குப் பழம்...?'' என்றான்.

''சாப்பிடுங்க... தாத்தா...'' என்றேன்.

பையைக் குடைந்தான். வெளியில் ஒரு கட்டைச் சீப்பு.

''இந்தாங்க... இது கொய்யாக் கட்டைல செஞ்சதுதான்... ஆனாலும் நல்லா பேன் எடுக்கும்'' என்று சொல்லி பேன் சீப்பை நீட்டினான்.

''வேணாம்... பெரியவரே! இது என்ன பண்டமாத்தா?'' என்றதும் அக்கிழவன் குறும்பாய்ச் சிரித்தான்.

''இல்லை... சாமி... நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது. நான் யாருன்னு உங்களுக்குத் தெரியாது. நீங்க அன்பாய்ச் செய்யலாம். நான் செய்யக்கூடாதா? ஏதோ என்னால் முடிஞ்சது...'' என்று அந்தக் கிழவன் சொன்னதும் ஒரு கணம் என் உடல் சிலிர்த்தது.

வீட்டில் நுழைந்ததும் பரபரவென் பெட்ரூமில் நுழைந்தேன். அதிர்ந்தேன்.

போளூர் சி.ரகுபதி

''ஏய்... சாந்தி! இங்கே இருந்த சால்வை எங்கே...?'' என்றேன்.

''அதுவா? எங்கப்பா ரொம்ப நாளாக் கேட்டுட்டு இருந்தார்... நேத்து தான் தம்பி சால்வையைக் கொடுத்துட்டு வந்தது...'' என்றாள்.

''அது போகட்டும்... நிறையப் போர்வை இருந்ததே?''

''போங்க நீங்க. அவ்வளவும் எதுக்குன்னு யோசிச்சு நமக்கு வேண்டியதை மட்டும் வெச்சுட்டு... மிச்சத்தை மேல பரண்லே கட்டிப் போட்டேன். எதுக்கு இவ்வளவு விசாரணை?'' என்றாள்.



உனக்கு என்னைத் தெரியாது... எனக்கு உன்னைத் தெரியாது... ஆனா பாசம்தான்.

''ஒண்ணுமில்லை...'' என்றவாறு பரணைப் பார்த்தேன்.

அதில் ஏறுவது பிரம்மப் பிரயத்தனம்.

நடைவண்டியிலிருந்து தொடங்கி, உடைந்து போன ஈஸிசேர் வரை இருக்கும். காலை வைத்தால் வெண்கலக் கடையில் புகுந்த யானைதான்.

அந்தச் சாமான் குவியலில் எங்கே தேடுவது!

''உஸ்...'' என்றேன்.

''என்ன பெருமூச்சு?'' என்றாள் மனைவி.

''சாந்தி... வழியில ஒரு கிழவன்... பாவமா இருக்கு...'' சொன்னேன்.

''க்கும்... நீங்க கொடுத்துதான் விடியப் போறதா? இன்னிக்குத் தருவீங்க நாளைக்கு?'' என்று பேசி என் வாயை அடைத்துவிட்டாள்.

கம்பளியைப் பற்றிப் பேச முடியாது.

அவள் அப்பா கேட்டதற்கே 'தரமுடியாது' என்று சொல்லிவிட்டாள். வீட்டு நிர்வாகம் அவள் கையில். அவளைப் பகைத்துக் கொள்ள முடியுமா? எனக்குத் தூக்கம் வர மறுத்தது.

'நாம் சொகுசாய் இங்கு படுத்துக் கொண்டிருக்க, பாவம், அந்தக் கிழவன் மட்டும் குளிரில் நடுங்கமாட்டானா?'

''சாந்தி...தூங்கிட்டியா...?'' என்றேன், லைட்டைப் போட்டுவிட்டு.

''என்னாச்சு?'' என்றாள். சற்றே தூக்கம் கலைந்த எரிச்சலுடன்.

''மனச்சாட்சி வேண்டாமா? நாம மட்டும் ஹீட்டர் போட்டுக்கறோம். போர்வை போர்த்திட்டுத் தூங்கறோம்... அந்தக் கிழவன்...?'' என்றதும், முறைத்தாள் என் மனைவி.

''இங்க பாருங்க... அவங்க அவங்க செஞ்ச பாவப் புண்ணியத்துக்குத்தான் பலன்... நாம நல்ல ஜென்மம் எடுத்திருக்கோம்... சந்தோஷமா இருக்கோம். போவீங்களா... இங்க பாருங்க, என்னைப் போட்டுக் குழப்பாதீங்க...'' என்றாள்.

''ம்ஹூம்... தத்துவம் பேசறே...'' என்றேன்.

''பாம்பு மாத்திரை மாங்காய் சைஸ்ல இருக்கப்பவே சந்தேகப்பட்டேன்...!''

''ஏங்க என்னாச்சி...?''

''கொளுத்தினா பாம்புக்குப் பதிலா 'டைனோசர்' வருது பாரு!''

ஜி.சுந்தரமூர்த்தி



மறுநாள் காலையிலேயே பரணில் ஏறினேன்.

அரைமணி நேரம் முனைந்து போர்வையை எடுத்தேவிட்டேன்.

''உங்களுக்குக் கழண்டுதான் போச்சு...'' என்று கேலி பேசிய என் மனைவியைப் பொருட்படுத்தாமல் கிளம்பினேன்.

அந்தக் கிழவனை என் கண்கள் தேட, தூரத்தில் ஒரு கூட்டம்...

''கிழவன் மண்டையைப் போட்டிருப்பானோ...? சே... தானம் கொடுத்தா ஒழுங்கா கொடுக்கணும்...'' முணுமுணுத்தவனாய் நகர்ந்தேன்.

நல்ல வேளையாய்க் கிழவன் உயிருடன் இருந்தான். போர்வையை அவனிடம் நீட்டினேன். ஏதும் பேசாமல் வாங்கிக் கொண்டான்.

கேட்காமல் கொடுத்ததால், மதிப்பு இல்லையோ எனத் தோன்றினாலும், அந்தப் போர்வையைக் கிழவன் போர்த்திக் கொண்டதும் நிம்மதியுடன் ஒரு சிறு பெருமையும் இருக்கத்தான் செய்தது.

நான் வீட்டுக்கு வந்தேன்.

''ஹப்பா... கொடுத்தாச்சா...? இல்லாட்டி, மண்டை வெடிச்சுடுமே... தாராளப் பிரபுவுக்கு...'' என்றாள் என் மனைவி, வழக்கமான இடக்குடன்.

''சரி... சரி... ஆபீஸ் கிளம்பணும்... சாப்பாடு ரெடியா...?'' என்றேன்.

ஆபீஸ் போகும்போதும் அங்கே, அதே கூட்டம் நின்றிருந்தது.

''என்னங்க... அங்கே கூட்டம்?'' என்றேன்.

''தெரியாதுங்களா...? யாரோ ஒரு பொம்பளைப் பைத்தியம்... செத்துடுச்சு... எவனோ லாரிக்காரன் அடிச்சுப் போட்டுட்டான் போல...'' என்றதை அந்தக் கிழவனும் காதில் வாங்கிக் கொண்டது தெரிந்தது.

கூட்டத்தை விலக்கிவிட்டுப் பார்த்த போது, பரிதாபமாய் இருந்தது.

சிறுபெண்தான்... முக்கால் நிர்வாணமாய், அங்கங்கு துணி ஒட்டியிருந்தது. நிர்வாண உடலை வேடிக்கை பார்க்க அவ்வளவு கூட்டம்!

மனம் கனத்தது.

''சே... போங்கடா. காலிப் பசங்களா! நீங்க அக்கா, தங்கச்சிங்ககூடப் பொறக்கலை! பொண்டாட்டி இல்லை? நீங்க உங்க அம்மாவுக்குப் பிறக்கலை? வேடிக்கை பார்க்கறானுவ!'' சொன்னவன், அதே கிழவன்தான். சொன்னதோடு நில்லாமல், சற்றுமுன் நான் கொடுத்த அந்தப் போர்வையை அந்தப் பெண் மேல் போர்த்திவிட்டு, அந்த அபலைப் பெண் அருகில் அமர்ந்து அழுதான்.

அவன் உடல் குளிரில் நடுங்கியது.

''உனக்கு என்னைத் தெரியாது... எனக்கு உன்னைத் தெரியாது... ஆனா பாசம்தான்...'' அந்த வார்த்தைகள் என்னுள் எதிரொலித்தன.

இருந்தாலும், இவ்வளவு நாளாக யோசித்து, யோசித்துப் போர்வையைக் கொடுத்த நான் எங்கே? தனக்கு என்று எதுவுமில்லை என்றாலும், அடுத்தவர்களின் கஷ்டத்தைப் பொறுக்காத அவன் எங்கே?

ஒரு பாறாங்கல் நெஞ்சில் ஏறியது போல் பாரம் அழுத்தியது! ✸

"என்ன பங்கஜம்... முறுக்கு சரியாவே வர மாட்டேங்குதே...?"

"முறுக்கு மாவுக்கும், எண்ணெய்க்கும் 'கெமிஸ்ட்ரி' ஒத்து வரலேன்னு நெனைக்கறேன்."

ஜி.சுந்தரமூர்த்தி




கல்கி ஷோகேஸ்

பி.எம். சில்க்ஸ்

B.M. Silks

''பொக்கிஷமாய்ப் பாதுகாக்க வேண்டிய அந்தக் காலத்துப் பட்டுப் புடைவைகளை அலட்சியமாக எக்ஸ்சேன்ஜில் போட்டுவிட்டு ஏதோ சாதாரணப் புடைவைகளை வாங்கிக் கொண்டு போகிறார்களே...'' என்று ஆதங்கப்படுபவர் வேறு யாருமல்ல... பி.எம். சில்க்ஸ் பட்டுப் புடைவைக் கடையின் உரிமையாளர் ஏ. சந்திரசேகரன்தான்.



''பேரன், பேத்திகளிடம், இது 'பாட்டியின் கல்யாணப் புடைவ்வ' என்று காட்டி நமது நெசவுத் திறனை இளையதலைமுறைக்குச் சொல்ல வேண்டாமா?'' இவர் கேட்பது நியாயமான கேள்விதானே...!

''விசேஷ நாட்களில் மட்டும் அதுவும் சில மணி நேரம் பட்டுப்புடைவை கட்டிக்கொள்ளும் இளம்பெண்கள் அதிக வெயிட்டான புடைவைகளை விரும்புவதில்லை... லைட்வெயிட்டில், சம்கி வேலைப்பாடு போலச் செய்த டிஸைனர் கட்டியிருந்த புடைவைகளின் டிஸைனைப் பார்த்துவிட்டு, 'சரோஜா தேவி இந்தப் படத்தில் கட்டியிருக்காங்களே... அது மாதிரி...' என்று நிறைய பேர் ஆர்டர் தருகிறார்கள். ஃபாஷன் எப்போதுமே ஒரு வட்டம் தான்...'' என்கிறார்.

'நம்பகமான பட்டுத் தயாரிப்பாளர்' என்ற கௌரவம் மிக்க விருதை, அப்போதைய ஜவுளித்துறை அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனிடம் இருந்து பெற்றிருக்கிறார் ஏ. சந்திரசேகரன்.

20 வருடங்களுக்கும் மேலாக, மைலாப்பூர் வடக்கு மாட வீதியில் பிரபலமாகியிருக்கும் இவரது பட்டுப் புடைவைக் கடைக்கு வெளிநாட்டுப் பெண்களும் நிறைய வருகிறார்களாம். புடைவை வாங்கி இங்கேயே, கடையில்

ஃபாரினர்ஸை ஈர்க்கும் பட்டு!

புடைவைகளுக்குத் தான் வரவேற்பு...''

400 ரூபாயிலிருந்து 40,000 ரூபாய் வரை இவரிடம் டிஸைனர் புடைவைகள் உண்டு...

''உங்க டிஸைன்கள் அட்டகாசமா இருக்கே!'' என்றால்

''இரகசியத்தைச் சொல்லட்டுமா...?, ''40 வருஷம் முன்னால் இருந்த புடைவைகளின் டிஸைன்கள்தான் இப்போது பிரபலமாகி வருகின்றன. அந்தக் கால கறுப்பு வெள்ளைப் பட கதாநாயகிகள் பணியாற்றும் பெண்களின் உதவியோடு அதைக் கட்டிக் கொண்டும் செல்வார்களாம்! பாவாடை, சட்டை, தாவணி கொஞ்சம் கொஞ்சமாய் இளம் பெண்களிடம் பிரபலமாகி வருகிறது என்று சொல்லும் இவர், சிறு குழந்தைகளுக்கு அழகழகான வேலைப்பாடுகள் நிறைந்த ரெடிமேட் பட்டுப் பாவாடை சட்டைகளும் விற்பனை செய்கிறார்.

- பத்மினி பட்டாபிராமன்

மேலும் விவரங்களுக்கு: **B.M. சில்க் சாரீஸ், No:9, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை - 4**
2461 2799/2464 2799

கல்கி தீபாவளி மலர் 2010




ஆழ்வார்களும் தமிழும்

- வேளுக்குடி கிருஷ்ணன் சுவாமிகள்



தில்லை அம்பல நடராசா

- சுகி.சிவம் அட்டைப்பட கட்டுரை



கோபுலு, மாருதி,

மணியம் செல்வன், வேதா

ஓவியங்களுடன்...



- நடிகைகள் கனவுக்கன்னியாக இருந்தா போதும்!?

- மதன் சினிமா பார்வை

விலை ரூ.120 மட்டும்

உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்யுங்கள் அல்லது கூரியர் மூலம் பெற ரூ.30/- சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்: விற்பனை மேலாளர் கல்கி தீபாவளி மலர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 600 032. தொடர்புக்கு : 044-4343 8844

தயக்கம், கூச்சம் வேண்டாம்!




✱ டாக்டர் கார்த்திக்

சிறுநீர்க் கசிவு ஒரு பிரச்னை இல்லை என்ற செய்தியை மக்களிடையே பரப்ப, அக்டோபர் 4ஆம் தேதி சென்னை வால்டாக்ஸ் சாலையில் ஒரு மனிதச் சங்கிலி நடைபெற்றது. எழுநூறுக்கும் மேற்பட்டோர் பங்கு பெற்ற இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது குணா அஸோசியேட்ஸ். Guna Associates in Urogynecology and Research for Incontinence (GAURI). அதன் தலைவரும் மகளிர் - சிறுநீரியல் அறுவைச் சிகிச்சை நிபுணருமான டாக்டர் கார்த்திக் குணசேகரனிடம் பேசினோம்:

''65 வயதுக்கு மேற்பட்ட பத்தில் ஒருவருக்கு சிறுநீர்க் கசிவுப் பிரச்னை இருக்கிறது. அதுவும் 85 சதவிகிதம் பெண்கள்தாம். தயக்கம், கூச்சம் காரணமாக பெண்கள் மிகத் தாமதமாக டாக்டரிடம் செல்கின்றனர். இந்தக் குறைபாடு சுகப்பிரசவமான பெண்களுக்கு, வயதானவர்களுக்கு, ஆஸ்துமா, மலச்சிக்கல் உள்ள பெண்களுக்கு, 35 வயதுக்கு மேலானவர்களுக்கு, குண்டான பெண்களுக்கு, மெனோபாஸ் பிரச்னை உள்ளவர்களுக்கு, கருப்பை அகற்றப்பட்டவர்களுக்கு, சிறுநீர் பையில் துவாரம் ஏற்பட்டவர்களுக்கும் வர வாய்ப்பு உண்டு'' என்கிற கார்த்தி, ''இவர்களுக்கு எல்லாம் கட்டாயம் வரும் என்பதில்லை'' என்கிறார்.

''சிறுநீர்க் கசிவுக்கு முதல் காரணம், தசைகளின் தளர்ச்சியே. இதனால்கூட கட்டுப்படுத்த முடியாமல் சிறுநீர்க் கசியலாம். சிரித்தால், இருமினால், தும்மினால், அதிக எடை உள்ள பொருட்களைத் தூக்கினால் பெண்களுக்குச் சிறுநீர்க் கசிவது பல நூற்றாண்டுப் பிரச்னைதான். இந்தப் பிரச்னைக்கு, சிகிச்சை மிக அண்மை காலம் வரை இல்லாமல் இருந்தது. ஆனால், இதை இப்போது முழுமையாக நீக்கிவிடலாம்.

பிரச்னையின் தீவிரம் பொறுத்து சிகிச்சை மாறுபடும். பழக்கவழக்கங்களில் கட்டுப்பாடுதான் சிகிச்சையின் முதல்படி. சிறுநீர்க் கசிவுப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்றால்- Sling operation என்கிற அறுவை சிகிச்சை மூலம் குணம் பெறலாம்.

''இந்த ஆபரேஷனை செய்து கொண்டு உடனே வீட்டுக்குச் சென்றுவிடலாம். இந்தச் சிகிச்சைக்குப் பதிலாக இன்னொரு முறையில் லேப்ராஸ்கோபிக் மூலம் Laproscope Burch ஆபரேஷனும் செய்து கொள்ளலாம். இச்சிகிச்சையும் நிரந்தரத் தீர்வாகும். இப்பிரச்னையை வயதானால் வருகிற சாதாரணப் பிரச்னை என்று நினைத்துக் கொண்டு மன உளைச்சல் அடையாமல் டாக்டரிடம் சென்று பார்ப்பது நல்லது'' என்றார் டாக்டர் கார்த்திக் குணசேகரன்.

- ஞானம்

அஞ்சலி

அம்மாயீ!

சமீபத்தில் மறைந்த தமது பாட்டி திருமதி சௌந்தரா கைலாசம் பற்றிச் சொல்கிறார் பேரன் கார்த்தி சிதம்பரம்...



பாட்டியை அம்மாயி என்றுதான் கூப்பிடுவோம். நான் முதன் முதலாக ஓர் அரசியல் மேடையில் ஏறுவதற்கு என்னைத் தயார்படுத்தியவர் அம்மாயிதான். 1977ஆம் வருட சட்டமன்றத் தேர்தலில் அப்பா காரைக்குடி தொகுதியில் போட்டியிட்டார். அப்போது காங்கிரஸுக்குத் தேர்தல் சின்னம் பசுவும் கன்றும். எனக்கு ஆறு வயது. 'வீட்டுக்கு அழகு பசுவும் கன்றும்; நாட்டுக்கு நல்லது பசுவும் கன்றும்' என்று தொடங்கி ஆறுவரி கவிதை எழுதிக் கொடுத்தார் அம்மாயீ. அந்தக் கவிதையை மனப்பாடம் செய்துகொண்டேன். பல பிரசார மேடையில் அம்மாயீ எழுதிக் கொடுத்த பாட்டைப் பாடி அப்பாவுக்குப் பிரசாரம் செய்தேன்.

அம்மாயி நல்ல கவிஞர் மட்டுமல்ல; சிறந்த பேச்சாளரும்கூட. கிராமத்தில் பிறந்து ஒன்பதாம் வகுப்புவரை மட்டுமே கல்வி பயின்றவர். ஆனால் பிற்காலத்தில் நகர வாழ்க்கையின் இயந்திரத்தனம் அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை. சக மனிதர்களை நேசிக்க வேண்டும்; அன்பு காட்ட வேண்டுமென்பது அவரது அடிப்படை பண்பாக இருந்தது. ஒருமுறை கண்ணதாசன் ஏதோ விரக்தியில் இனி மனிதர்களைப் பாட மாட்டேன் என்று கவிதை எழுதி விட்டார். உடனே அம்மாயீ மனிதர்களிடம் உள்ள உயர்ந்த பண்புகளை விவரித்து 'மனிதர்களைப் பாடுவேன்' என்று பதில் கவிதை எழுதினார். கண்ணதாசன் நெகிழ்ந்து போனார்.


கார்த்தி சிதம்பரம்

தமிழ்நாட்டில் ஒரு விசித்திரமான சூழல் நிலவுகிறது. தமிழுக்கும் சமயத்துக்கும் தொடர்பே இல்லை என்பது போல் சிலர் எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள். ஆனால், அம்மாயீ, ''சமயத்தையும் தமிழையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. சமயத்தைத் தெரிந்துகொள்ள தமிழும், தமிழைப் புரிந்துகொள்ள சமயமும் உதவுகின்றன'' என்பதைத் தமது கவிதையிலும் பேசும் மேடைகளிலும் அழுத்தமாகவே சொல்லுவார். கேட்பவர் கவனம் சிதறாதபடி தம் பேச்சில் கட்டிப் போடும் திறமை அம்மாயீக்கு இருந்தது. புதிதாகக் கவிதை எழுதுகிறவர்களை நன்கு உற்சாகப்படுத்துவார். அம்மாயீக்குப் பிடித்த கடவுள் முருகன். மரபுக் கவிதைகளில் முருகனைக் குறித்து நிறையப் பாடல்கள் எழுதியிருக்கிறார். நான் எங்காவது ஊர்களுக்குப் போனால் அங்கிருக்கும் கோயில்களுக்கும் போய் வருவேன். அந்தக் கோயில் பற்றி ருசிகரமான புராண வரலாற்று விவரங்களைச் சொல்லுவார்.

அம்மாயீயின் பாதிப்போ என்னவோ அம்மாவும் சிறு சிறு கவிதைகள் எழுதுவார்.

- பேசும்போதே வார்த்தைகள் பனிக்கின்றன கார்த்திக்கு.

- ப்ரியன்

காலை எழுந்தவுடன் சிரிப்பு!

17

ஊர்வசி

நாகாசாமியும் நானும்!

லாலேட்டன் என்கிற மோகன்லாலின் விசேஷ குணம் பழைமையைத் தேடி அலைவதும் அதைச் சேகரிப்பதும்தான். யார்யாரிடமோ கெஞ்சிக் கூத்தாடி, அதிகப் பணம் கொடுத்து வாங்கிய பழைய பொருட்கள் அவர் வீட்டை அலங்கரிக்கும். அவர் வீடு ஓர் அருங் காட்சியகம்.

என்கிட்டக்கூட கேட்டாரு, ''பழைமையான பொருள் ஆதாரத்தோட இருந்தாச் சொல்லு. வாங்கிக்கிறேன்னு.'' நானும் சொன்னேன்: ''இருக்கு லாலேட்டன். ஒண்ணே ஒண்ணு இருக்கு. ஆதாரம்கூட வெச்சிருக்கேன்'' என்றேன். ''அப்படியா எப்போ வரட்டும்... எவ்வளவு கொடுக்கணும்?''னு கேட்டார். ''ஆனா இது எங்க குடும்பச் சொத்து. உயிர் இருக்கு. உயிர் போன பின்னாலும் எங்க நலனில் அக்கறை கொண்டு எங்களையே சுத்தி வரும். அது என் அப்பாவின் அம்மா - வயசு 90'' என்றேன். அவர் அமைதியாயிட்டார்.

நான் சொன்னது உண்மை தானே? நம்ம தாத்தா, பாட்டி, அப்பா, அம்மாவைவிட உயர்ந்த பழைமையான உன்னதமான விஷயம் ஏதேனும் உண்டா என்ன? அதைப் பத்திரப்படுத்தி, கௌரவப் படுத்தி, சந்தோஷப்படுத்தினால் ஜென்ம ஜென்மத்துக்கும் நம்ம வீடு அருங்காட்சியகம் தானே?



தமிழ்மணவாளனின் கடவுள் அபிமானம்னு ஒரு கவிதை... ஒருத்தி விதவிதமான பண்டிகை கொண்டாடுவா... கிருஷ்ணரைக் கூப்பிடுவா... விநாயகர் சதுர்த்திக்கு விநாயகரை, கொலு வெச்சி எல்லா அம்மன் சாமிகளையும் படியில வர வெச்சுடுவா. தீபாவளி, ஏகாதசின்னு ஜமாய்ப்பா. கடைசியில

கவிதை இப்படி முடியும்...

அவளின் கடவுளபிமானத்தால்/ எல்லாச் சாமிகளும் இல்லம் வந்தன/ கடைசிவரை /அவளின் மாமனார் அப்பாசாமி மட்டும்/ இல்லம் வராமலேயே இறந்து போனார்/ முதியோர் காப்பகத்தில்! எந்த வீட்டிலேயும் இந்த வரிகள் பலிக்கக்கூடாது என்பதுதான் நம்ம பிரார்த்தனையா இருக்கணும். சரிதானே?



நானும் பழைமையான, புராதனமான விஷயங்களை விரும்புகிறவள்தான். அது கொஞ்சம் வேற மாதிரி. திருவக்கரையிலுள்ள வக்கிரக் காளியம்மன் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அது ரொம்பப் பழையது. கோயில் அமைப்பே வக்கிரம்தான். ஒழுங்கா இருக்காது. சாமியகூட 5 முறை வலப்பக்கமா பிரதட்சணம் செய்துட்டு அப்புறம் 5 முறை இடப்பக்கமா பிரதட்சணம் செய்யணும். அம்மன் காதுல ஒரு குழந்தை தொங்கும். இந்தக் கோயிலுக்கு நான் அடிக்கடி போயிடுவேன். வக்கிரக் காளியம்மனின் வெவ்வேறு வடிவங்கள் தானே நாமெல்லாம்.




நமக்கு க்ஷேத்திரங்கள்தான் கடவுள். வடக்கே இருக்கிறவங்களுக்குத் தீர்த்தங்கள் தான் கடவுள். என் மூதாதையர்க்குப் பிதுர் பூஜை செய்ய ஆசைப்பட்டேன். 'சுராபிஷேகம்'ன்னு ஒரு தெலுங்குப் படம். அந்த ஷூட்டிங் காசியில நடந்தது. கங்கா ஸ்நானம் செய்யணும். நூற்றுக்கணக்கானவர்களின் முன்னால் எப்படித் தண்ணியில முங்கி எழுந்திருப்பது? உடல் தெரியாதபடி நல்ல டிரஸ் போட்டுக்கிட்டேன். வெந்நீரிலே ஊறின உடம்பு ஐஸ் வாட்டர் மாதிரி ஓடுற தண்ணீரில் எப்படிக் குளிப்பது? காக்கா மாதிரி கரையில நின்னு தலையிலே தண்ணி தெளிச்சிக்கலாமா? ஆங்காங்கே பாத்ரூம் மாதிரி கட்டி கங்கைத் தண்ணிய குழாயில ஷிப்ட் பண்ணலாம் கரையோரம். அரசாங்கத்துக்குத் தெரிய மாட்டேங்குது. விஞ்ஞான புத்தி விபரீதமா யோசிச்சது.

அக்டோபர் மாத பட்டுப் புடைவைகளைப் பரிசாக வழங்குவோர்:

கங்கைக்குப் போனேன். கரை முழுதும் கடைகள்... ஜனங்கள்... ஜனங்கள்... ஆண்கள் கூட்டமும் அதிகம்.

எனக்கு முன் அழகான என்னைவிட அழகான ஒரு யுவதி கங்கையில் முங்கி எழுந்தாள். கங்கை அவள் உடலைக் கழுவி, ஆடையோடு ஒட்டி இன்னும் அவளை அழகாக்கியது. பக்கத்தில் ஆடவர்கள்.



"குளிக்கிறதை காமெடியன் எட்டிப் பார்த்தா சிரிப்பு. ஹீரோ எட்டிப் பார்த்தா லவ். வில்லன் எட்டிப் பார்த்தா ஃபைட். ஆனா, கங்கைக்கு எல்லாரும் ஒன்னுதான்!"

அவள் எதிரே கடைக்கார ஆண்கள். சினிமா கேமரா மாதிரி அங்குள்ள ஆண்களையே என் கண் ஜூம் போட்டுப் பார்த்தது. ஒருவரும் அவளை, அவள் அழகை, அவள் குளியலைச் சத்தியமாகப் பார்க்கலை. ரொம்ப ஆச்சரியம் எனக்கு! அவளையடுத்து 'இன்னும் என்ன எப்பத்தான் கூப்பிடப் போறானோன்னு' இந்தியில சொல்லியபடி சற்று சாதாரணமா இருந்த ஒருத்தி கங்கையில் மூழ்கி எழுந்தாள். ரொம்ப வெட்கமா போயிடுச்சு. ஆண்கள் மீது ஒரு மதிப்பும் கங்கை மீது ஒரு பக்தியும் திடீர்னு வந்துடுச்சு.

சினிமாவில் குளிக்கிறதைக் காமெடியன் எட்டிப் பார்த்தால் சிரிப்பு. ஹீரோ எட்டிப் பார்த்தால் லவ், வில்லை எட்டிப் பார்த்தால் ஃபைட்டு. அட நெஜ வாழ்க்கையில எட்டிப் பார்த்ததுல கலவரமே கூட நடந்திருக்கு. இங்கே இறைவனின் குழந்தைகள் குளிப்பதைப்போல அல்லது குழந்தைகளை கங்கைத் தாய் குளிப்பாட்டுவதைப் போல உணர்ந்தேன்.

இந்தக் கங்கை எவ்வளவு பழசு? இந்தியாவின் புராதனச் சொத்து. சலிக்காமல் எத்தனை யுகங்கள் இந்தக் குழந்தைகளைக் குளிப்பாட்டுது. நானும் மூழ்கி எழுந்தேன். என் அருகே பிணங்களைத் தின்பதாகச் சொல்லப்படும் ஒரு நாகா சாமியும் மூங்கி எழுந்தார். கங்கைக்கு இருவரும் ஒன்றுதான். வாழ்நாளில் அந்த இறையனுபவம் பொருந்திய கங்கையில் நீங்களும் ஒருமுறை போய் வாங்க.

அங்கே போனால் எதையாவது விடணும்னு சொல்லுவாங்க. நானும் விட்டுட்டேன். ஆண்கள் மீதான ஒரு குற்றச் சாட்டை விட்டேன்! அவங்க எப்பவும் பெண்களைப் போகப் பொருளாகப் பார்ப்பவர்கள் என்ற எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டு என் இந்திய ஆண்களின் மீது பெரும் மதிப்போடு திரும்பினேன்.

(அடுத்த வாரம் அமானுஷ்யம்...)

ஊர்வசி போட்டி சில்கி சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க.... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

அக்டோபர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **09.11.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

....................பின்கோடு:....................

தொலைபேசி : ....


இ-மெயில் : ....

அக்டோபர் - 31

வக்கிரக்காளியம்மன் இருக்கும் இடம்?

விடையை டிக் செய்யவும்

- ☐ பாண்டிபஜார்
- ☐ திருவாதிரை
- ☐ திருவக்கரை
- ☐ கேரளா


ஒளி நிழல்களின்
ரசிகன்!







ரசனையின் உச்சத்துக்குச் செல்லும் ரசிகன் ஒருவன் படைப்பாளனாக பரிணாமம் அடைகிறான் என்பதற்கு உதாரணம் ரமேஷ் ஜாவரின் ஓவியங்கள். ''பயணங்கள் மூலம் தான் எனக்குள் இருக்கும் ஓவியனை நான் கண்டடைந்தேன். அப்போது நான் காணும் ஒளிநிழல்கள் என் தூரிகையில் வண்ணங்களாகின்றன'' என்கிற ரமேஷ், முறையாக ஓவியம் பயின்றவரில்லை. எனினும் பத்துக்கும் மேற்பட்ட ஓவியக் கண்காட்சிகள் நடத்தி தொடர்ச்சியாக இயங்கி வருகிறார். ''பெருநகரத்தின் அலைச்சலையும் மனிதக் காற்றுப் படாத பகுதியின் நிச்சலனத்தையும் ஒரு புள்ளியில் இணைப்பதே என் ஓவியப் பாணி'' என்கிற ரமேஷ், வசிப்பது ஈரோட்டில், பிறந்தது வடஇந்தியாவில். ''ஓவியத்துக்கான விருதுகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. மனநிலைக்கு விருது கொடுப்பது எந்த வகையில் பொருந்தும்'' என்கிறார் ரமேஷ் ஜாவர்.



– மகிமைராஜன்

வட்டமேஜை

101 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்த நமது இந்திய விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நன்றி, வணக்கம். 'கல்கி' ஆசிரியரின் மூக்கை உடைத்து சூர்ப்பனகையாக்கிய இந்திய வீரர்களுக்கு நன்றி!

- ரா.கிருஷ்ணஸ்வாமி, சென்னை

அண்மைகாலத் திரைப்பாடல்களுள் தராசுவை கவர்ந்த ஒவ்வொரு பாடலும் எங்களையும் கவர்ந்த மெலடி மெட்டுக்களே!

- எல்.மோகன சுந்தரி, கிருஷ்ணகிரி

பிள்ளையின் கார்ட்டூன்கள் இரண்டும் நச். சுருங்கச் சொல்லி நிறைய விளங்க வைத்தன.

- என். காளிதாஸ், சிதம்பரம்

ரூ.10,000 முதலீட்டில் சிறு தொழில் தொடங்க, 'மூலதன மந்திரம்' பகுதியில் கூறப்பட்டிருந்த பதில் நடுத்தர மக்களுக்குப் பயனுள்ள வழிகாட்டி.

- மு.மதிவாணன், அரூர்

சமுதாயப் பிரக்ஞையுடன், ஞாநி வலியுறுத்துகின்ற ஒழுக்கத்தையும் மனித நேயத்தையும் புகட்டுகின்ற ஆரம்பக் கல்வி முறை, மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு கல்வியாளர்கள் குரல் கொடுக்க வேண்டும். உள்ளத்தைச் செம்மைப்படுத்தி, நல்ல சமுதாயத்தை உருவாக்குவதுதான் கல்வியின் தலையாய பணியும் பயனுமாகும்.

- துரை.ராஜசேகரன், பொள்ளாச்சி

ஜீவானந்தத்தின் செல்லுலாய்டு கவிதை வரிகள் கல்கிக்கு வைரகிரீடம் சூட்டியது போல் ஜொலித்தன. ஜீவாவின் கேமரா



வுக்கு 'ஓ' போடலாம்!

- சராஏ. முரளி, கள்ளக்குறிச்சி

2010, கல்கி தீபாவளி மலரை ரொம்ப ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அட்டகாசமா அமர்க்களமா இருக்கட்டும். தீபாவளி மலர் மணம் வீசட்டும்...

- எம். மிக்கேல்ராஜ், சாத்தூர்

கலைஞர் குடும்பம் முன்னிறுத்தப்படுவது பற்றிய கேள்விக்கு, "தி.மு.க.வை மட்டும் இவ்விஷயத்தில் குறை கூற முடியாது. அநேகமாக எல்லாக் கட்சிகளிலும் இதே நிலைமைதான்" என்று தராசார் அளித்துள்ள பதிலில் நடுநிலைமை பளிச்சிடுகிறது என்றால்

அது மிகையல்ல. யோசிக்க வேண்டியது அனைத்துக் கட்சித் தலைவர்களும்தான்.

- எஸ். சாந்தி, காட்பாடி

உறவுகளின் தூதுவன்' குறும்பட விமர்சனத்தை விமர்சனம் என்று சொல்வதைவிட, குறும்பட அறிமுகம் என்று சொல்லலாம். அந்த வகையில் வாராவாரம் நல்ல குறும்படங்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் தூதுவன் கல்கிதான்!

- பி.ஆர். மயிலப்பன், ஈரோடு

நவீனங்களின் வரத்துக்களால் பழைமை மறக்கடிக்கப்படுவதை பகமை மிக்க கீரை விற்பனை மூலம் சத்யராஜ்குமார் சித்தரித்திருந்த சிறுகதை ராட்சஸத்தில்

பேஷா...!

மேலோங்கி நின்றது மனிதம்!

- சு.ஸ்ரீகாந்த், நெய்வேலி

செல்லுலாய்டு கவிதைகள் என்று வெளிவந்த ஜீவானந்தத்தின் கேமரா மொழிப் படங்கள் அனைத்தும் நெஞ்சைத் தொட்டன!

- ஏ.பி.எஸ். ரவீந்திரன்,
வள்ளியூர்

ஈஷா ஸ்பெஷல் வெளியிட்டு ஆதரவு தந்தமைக்கு நன்றி. லிங்க பைரவி பற்றிய கட்டுரையில் பக்கம் 79ல் 'யோகினி'க்குப் பதில் 'மோகினி' என்றும், பக்கம் 80ல் 'பைராக்கினிகள்' என்பதற்குப் பதில் 'பைரவக்கிினிகள்' என்றும் வந்துள்ளது. திருத்தி வாசிக்கவும்

- ந. பாலச்சந்திரன்,
ஈஷா யோக மையம், கோவை

'நாட்டின் முதல் வளம் என்பது மக்களின் உள்ளங்கள் குரோதமற்று இருப்பதுதான்...' என்ற தலையங்கத்தின் வரிகள்... மதத்தலைவர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் நெத்தியடி பாஸ்...!

- ஆர்.ராஜ்குமாரன்,
புன்செய்புளியம்பட்டி

ஓ பக்கங்கள் மூலம் ஞாநி கூறும் செய்திகள் வாசகர்களைக் கவர்ந்து இழுக்கின்றது-

- ரவீந்திரன், நாகர்கோவில்.



ஈஷா ஸ்பெஷலின் ஒவ்வொரு செய்தியும் ரொம்ப ரொம்ப 'பேஷா' இருந்ததுங்க.

- அ.கு.கிருஷ்ணன், புதுச்சேரி

வித்தியாசமாக நகைச்சுவைக்கு நடிகர்களைப் போட்டு அசத்திவிட்டீர்கள். அதுவும் நடிகர் வடிவேலுவுக்கு ஏற்ற நகைச்சுவை அற்புதம்.

- ரா.ராஜேஸ்வரி, மே.மாம்பலம்

‘‘ஜெயலலிதாவின் மதுரைப் பேச்சு மக்கள் ஆர்வம் காட்டாத ஒரு நீண்ட வாசிப்பு. பொறுப்பற்ற ஆத்திரம் கலந்த, ஆதாரமற்ற அவதூறான பேச்சு'' என்கிறார் தி.மு.க. அமைப்புச் செயலாளரும், பாரா ளுமன்ற உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன்.

''ஜெயலலிதா தேர்தலுக்குத் தேர்தல் மக்களிடையே தலைகாட்டுவார். 'கிடைத் தால் தமிழ்நாடு. இல்லையேல் கொட நாடு' என்பதுதான் அவரது பாலிஸி. ஆனால், கலைஞர் ஆட்சியில் இருக்கி றாரோ இல்லையோ, தொடர்ந்து தொய் வில்லாமல் மக்களைச் சந்தித்துக் கொண்டி ருப்பார். இந்த முதிய வயதிலும் சாலை வழிப் பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்திப்பது மட்டுமல்லாமல், அரசின் திட்

தொகுதியில் பல்வேறு நலப் பணிகளி ஈடுபட்டு மக்கள் செல்வாக்கை பெற்றிருப்பவர். அவர் மீது ஜெயலலித மூன்றாம் தர மேடைப் பேச்சாளர் போல குற்றச்சாட்டுகளை அள்ளிவிடுகிறார். பு னாய்வுப் பத்திரிகைகள் என்று சொல்லி கொண்டு வதந்தியைப் பரப்பும் சில ப திரிகைகளுக்கும் ஜெயலலிதா பேச்சுக்கு வித்தியாசமில்லை. அழகிரிக்கு அஞ்சா நெஞ்சன் பட்டம் கொடுத்தது யார்? என் கேட்கிறார் ஜெ. இவருக்கு அம்மா என் பட்டம் கொடுத்தது யார்?

குடும்ப ஆதிக்கக் குற்றச்சாட்டு?

கலைஞர் குடும்பத்தைப் பற்றிப் பேச துளிக்கூட இவருக்குத் தகுதியில்லை. வருட காலம் திராவிட இயக்க

‘‘கண்ணாடி வீட்டிலிருந்த





டங்கள் செயல்படுவதை யும் கண்காணித்து முடுக் கிவிடுகிறார். 2001-06 ஆண்டுகளில் எதிர்க் கட் சியாக இருந்த நாங்கள், தேர்தல் ஆண்டில் மட் டும் கூட்டங்கள் நடத்த வில்லை. அந்த ஐந்து வருட காலத்தில் பல மாவட்ட மாநாடுகளையும் நடத்தியி ருக்கிறோம்.

அழகிரி அட்டாக்!

ஜெயலலிதாவுக்கு அழ கிரி மீது ஆத்திரம் வருவதில் வியப்பில்லை. ஏனென்றால் தென் தமிழகம் முழுக்க அ.இ. அ.தி.மு.க.வை அடியோடு வீழ்த்தி வருபவர் அழகிரி. தமது

துக்காகவும் ஐந்து முறை முதல் ராக இருந்தும் தமிழகத்துக்குத் த உழைப்பைக் கலைஞர் கொடுத் ருக்கிறார். அவரைப் போலவே தளபதி ஸ்டாலினும் சுறுசுறு பாகச் செயல்பட்டுப் பல ந திட்டங்களை நிறைவேற் வருகிறார். இன்று கலைஞ அரசை இந்தியாவில் உள் நடுநிலையாளர்கள் பாராட்டு கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு 50 ரூபாயில் மளிகைப் பொருட் களை வழங்கியிருக்கிறா கலைஞர். ஒரு ரூபாய் அரிசி, காப்பீடு திட்டம், காங்கிரீட் வீடுகள் திட்டம் என்ற பல்வேறு திட்டங்களை



ம் எறியாதே!?''

...கள், கலைஞரின் ஆட்சியை மீண்டும் ...காண்டு வர முடிவு செய்துவிட்டார்கள். ...க்களின் இந்த மன நிலையை உணர்ந்த ...ஜயலலிதா, கலைஞர் குடும்பத்தைத் ...கீப்பட்ட முறையில் அட்டாக் செய்து, தமது ...ழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துகிறார். ...வர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தங்கள் ...வனுக்கு வேட்டு வைத்து விடுவார் என்று ...ரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், சிறு ...பான்மையோர் ஆகியோர் பயப்படுகிறார்கள். ...னவே, ஜெ.வின் தனிநபர் தாக்குதல் ...க்களிடையே எந்த மாற்றத்தையும் கொண்டு ...ராது.

ஊடகங்கள்!

எங்களை விமர்சிக்கும், பேச்சுக்கள் எழுத் ...க்கள் ஆகியவற்றுக்குப் பதில் சொல்ல எங் ...ளுக்குக் கட்சிப் பத்திரிகையும், மேடைகளும் ...ள்ளன. ஊடகங்களை மிரட்ட வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஜெ ஆட்சி செய்தபோது பத்திரிகைகள் மீது நூற்றுக்கணக்கில் அவதூறு வழக்குகள் போட்டு மிரட்டினாரே! மறக்க முடியுமா? 'இந்து' பத்திரிகையாளர்களைத் துரத்திக் கைது செய்ய முயன்றாரே! பல பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்களை நிறுத்தினாரே! ஊடகம் நடத்துபவர்கள் இவற்றை மறக்கமாட்டார்கள்.

சட்டம் ஒழுங்கு

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மிக நன்றாகவே பராமரிக்கப்பட்டு வருவதற்கு நல்ல உதாரணம் இவரது மதுரைக் கூட்டம் சின்ன அசம்பாவிதம் இல்லாமல் அமைதியாக நடத்தப்பட்டதுதான். சட்டம் ஒழுங்கு இவரது ஆட்சியில் எப்படி சந்தி சிரித்தது என்பதற்கு ஓர் உதாரணம், தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷன் விமான நிலையத்தை விட்டு வெளியே வரமுடியாமல் அ.தி.மு.க. வினரால் முடக்கப்பட்டது. இது போல் நிறைய சம்பவங்கள்... கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறியக் கூடாது.''

- ப்ரியன்

"என் மனைவி செல்லுல எந்த ஃபோன் வந்தாலும் அரை மணி நேரம் பேசுவா"

"இது பரவாயில்லையே! என் மனைவி செல்லுல SMS வந்தாலே எடுத்துப் பேச ஆரம்பிச்சுடுவா..."

"?!!?!?!?!?!?!?!?!?!?!"

வி.சாரதி டேச்சு





ஒருவன் அசால்டாக அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகள் பின்னாளில் அவனுக்கே எமனாக மாறுவது தான் தொட்டுப்பார் படத்தின் கதை.

காசுக்காக யாருக்கு வேண்டுமானாலும் ஜாமீன் போடும் ஹீரோ, அமைச்சரைக் கொல்லத் திட்டமிடுபவனுக்கும் அவன் பின்னணி தெரியாமல் ஜாமீன் போடும்போது மட்டும் திரைக்கதையில் வேகம் பற்றுகிறது.

ஹீரோ மகாராஜாக்குக் கிராமத்து இளைஞன் பாத்திரம். அவரும் முடிந்த மட்டும் பாத்திரத்தோடு ஒன்றியே நடிக்கிறார். எனினும் அவர்தான் ஹீரோ என்பதை நம்ப மறுக்கிறது மனம்.

கதாநாயகி லக்ஷனா. எல்லா தமிழ் ஹீரோயின்ஸ் போல வருகிறார்; போகிறார். பாத்திரம் நடிப்பு இரண்டிலும் இவருக்கு அழுத்தம் இல்லை. வில்லன் கேரக்டரில் அரவாணியாக மிரட்டும் ரமணாவுக்குப் பாராட்டுக் கைதட்டல் என்றால், அனுஹாசனுக்கும் அப்படியே...

கவிதை எழுதும் மயில்சாமி என்ன எழுதுகிறார் எனத் தெரிய வரும்போது தியேட்டர் முழுக்கக் குபீர் சிரிப்பு. இன்ஸ்பெக்டராக வரும் ஹனீபா நேர்மையில்லாத போலீஸாராக வந்து இறந்து போகிறார். இரண்டு பாடல்கள் ரசிக்கிற ரகம். பின்னணி இசையும் இதம் ஒளிப்பதிவும் எடிட்டிங்கும் இருக்கு; ஆனா இல்லை நடிகர் ஜெகனும் அப்படித்தான் நடிக்கிறார்; ஆனா நடிக்கலை.

திரைக்கதைதான் ஏற்ற இறக்கத்தோடு ரசனையைப் பதம் பார்க்கிறது. இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பும் காட்சியில் அழுத்தமும் கூட்டியிருந்தால் தொட்டுப்பார் மனத்தைத் தொட்டிருக்கும்.

- திலீபன்




கல்கி ஷோகேஸ்
தீபாவளி
சிறப்புச் சலுகை 01.11.10
முதல் 30.11.10 வரை
1 கிராம் செயின்
2 வாங்குபவர்களுக்கு
½ கிராம் செயின்
இலவசம்!
கைகளில் நேற்றும்... இன்றும்... நாளையுமான பல்சானி...!
ஒருமுறை வாருங்கள்.... புதுமையாக திரும்புங்கள்!
Temple Jewels
விலை
ரூ.1250
முதல்
ஆரம்பம்
அமெரிக்கன்
டைமண்ட்
நகைகள்
விலை
ரூ. 1000/-
முதல் ஆரம்பம்...
விலை
ரூ.800
முதல்...
1 கிராம்
தங்க முலாம்
பூசப்பட்ட
நகைகள்
அமெரிக்கன் டைமண்ட் வளையல்கள்
விலை
ரூ.1100
முதல்
ஆரம்பம்
1 gm மற்றும் American Diamond
நகை வாங்குபவர்களுக்கு மட்டும்
Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road
(Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036
SUNDAY HOLIDAY
www.sripalsanijewels.net



வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
1.50 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,11,000
சலுகை விலை
ரூ. 95,000
1.04 ct பேன்சி
வைர நெக்லஸ்
13.00 gm
தங்கத்தின் எடை
விலை
ரூ. 83,000
சலுகை விலை
ரூ. 71,000
Palsani
1.85 ct
26.00 gm
ரூ. 1,58,000
ரூ. 1,39,000
வைரத்தோடு
ஜிமிக்கியுடன் சேர்த்து
3.15cts
தங்கத்தின் எடை 20.00gm கிராம்
ரூ. 1,99,000
தள்ளுபடி விலை
ரூ. 1,67,000
0.95 ct
26.00 gm
ரூ. 1,01,000
ரூ. 91,000
ஒரு அழகிய நகை பெட்டி இலவசம்


புத்துணர்ச்சி புதும பொலிவுடன்
ALIVE! ஃபில்டர் காஃபி
இப்பொழுது சிறப்பான சலுகைகளுடன்*
Parry's
White Label
SUGAR
ALIVE!
500 g
பேக்குடன்
250 g
சர்க்கரை
இலவசம்*
FRESH & HONEST
ALIVE!
RICH FILTER COFFEE
அலைவ்! 200 g பேக்குடன் ₹ 11/- மதிப்புள்ள சேவரிட் சேமியா இலவசம்*
அலைவ்! 100 g பேக்குடன் ₹ 5 /- மதிப்புள்ள டாப் ரேமன் ஸ்மூடுல்ஸ் இலவசம்*
www.fresh-honest.com
1800-425-3330
www.facebook.com/alivecoffee

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.